



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:200 | 04-02-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி

## முதல்வர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

**சென்னை, பிப்.4:**

முன்னாள் முதல்வர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதிப்பேரணி நடைபெற்றது.

"ஆண்டுகள் எத்தனை ஆனாலும், தமிழ்நாட்டை அண்ணா தான் ஆள்கிறார்" என அவரது நினைவு நாளில் அவரை நினைவுகூர்ந்து முதல்வர் புகழாரம் சூட்டியுள்ளார்.

முன்னாள் முதல்வர் அண்ணாவின் 57 வது நினைவு நாள் இன்று தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி திமுக, அதிமுகவினர், அரசியல் கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் அவரது உருவச்சிலை, புகைப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்.

வாலாஜா சாலையில் உள்ள அண்ணாவின் திருஉருவ சிலைக்கு முதல்வர் ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அங்கிருந்து அண்ணா நினைவிடம் நோக்கி முதலமைச்சர் ஸ்டாலின்



தலைமையில் தி.மு.க.வினர் அமைதிப் பேரணி சென்றனர்.

இந்த அமைதிப் பேரணி சென்னை வாலாஜா சாலையில் உள்ள அண்ணா சிலை அருகில் இருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தைச் சென்றடைந்தது.

அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர்கள் நேரு, மா.சுப்பிரமணியன, எம். பி.க்கள் தயாநிதி மாறன், ஆர். ராசா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்கள்.

தொடர்ந்து முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நினைவிடத்திலும் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

### பா.ஜ.க.வை வெளியேற்றுவோம்

அண்ணாவின் நினைவு நாளையொட்டி முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், "பேரறிஞர் அண்ணா தமிழர்களின் மனசாட்சி! நினைவுநாளில் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் அண்ணனை நினைக்கும் நாள்தான் எங்களுக்கு!.அண்ணா சாலை, அண்ணா சிலைகள், அண்ணா மேம்பாலம், அண்ணா நூலகம், அண்ணா பேருந்து நிலையங்கள் என அண்ணா பெயர்சூட்டிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அவரே நிறைந்திருக்கும்படி செய்தது திமுக அரசு. மொழித் திணிப்பு - பண்பாட்டுத் திணிப்பு - நிதி நெருக்கடி என்றெல்லாம் வஞ்சகங்களைச் செய்துகொண்டு,



துரோகிகளையெல்லாம் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாலும், பா.ஜ.க. அரசின் ஆணவத்துக்கும் ஆதிக்கத்துக்கும் அண்ணாவின் தமிழ்நாட்டில் வெளியேற்றம்தான்! (கெட்அவுட்) ஆண்டுகள் எத்தனை ஆனாலும், தமிழ்நாட்டை அண்ணா தான் ஆள்கிறார்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

### அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில், அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.தொடர்ந்து, தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினார்கள்.

அண்ணாவின் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எடப்பாடி பழனிசாமி கறுப்பு சட்டடை அணிந்து வந்து அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் கே.பி. முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விசுவநாதன், பொன்னையன், பா.வளர்மதி, எஸ். கோகுல இந்திரா, டி.ஜெயக்குமார், ஆர்.பி.உதயகுமார், ப.மோகன், கமலக்கண்ணன்,

பா.பென்ஜமின், மற்றும் எஸ்.ஆர்.விஜயகுமார், டாக்டர் ஜெயவர்த்தன், மாவட்ட செயலாளர்கள் நா.பாலகங்கா, விருகை வி.என்.ரவி, தி.நகர் சத்யா, ஆர்.எஸ்.ராஜேஷ், ஆதி ராஜாராம், கே.பி.கந்தன், திருமங்கலம் மோகன், மாதவரம் மூர்த்தி, அலெக்சாண்டர், பி.வி. ரமணா, டி.கே.எம்.சின்னையா, அப்துல் ரஹீம், முன்னாள் எம். எல்.ஏ. கே.குப்பன், அமைப்பு செயலாளர் ராயபுரம் ஆர். மனோ,மாணவர் அணி துணை செயலாளர் ஆ.பழனி, செய்தி தொடர்பாளர் ஒய்.ஜவஹர் அலி, மாநகர போக்குவரத்து கழக அண்ணா தொழிற்சங்க மண்டல தலைவர் இ.எஸ். சதீஷ்பாபு, வேளாங்கண்ணி,

இலக்கிய அணி இணை செயலாளர் டி.சிவராஜ், வழக்கறிஞரும், ஆயிரம் விளக்கு பகுதி செயலாளருமான ஆர். சதாசிவம், வட்ட செயலாளர் கேதுளசி, வி.எஸ்.வேல் ஆதித்தன், பி.சந்தான கிருஷ்ணன், உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

## பங்குச்சந்தை 'கிடுகிடு' உயர்வு

**மும்பை, பிப்.4:**

அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பங்குச்சந்தையில் கிடுகிடு உயர்வு ஏற்பட்டுள்ளது.

இந்தியா, அமெரிக்கா இடையே நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த வர்த்தக ஒப்பந்தம் நேற்று இறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்திய பொருட்கள் மீதான வரி விதிப்பு, 50 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, தொழில் துறைக்கு அபார வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக, பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதன் காரணமாக, முதலீட்டாளர்கள் மத்தியில் புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளது. மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் இன்று காலை 3500 புள்ளிகள் (4.4 சதவீதம்) அதிகரித்தது. 50 முன்னனி நிறுவனங்களின்

பங்குகளை கொண்ட நிப்டி இன்டெக்ஸ், 4.7 சதவீதம் இன்று காலை உயர்ந்தது.

### அதானி பங்குகள் விலை

பங்குச்சந்தையில், குறிப்பாக அதானி குழும நிறுவனங்களின் பங்குகளின் விலை 13 சதவீதம் விலை அதிகரித்தது. அதானி எண்டர்பிரைசஸ், அதானி கிரீன், அதானி பவர், அதானி எனர்ஜி சோல்யுஷன்ஸ் என



அனைத்து நிறுவனங்களின் பங்குகளும் தாறுமாறாக விலை உயர்ந்து வருகின்றன.

அதேபோல, கடந்தாண்டில் சரிந்து கொண்டே வந்த இந்திய ரூபாய் மதிப்பு, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று ஒரு சதவீதம் அதிகரித்தது. இன்று காலை, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 90.29 ரூபாயாக இருந்தது.

## சட்டத்தை மதிக்க முடியாவிட்டால் இந்தியாவில் இருந்து வெளியேறுங்கள்

**புதுடெல்லி, பிப்.4:**

வாட்ஸ் அப் செயலியை இந்தியாவில் கோடிக்கணக்கானோர் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கிடையே, தனியுரிமைக் கொள்கை தொடர்பாக மெட்டா பிளாட்பார்ம்ஸ் வாட்ஸ் அப் நிறுவனங்களுக்கு இந்திய போட்டி ஆணையம் ரூ.213.14 கோடி அபராதம் விதித்தது. தனது ஆதிக்கத்தை துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து அந்த நிறுவனங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்தன.இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி சூர்யா காந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா, விபுல் எம். பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறுகையில், நமது தனிப்பட்ட தரவு விற்கப்படுவதோடு மட்டுமல்லாமல், வணிக ரீதியாகவும் சுரண்டப்படுகிறது என்றார்.வாதங்களை கேட்ட தலைமை நீதிபதி சூர்யா காந்த், மெட்டா பிளாட்பார்ம்ஸ் வாட்ஸ் அப் நிறுவனங்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார்.

அவர் கூறியதாவது:-

தனியுரிமை இந்த நாட்டில் தீவிரமாகப் பாதுகாக்கப்படுகிறது. எங்கள் அரசியலமைப்பைப் பின்பற்ற உங்களால் முடியாவிட்டால் இந்தியாவை விட்டு வெளியேறுங்கள். எந்தவொரு குடிமகனின் தனியுரிமையும் சமரசம் செய்யப்படுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தொழில்நுட்ப நிறுவனங்களின் தனியுரிமை விதிமுறைகள் குடிமக்களுக்குப் புரியாத வகையில் மிகவும் தந்திரமாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்றார்.

## பிப். 14ல் வாக்குச்சாவடி ஊழியர்களை சந்திக்கிறார் பிரதமர் மோடி!

**புதுடெல்லி, பிப்.4:**

பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி 14-ல் அசாம் பயணம் மேற்கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அசாமில் இந்தாண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பாஜக 100 இடங்களை வெல்ல வேண்டும் என்ற லட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளது. அந்தவகையில் தனது நிலையை மேலும் வலுத்தப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

இந்த உத்தியின் ஒரு பகுதியாகப் பிரதமர் நரேந்திர மோடி பிப். 14 அன்று குவாஹாட்டிக்குப் பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் அசாம் முழுவதிலும் இருந்து வாக்குச்சாவடி நிலை ஊழியர்கள் பங்கேற்கும் மாபெரும் மாநாட்டில் அவர் உரையாற்றுகிறார். இந்த மாநாட்டில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வாக்குச்சாவடி நிலை ஊழியர்கள் பங்கேற்க உள்ளனர். இது கட்சியின் வலுவான அடிமட்டத்தை எடுத்துக்காட்டுகிறது.

கூடுதலாக, பிப். 21 அன்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அசாம் செல்லவுள்ளார். அவரது வருகையின்போது, உள்துறை அமைச்சர் முக்கிய அமைப்புரீதியான கூட்டங்களை நடத்துவார், தேர்தல் ஆயத்தப் பணிகளை மதிப்பாய்வு செய்வார். மேலும், பாஜகவின் பிரசார உத்தியை வலுப்படுத்தக் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுடன் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சரின் வருகைகள் கட்சித் தொண்டர்களுக்கு ஆற்றலையும், தெளிவான வழிகாட்டுதலையும் வழங்கும் என மூத்த கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

அசாம் முழுவதும் வளர்ச்சி, நல்லாட்சி மற்றும் வலுவான அமைப்பு ரீதியான செயல்பாடுகளுக்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதை பாஜக நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தாண்டு இறுதியில் அசாமில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அதில் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான பாஜக, காங்கிரஸுக்கு எதிராகத் தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முயல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பணியில் இருந்து விலகுகிறேன்: அண்ணாமலை

**சென்னை, பிப்.4:**

சிங்காநல்லூர், விருகம்பாக்கம் உள்ளிட்ட 6 தொகுதிகளின் தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து விலகுவதாக தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று திடீரென அறிவித்துள்ளார். தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக



அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர்களை நியமித்து அறிவித்தார். அதன்படி, ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் 2 முதல் 7 தொகுதிகள் வரை ஒதுக்கப்பட்டிருந்தன. அதில், அண்ணாமலைக்கு கோவை சிங்காநல்லூர், மதுரை தெற்கு, சென்னை விருகம்பாக்கம், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், குமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 6 தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர் பணி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அண்ணாமலை அறிவித்துள்ளார்.

## இன்றைய பஞ்சாங்கம்

04.02.2026 தை 21
புதன் கிழமை

சூரிய உதயம் 6.36

**திதி:** இன்று அதிகாலை 2.59 வரை துவிதியை பின்பு திரிதியை.

**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 2.24 வரை மகம் பின்பு பூரம்.

**யோகம் :** இன்று அதிகாலை 4.55 வரை சோபனம் பின்பு அதிகண்டம்.

**கரணம் :** இன்று அதிகாலை 2.59 வரை கரசை பின்பு பிற்பகல் 2.54 வரை வணிசை பின்பு பத்திரை.

**அமிர்தாதி யோகம் :** இன்று காலை 6.35 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

**சந்திராஷ்டமம்** இன்று அதிகாலை 12.24 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

**நல்ல நேரம்**
காலை 9.15 – 10.15.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
பிற்பகல் 12.00 – 1.30.

**எமகண்டம்**
காலை 7.30 – 9.00.

**குளிகை**
காலை 10.30 – 12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## மக்களவையில் அமளி: மாணிக்கம் தாகூர் உள்பட 8 எம்.பிக்கள் சஸ்பெண்ட்


**புதுடெல்லி, பிப்.4:**

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது மக்களவையில் விவாதம் நடைபெற்று வருகிறது. இந்த விவாதத்தின் மீது நேற்று பேசிய ராகுல் காந்தி, "சீனாவின் ஆக்கிரமிப்பு" முயற்சி களைப் பற்றி பேசினார். இதற்கு ஆதாரமாக முன்னாள் ராணுவ தளபதி நரவனேவின் புத்தகத்தை மேற்கோள்காட்டினார். ஆனால் மத்திய மந்திரிகள் ராஜ்நாத்சிங், அமித்ஷா உள்ளிட்டோர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பாஜக அதன் கூட்டணி கட்சிகளின் எம்.பிக்களும் ராகுல் காந்தியை பேசவிடாமல் தடுத்தனர்.இதனால் நேற்று அவை நடவடிக்கைகள் முடங்கின.

அதேபோல ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கும் எதிராக அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவை அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது. இன்று பிற்பகல் கூடியதும், எதிர்க்கட்சி எம்.பிக்கள் காகிதங்களை கிழித்து எறிந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அவை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தமிழக எம். பி மாணிக்கம் தாகூர் உள்பட 8 எம்.பிக்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# திருக்குறள் குறள்-520

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு



தொழில் செய்கின்றவன்
கோணாதிருக்கும் வரையில்
உலகம் கெடாது, ஆகையால்
மன்னன் நாள்தோறும்
அவனுடைய நிலைமையை
ஆராய வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



பசி அடங்கிய
பின்பு கிடைக்கும்
உணவும் ....
மனம் வெறுத்த
பின்பு கிடைக்கும்
அன்பும் பயனே
இல்லாதது ...

**உஷா முத்து ராமன்**

## பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு நாள் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**திருவண்ணாமலை, பிப்.04**

திருவண்ணாமலை பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு நாளை முன்னிட்டு அண்ணா சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.என் அண்ணாதுரை அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் அவர்கள், டாக்டர் எ.வே.கம்பன் அவர்கள் அனைவரும் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திமுக ஊராட்சி மன்ற தலைவர்கள் பாஜகவில் இணைந்தனர்



முதுகுளத்தூர் தொகுதி திமுக ஊராட்சி மன்ற தலைவர்கள் அழகர்சாமி, பாலச்சாமி உள்பட பலர் நேற்று நயினார் நாகேந்திரன் முன்னிலையில் பாஜகவில் இணைந்தனர்.

## அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை





திருவண்ணாமலை பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு தினத்தை முன்னிட்டு அண்ணா சிலைக்கு மாண்புமிகு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் மாவட்ட கழகச் செயலாளர் (திருவண்ணாமலை கிழக்கு) முன்னாள் அமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கட்டுமரம் படகு மீனவர்கள் கூட்டுறவு நலச்சங்கம் தலைவர், அவர்களின் 55 ஆவது பிறந்தநாள்



மீனவ போராளி ஆறுமுகம் தமிழ்நாடு மீனவர் பேரவை மாநில துணைத்தலைவர், சென்னை சிங்காரவேலர் கில்னட் இரண்டு இன்ஜின் பைபர் கட்டுமரம் படகு மீனவர்கள் கூட்டுறவு நலச்சங்கம் தலைவர், அவர்களின் 55 ஆவது பிறந்தநாளான நேற்று தமிழ்நாடு மீனவர் பேரவை மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கேக் வெட்டியும், சால்வை அணிவித்தும் வாழ்த்து தெரிவித்தனர்.

## வாடிப்பட்டியில் அண்ணா நினைவு தினம்



**வாடிப்பட்டி, பிப்.4:** மதுரை மேற்கு மாவட்டஅ.தி.மு.க சார்பாக பேரறிஞர் அண்ணா 67 ஆவது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

வாடிப்பட்டி நடந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் எம்.எல்.ஏ., மாணிக்கம் தலைமை தாங்கி அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். மாவட்ட அவைத் தலைவர் மு சி சோ முருகன், மாநில பேரவை இணைச் செயலா ளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட பொருளாளர் திருப்பதி, ஒன்றிய செயலாளர் காளிதாஸ், ரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், செல்லம்பட்டி ராஜா பேரூர் செயலாளர் டாக்டர் அசோக் குமார், கொரியர் கணேசன், இலக்கிய அணி மாவட்ட செயலாளர் ரகு, துணைச்செயலாளர் செந்தில்குமார்,.பேரவை பேரூர் செயலாளர் தனசேகரன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அதிமுகவினர் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் முன்பு இருந்து மௌன ஊர்வலமாக புறப்பட்டு பஸ் நிலையம் வந்தடைந்தனர்.

## திருப்பதி- திருச்சானூர் திருச்சானூரில் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம்





திருப்பதி- திருச்சானூர் திருச்சானூரில் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் 12 முறை, லட்சுமி சகஸ்ரநாமம், குங்கும அர்ச்சனையும், பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி, துளசிகளால்,வண்ண மலர்களால், அர்ச்சனைகள் செய்யப்பட்டு மகா தீபாராதனையும் நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கணித ஆசிரியருக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு



**மயிலாடுதுறை,பிப்.04:** மயிலாடுதுறையில் பள்ளி கல்வித்துறை சார்பில் 2024-2025 ஆம் ஆண்டு கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்று தந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் சின்னங்குடி அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் ஆனந்தராஜ் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு கணித பாடத்தில் 100 % தேர்ச்சி பெற்று கொடுத்தமைக்காக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

சின்னங்குடி பள்ளி தலைமை ஆசிரியர் சித்ரா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முருகையன், பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் பானுமதி, சின்னங்குடி ஊர் பஞ்சாயத்தார்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், பள்ளி மேலாண்மைக் குழுவினர், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டு பெற்ற ஆசிரியர் ஆனந்தராஜ்க்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## பொது விருந்தில் அமைச்சர் பெரிய கருப்பன்





சென்னை, தம்பு செட்டி தெரு காளிகாம்பாள் திருக்கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தில் அமைச்சர் பெரிய கருப்பன் பங்கேற்றார்.

## சமபந்தி விருந்தில் அமைச்சர் சி.வி.கணேசன்



சென்னை, மேற்கு தாம்பரம் அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயிலில் நடந்த சமபந்தி விருந்தில் அமைச்சர் சி.வி.கணேசன், எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டனர்.

## அண்ணாவின் 57-வது ஆண்டு நினைவு நாள்



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 57-வது ஆண்டு நினைவு நாள் அமைதி பேரணி நடந்தது. வடசேரி அண்ணா சிலைக்கு மேயர் மகேஷ், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் மற்றம்திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## பேரறிஞர் அண்ணாவின் 57 ஆம் ஆண்டு நினைவு தினத்தை திருஉருவப்படத்திற்கு மலர்த்துவி மரியாதை



**செய்யாறு, பிப் .4:** செய்யாறு ஆரணி கூட்டு சாலையில் உள்ள எம்ஜிஆர் சிலை அருகே 57 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினத்தை திருஉருவப்படத்திற்கு மலர்த்துவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு நகர அதிமுக சார்பில் ஆரணி கூட்ரோட்டில் எம் ஜி ஆர் சிலை அருகில் நகர செயலாளர் கே. வெங்கடேசன் ஏற்பாட்டில் வெகு விமர்சையாக அலங்கரிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் அருணகிரி, வரத்தக்க அணி மாவட்ட செயலாளர் பூக்கடை கோபால், எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் கோவிந்தராஜ், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் அருண், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் இளையராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் தசரதன்,தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்டத் துணைச் செயலாளர் சுரேஷ், வழக்கறிஞர் புவனேந்திரன், மாணவரணி மாவட்ட செயலாளர் அரவிந்த், மற்றும் சுதாகர், மகாதேவன், கோபி, தணிகாசலம், மனோகர், பொன் பழனி, அபிராமி சுரேஷ்,எழில், ரமண முருகன்,பாலாஜி, வெங்கடேஷ்,ராஜி உள்ளிட்ட பல கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செய்யாறில் அண்ணாவின் 57வது நினைவு தினம் ஜோதி எம்.எல்.ஏ., தலைமையில் அமைதி ஊர்வலம்




**செய்யாறு, ஜன. 4:** முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாதுரையின் 57வது நினைவு தினத்தையொட்டி, செய்யாறில் ஜோதி எம்.எல்.ஏ., தலைமையில் அமைதி ஊர்வலம் நடந்தது. பேரறிஞர் அண்ணா துரையின் 57வது நினைவு தினம், செய்யாறில் ஜோதி எம்.எல்.ஏ., தலைமையில் அனுசரிக்கப்பட்டது. முன்னதாக செய்யார் ஆற்றங் கரை பெரியார் சிலை அருகே தி.மு.க., பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் என, 200க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் வேல்முருகன், முன்னாள் எம்.எல்.ஏ., அன்பழகன், நகர செயலாளர் விஸ்வநாதன், மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு தலைவர் பார்வதி சீனுவாசன், மாவட்டத் துணைச் செயலாளர் லோகநாதன், ஒன்றிய செயலாளர்களான என்.சங்கர், சீனிவாசன் ஞானவேல், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன், கலைஞர் பாஸ்கர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## தூய்மைப் பணியாளரின் நேர்மையை பாராட்டி தங்கச் சங்கிலியை பரிசளித்த ரஜினிகாந்த்



**சென்னை, பிப்.4:**

சென்னை மாநகராட்சியில், தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி வருபவர் பத்மா (50). இவர் கடந்த ஜனவரி 11ம் தேதி தனது வழக்கமான பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது தி.நகர் வண்டிக்காரன் சாலையில் கிடந்த ஒரு பையை எடுத்துப் பார்த்தபோது, அதில் ஐஸ்கிரீம் டப்பாவிற்குள் ரூ.45 லட்சம் மதிப்பிலான 45 சவரன் தங்க நகைகள் இருந்தன. வறுமையில் வாடினாலும், நேர்மை தவறாத பத்மா, உடனடியாக தங்க நகைகள் இருந்த அந்த பிளாஸ்டிக் கவரை பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். விசாரணையில், நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் தங்க நகைகளை தொலைத்ததாக முன்பே புகார் அளித்தது கண்டறியப்பட்டது. அவர் அளித்த ஆவணங்கள் சரிபார்த்த பின்னர், நகைகள் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. நேர்மையுடன் செயல்பட்ட தூய்மைப்பணியாளர் பத்மாவிற்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுகள் தெரிவித்து வருகிறார்கள்.

தூய்மைப்பணியாளர் பத்மாவை நேரில் வரவழைத்து வாழ்த்து தெரிவித்த முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், பரிசுத்தொகையாக ரூ.1 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். இந்த நிலையில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இன்று தூய்மைப்பணியாளர் பத்மாவை நேரில் வரவழைத்து பாராட்டியதோடு, அவருக்கு தங்கச் சங்கிலியை பரிசாக வழங்கினார்.

## “விஜயின் குரல் நாடு முழுவதும் மாற்றத்தை ஏற்படுத்தும்”: கே.ஏ.செங்கோட்டையன்

**ஈரோடு, பிப். 4:**

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள வடுகபாளையம் பிரிவில், தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) மேற்கு ஒன்றியத்தின் புதிய கட்சி அலுவலகம் திறக்கப்பட்டது. இதனை த.வெ.க. நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய செங்கோட்டையன், “தைப்பூசம் என்ற இனிய நாளில் தமிழக வெற்றிக் கழகத்தின் புதிய அலுவலகத்தை திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் புதிய மாற்றத்தை உருவாக்க காத்திருக்கின்றனர்,” என்றார். மேலும் அவர் கூறுகையில், “தமிழக மக்கள் அனைவரும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் ஆட்சிக்கு வர வேண்டும் என எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஆண்டுக்கு சுமார் ரூ.500 கோடி வருமானத்தை விட்டு, தமிழக மக்களுக்குத் தூய ஆட்சியை வழங்கும் நோக்குடன் அவர் அரசியலுக்கு வந்துள்ளார். தமிழகத்தின் அனைத்து குடும்பங்களிலும் மகன், மகள் என அனைவரும் விஜய் முதல்வராக வர வேண்டும் என விரும்புகின்றனர்,” என்றார்.

## முளைப்பாரி எடுத்து ஈஷாவில் பக்தர்கள் வழிபாடு

**கோவை, பிப். 4:**

ஈஷாவில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு ளைப்பாரியால் வடிவமைக்கப்பட்ட லிங்க பைரவி தேவியின் திருவுருவத்துடன், பூக்கரகம், பூவோடு ஏந்தி ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பாதயாத்திரை மேற்கொண்டனர். ஈஷாவில் ‘லிங்க பைரவி’ திருமேனி கடந்த 2010-ஆம் ஆண்டு தைப்பூச நாளன்று சத்குருவால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்தப் புனித நாளைக் கொண்டாடும் விதமாக, ஆண்டுதோறும் லிங்க பைரவியின் பிரதிஷ்டை தின விழா மற்றும் தைப்பூசத் திருவிழா ஈஷாவில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு விழாவையொட்டி ஈஷாவைச் சுற்றியுள்ள கிராம மக்கள், பழங்குடியின மக்கள் மற்றும் வெளிநாட்டினர் எனப் பலதரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து, முளைப்பாரியால் அலங்கரிக்கப்பட்ட தேவியின் திருவுருவத்தைப் பல்லக்கில் ஏந்தி ஊர்வலமாக வந்தனர். இதனுடன் ஆயிரக்கணக்கான பெண்கள் தனித்தனியாக முளைப்பாரி, பூக்கரகம் மற்றும் பூவோடு ஏந்தி தேவியின் நாமங்களை முழங்கியபடி பாதயாத்திரையாக வந்தனர்.

## “சினிமா அரசியல் மக்கள் மத்தியில் எடுபடாது” - அமைச்சர் ஐ.பெரியசாமி



**திண்டுக்கல், பிப்.4:**

“விஜய் முதலில் அரசியலுக்கு வரட்டும். அரசியலில் என்ன செய்யப்போகிறோம் என அவர் இதுவரை சொல்லவில்லை. சினிமா அரசியல் மக்கள் மத்தியில் எடுபடாது” என அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் திமுக சார்பில் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. முன்னாள் முதல்வர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர் ஐ.பெரியசாமி மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக 200 இடங்களுக்கும் மேல் வெற்றி பெற்று, தமிழக முதல்வராக மீண்டும் மு.க.ஸ்டாலின் வருவார்.

விஜய் முதலில் அரசியலுக்கு வரட்டும். அரசியலில் என்ன செய்யப்போகிறோம் என அவர் இதுவரை சொல்லவில்லை. எல்லா அரசியலையும் மக்கள் பார்த்துவிட்டனர். சினிமா அரசியல் மக்கள் மத்தியில் எடுபடாது.

எந்த இயக்கமாக இருந்தாலும் அரசியல் ரீதியாக திமுக விமர்சிக்கும். கரூர் நிகழ்வுக்கு வந்து பார்க்காத விஜய் மக்களுக்கு என்ன செய்யப் போகிறார். நடித்துப் பார்க்கிறார், டான்ஸ் ஆடிப்பார்க்கிறார், அது இங்கு நடக்காது.

மக்கள் மத்தியில் நிலைத்து அரசியலில் புகழ்பெற்ற இயக்கம் திமுக. சாதனை நாயகனாக உள்ள தமிழக முதல்வருக்கு 70%-க்கு மேல் மக்கள் ஆதரவு உள்ளது.

கூட்டணிக் கட்சிகள் அதிக தொகுதிகள் கேட்பது அவர்களின் உரிமை, எங்கள் தலைவர் அதுகுறித்து முடிவு செய்வார். எந்த ஒரு இயக்கமும் கூட்டணியாக ஒரே அணியில் இத்தனை ஆண்டுகள் இருந்ததில்லை. சட்டப்பேரவைத் தேர்தலை தொடர்ந்து வரும் உள்ளாட்சி தேர்தல், மக்களவை தேர்தல்களிலும் திமுக கூட்டணி தான் வெல்லும்.

நான்கு ஆண்டுகளாக மக்களை சந்திக்காதவர் எடப்பாடி பழனிசாமி. அவரை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஓபிஎஸ் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. இது குறித்து எங்கள் தலைவர் முடிவு செய்வார்.

பழநியில் ஆர்ப்பாட்டம் செய்ய உள்ளதாக பாஜக அண்ணாமலை கூறியுள்ளார். அண்ணாமலைக்கும் பழநிக்கும் என்ன சம்பந்தம் உள்ளது.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

இந்த சந்திப்பின்போது, திமுக எம்எல்ஏ.,க்கள் இ.பெ.செந்தில்குமார், எஸ். காந்திராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## வெள்ளியங்கிரி மலை ஏற்றம் தொடக்கம்: விதிமுறைகளை கடைபிடிக்க பக்தர்களுக்கு அறிவுரை



**கோவை, பிப்.4:**

தென் கைலாயம் என அழைக்கப்படும் கோவை அருகேயுள்ள வெள்ளியங்கிரி மலைக்கு ஆண்டு தோறும் நடைபெறும் யாத்திரை, ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. பிப்ரவரி 1 முதல் மே 31 வரை நான்கு மாத காலத்திற்கு மலையேற பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் அடிவாரத்தில், ஞாயிற்றுக் கிழமை காலை பூசைகளுடன் மலைப்பாதை திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சிவ நாமம் முழங்க பக்தர்கள் மலையேற்றத்தைத் தொடங்கினர். முதல் மலையில் உள்ள வெள்ளை பிள்ளையார் தரிசனம் தொடங்கி, சுனை நீர் தீர்த்தம், வழியிலுள்ள தெய்வங்களை வழிபட்டு, ஏழாவது மலையில் எழுந்தருளியுள்ள வெள்ளியங்கிரி ஆண்டவர் சுயம்பு லிங்கம் வரை சென்று பூஜைகளை தரிசிப்பது பக்தர்களுக்கான சிறப்பு அம்சமாகும்.

மலையேற்றம் தொடங்கிய முதல் நாளிலேயே 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் மலையேறியதாக தெரிவிக்கப்பட்டது. பக்தர்கள் வருகையை முன்னிட்டு, மருத்துவ வசதி, குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் அறங்காவலர் குழு தலைவர் சிவ கணேஷ் கூறுகையில், மலையேறும் பக்தர்கள் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மலையேற்றத்தின் போது காலணி அணியக் கூடாது என்றும், நெகிழிப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஆண்டு மலையிலிருந்து 12 டன் நெகிழி கழிவுகள் அகற்றப்பட்டதாக குறிப்பிட்ட அவர், நடப்பாண்டில் நெகிழிப் பைகள் பயன்பாட்டை முழுமையாக தவிர்க்க வேண்டும் என்றார். குடிநீருக்காக எடுத்துச் செல்லும் பாட்டில்களை மீண்டும் அடிவாரத்திற்குக் கொண்டு வர வேண்டும்; துணி, பிளாஸ்டிக், எளிதில் தீப்பிடிக்கும் பொருட்களை மலைப்பகுதிகளில் விட்டுச் செல்லக் கூடாது என்றும் தெரிவித்தார்.

வனவிலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதியாக இருப்பதால், பக்தர்கள் பாதுகாப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், வனத்துறையுடன் இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதனைத் தொடர்ந்து, மலையடிவாரத்தில் உள்ள கடைகளில் அறங்காவலர் குழுவினரும் அதிகாரிகளும் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்டனர். தடை செய்யப்பட்ட நெகிழிப் பைகளில் தின்பண்டங்கள் விற்பனை செய்த கடைகளுக்கு உடனடியாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. விதிமீறல் தொடர்ந்தால் உரிமம் ரத்து உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. நெகிழிப் பைகளில் தின்பண்டங்கள் விற்பனை செய்த ஒரு கடைக்கு முதல் நாளிலேயே நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தி.மு.க ஆட்சியே அமையும்: தஞ்சையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி

**தஞ்சாவூர், பிப்.4:**

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி, கடந்த காலங்களை விடச் சிறப்பான ஆட்சியாக நடைபெற்று வருவதாகவும், மீண்டும் தி.மு.க-வே வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்றும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களைச் சந்தித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:




“எடப்பாடி பழனிசாமி சொல்வதை எல்லாம் மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள். பெண்களுக்கு என ஏராளமான நல்ல திட்டங்களை நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தியுள்ளார். எந்த ஆட்சியிலும் நடைபெறாத அளவுக்குப் பல்வேறு சாதனைகளைச் செய்து காட்டியுள்ளார். 2006, 2016-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிதான் சிறப்பான ஆட்சி என்று அனைவருக்கும் தெரியும். ஆனால், தற்போது அதைவிடச் சிறப்பான ஆட்சியை முதலமைச்சர் நடத்திக் கொண்டிருக்கிறார்.

திமுகவின் தேர்தல் பரப்புரை கடந்த 6 மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது. கூட்டணி கட்சிகளை முதலமைச்சர் நல்லபடியாக அரவணைத்துச் செல்கிறார். திமுக கூட்டணி மிகவும் பலம் வாய்ந்ததாக உள்ளது. வரும் தேர்தலிலும் மு.க.ஸ்டாலின் தான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார். கருத்துக்கணிப்புகள் அனைத்தும் திமுகவுக்குச் சாதகமாகவே வருகின்றன. முதலமைச்சர் செல்லும் இடமெல்லாம் மக்கள் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கிறார்கள்; அவர் மீது தனி மரியாதை வைத்துள்ளார்கள்.

திமுக மீண்டும் வெற்றி பெறும்:

அரசின் நலத்திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் சென்றடைகிறதா என்பதை முதலமைச்சர் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார். எங்காவது குறை இருந்தால் அதனை உடனடியாக மாவட்ட ஆட்சியர்களிடம் பேசிச் சரி செய்து கொடுக்கிறார். ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களில் 20, 30 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் கூட ஒரே நாளில் முடிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, மின்சார வாரிய டிரான்ஸ்பார்மர் இடமாற்றம், கூட்டுப் பட்டா போன்ற எளிதில் முடியாத சிக்கல்களைக் கூட இந்த முகாம்கள் மூலம் முதலமைச்சர் தீர்த்து வைத்துள்ளார். இதனால் அரசின் திட்டங்கள் கிராமங்களை நோக்கி முழுமையாகச் சென்றுள்ளன. திமுகவின் கூட்டணி குறித்து முதலமைச்சரே பேசி இறுதி முடிவு எடுப்பார். அவர் எங்களுக்கு என்ன வேலை சொல்கிறாரோ அதை நிறைவேற்றுவதுதான் எங்களது பணி. கண்டிப்பாகத் தேர்தலில் திமுகதான் மீண்டும் வெற்றி பெறும் என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## அழகுக்கும் ஆன்மிகத்துக்கும் மட்டுமா ரோஜா?



உலகிலேயே மிகவும் அழகான பூ எது என்று கேட்டால், டக் என்று ரோஜா என்ற எல்லோராலும் கூற முடியும். அதன் அழகை மட்டும் தான் நாம் பார்க்கிறோமே ஒழிய அதன் பின்னால் இருக்கும் மருத்துவ குணங்களை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. அறிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை. ரோஜாவின் அத்தியாவசிய எண்ணெய் பல ஆரோக்கியப் பண்புகளைக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

ரோஜா எண்ணெய் மனச்சோர்வை போக்குவதோடு, பதட்டத்தை எதிர்த்து போராடுவதாகவும் அறியப்படுகிறது. இதனால் ஏற்படும் மன அழுத்தம் , ரோஜா எண்ணெய்யினால் முற்றிலுமாக விரட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதை காயம்பட்ட இடத்தில் தடவினால் தொற்று வராமல் பாதுகாக்கிறது என்று கூறப்படுகிறது. செப்டிக் ஆகாமல் பாதுகாக்கிறது என்பதால் இந்த எண்ணெய்யை மேல்பூச்சாக தடவி வரலாம். வைரஸிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

தம்பதியினர் இடையே பாலுணர்வைத் தூண்டும் ஒரு கிரியா ஊக்கியாக பொதுவாகவே ரோஜாப் பூவை கூறுவார்கள். இதன் எண்ணெய்யை மருத்துவர் அறிவுரை மூலம் எடுத்துக் கொள்வதால், பாலியல் குறைபாடு உள்ளவர்களுக்கு, சாதகமாக உதவி புரிகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த எண்ணெய் பற்களின் ஈறுகளையும், தலையில் உள்ள முடி வேர்களையும் பலப்படுத்துகிறதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். மேலும் கை கால்களில் உள்ள தசைப் பகுதிகளில் வலு இழக்கும் தன்மையிலிருந்து பாதுகாப்பு அளிக்க வல்லதாக நம்பப்படுகிறது.

வெளிப்புற காயங்களில் இருந்து உண்டாகும் தொற்றை தடுப்பதோடு அல்லாமல் டை ஃபாய்டு காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காலரா, சிறுநீர் பாதை போன்ற உள் பாக்டீரியா தொற்றுக்களையும் தடுக்கிறது.

ரோஜா அத்தியாவசிய எண்ணெய், ஒரு நல்ல மலம் இளக்கியாக செயல்படுகிறது. எந்தவித பாதகமான பக்க விளைவையும் ஏற்படுத்தாதாம்.

இது, நரம்புகளுக்கு ஒரு நல்ல டானிக் என்று கூறப்படுகிறது. வயது முதிர்ந்தவர்கள் சில பேருக்கு கைகளில் ஒரு நடுக்கம் உண்டாகும். இது நரம்புகளுக்கு வலிமையைக் கொடுத்து அந்த நடுக்கத்தை எதிர்த்துப் போராடுவதாகக் கூறப்படுகிறது.

கருப்பைக் கட்டிகள், ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சிகள், இரத்தப்போக்கு ஆகியவற்றிற்கு நல்ல நிவாரணியாக இருக்கிறது. அதாவது கருப்பையை சுத்திகரிக்க மிகவும் உதவுகிறதாம்.

இந்த எண்ணெய் மேனிக்கு பளபளப்பு தருவதோடு அல்லாமல், புத்துணர்ச்சியோடும் நம்மை வைத்துக்கொள்ள உதவுகிறது. சீரான ரத்த ஓட்டத்தை ஊக்குவிப்பதோடு, குறைக்கிறது.

எந்தவித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் அத்தனை ஆரோக்கிய பண்புகளைக் கொண்ட இந்த ரோஜா அத்தியாவசிய எண்ணெய்யை, மருத்துவரின் ஆலோசனையுடன் நாம் ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

## சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தில் கோலாகல தைப்பூச தெப்ப உற்சவம்

**நாகப்பட்டினம், பிப்.4:**

நாகப்பட்டினம் அடுத்த சிக்கலில் அமைந்துள்ள நவநீதேஸ்வரர் ஆலயத்தில் முருகப்பெருமாள் சிங்காரவேலராக காட்சி அளித்து வருகிறார். புகழ்பெற்ற இந்த ஆலயத்தில் தை பூசவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் திருநடனக்காட்சியுடன் எழுந்தருளி வீதியுலா வந்தார். அதனைத் தொடர்ந்து, ஆலய வளாகத்தில் உள்ள ஷீர புஷ்கரணி என்றழைக்கக்கூடிய, பால்குளத்தில் தெப்போற்சவம் நடைபெற்றது. இதில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பனை ஓலைகளால் செய்யப்பட்ட தெப்பத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க முருகப்பெருமான், வள்ளி, தெய்வானையுடன் 3 முறை வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். அதனைத் தொடர்ந்து வண்ணமிகு வாணவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## திருப்பூர் – லாரி மீது கார் மோதி விபத்து; 2 பேர் பலி

**திருப்பூர், பிப்.4:**

கோவை மாவட்டம் ராமநாதபுரம் பகுதியை சேர்ந்தவர் மணிவண்ணன் (50) மற்றும் கேரளாவை சேர்ந்த ராகேஷ்(41). இவர்கள் இருவரும் பெருந்துறை அருகே உள்ள தேங்காய் எண்ணை நிறுவனத்தில் அலுவலகப் பணியாளராக பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் கோவையில் இருந்து பெருந்துறை நோக்கி வாடகை காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது திருப்பூர் மாவட்டம் அவிநாசி- புதிய திருப்பூர் சேலம் கொச்சி புறவழிச்சாலை அருகே வந்த போது, முன்னாள் சென்று கொண்டிருந்த லாரி திடிரென நிறுத்தியது. இதனால், கட்டுப்பாட்டை இழந்த கார் லாரியின் பின்பக்கத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பலத்த காயமடைந்த மணிவண்ணன், ராகேஷ் இருவரும் சம்பவயிடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இருவரது உடலையும் மீட்ட பெருமாநல்லூர் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விரைவில் முதுகலை ஆசிரியர் கலந்தாய்வு?

**சென்னை, பிப். 4:**

ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) மூலம் தேர்வு செய்யப்பட்ட 1,960 முதுகலை ஆசிரியர்களுக்கு விரைவில் பணி நியமனம் வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை முன்னிட்டு, முதுகலை ஆசிரியர் காலிப்பணியிட விவரங்களை உடனடியாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார். இந்த நடவடிக்கையால், முதுகலை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு (COUNSELLING) விரைவில் நடைபெறும் என எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# திருப்பதி கோதண்டராமர் பேட்டை உற்சவம் கோலாகலம்

**திருமலை, பிப்.4:**



திருப்பதி கோதண்டராமர் பேட்டை உற்சவம் விமரிசையாக நடைபெற்றது. இதற்காக கோதண்டராமர், சீதா, லட்சுமணர் ஆகிய உற்சவர்கள் திருப்பதியில் இருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கூப்புசந்திரபேட்டை கிராமத்துக்கு புறப்பட்டனர்.

காலையில் கோவிலில் இருந்து மேளதாளம் மற்றும் மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகப் புறப்பட்ட உற்சவர்கள் கூப்புச்சந்திரப்பேட்டை கிராமத்தை சென்றடைந்தனர். அங்கு உற்சவ மூர்த்திகளுக்கு ஸ்நாபன திருமஞ்சனம் நடைபெற்றது. பின்னர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

அதன் பிறகு மாலை 4 மணியளவில் ஊஞ்சல் சேவை தொடங்கியது. மாலை 5 மணி வரை உஞ்சல் சேவை நடைபெறுகிறது.

அதன்பின்னர் கூப்புசந்திர பேட்டை கிராமத்தில் இருந்து உற்சவர்கள் புறப்பட்டு இரவில் கோவிலை அடைகின்றனர்.

# சேலம் செவ்வாய்ப்பேட்டை சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தைப்பூச விழா கோலாகலம்

**சேலம், பிப்.4:**



முருகப்பெருமானை வழிபடுவதற்கு உகந்த முக்கியமான தினங்களில் ஒன்று தைப்பூசத் திருநாள். அன்றைய தினம் லட்சக்கணக்கான பக்தர்கள் விரதம் இருந்து காவடி எடுத்தும், அலகு குத்தியும் பாத யாத்திரையாகச் சென்று முருகப்பெருமானை தரிசனம் செய்கிறார்கள். தைப்பூசத்தன்று விரதம் இருந்து வழிபட்டால் வாழ்வில் உள்ள துன்பங்கள் நீங்கும், தீராத பகை மாறும், ஒற்றுமை அதிகரிக்கும், தொடங்கும் காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அவ்வகையில் இந்த ஆண்டு நேற்று முன்தினம் (01.02.2026) தைப்பூச பெருவிழா உற்சாகமாக கொண்டாடப்பட்டது. கோவில்களில் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

சேலம் மாவட்டம், செவ்வாய்பேட்டை சித்திரைச் சாவடியில் அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலிலும் தைப்பூச பெருவிழா நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

தைப்பூசத்தை முன்னிட்டு ஷண்முகநாதருக்கு சிறப்பு அபிஷேகம், அழகிய அலங்காரம் மற்றும் விசேஷ பூஜை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

“துன்பங்களைப் போக்கி நமக்கு இன்பத்தை அளிக்கும் முருகப்பெருமான், நம்மை அனைத்து தீமைகளிலிருந்தும் காக்கும் தெய்வமாக அருள்பாலிக்கிறார்” என கோவில் குருக்கள் சுப்பிரமணிய சுவாமிகள் மற்றும் சேனாபதி குருக்கள் தெரிவித்தனர்.

# காளிப்பட்டி கந்தசாமி கோவிலில் தைப்பூச தேரோட்டம்: பக்தர்கள் தரிசனம்

**சேலம், பிப்.4:**



சேலம் -நாமக்கல் மாவட்ட எல்லை பகுதியில் அமைந்துள்ள, 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த காளிப்பட்டி கந்தசாமி கோவிலில் வருடம் தோறும் தைப்பூச திருநாளன்று தேர்த்திருவிழா விமரிசையாக நடைபெறும். அதன்படி, இந்த ஆண்டும் தைப்பூச தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 28ஆம் தேதி கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கியது. தைப்பூச நாளில் சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடந்தது. இதனைத் தொடர்ந்து சுவாமி திருத்தேருக்கு எழுந்தருளினார். மாலை 3:30 மணியளவில் தேரோட்டம் தொடங்கியது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொணடு “கந்தனுக்கு அரோகரா” என பக்தி முழக்கம் எழுப்பியபடி வடம் பிடித்து தேர் இழுத்தனர். பக்தர்கள் பலர் பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி, இளநீர் காவடி உள்ளிட்ட பல்வேறு காவடிகளை எடுத்து ஆடியபடி வந்தனர். திருத்தேர் கோவிலை சுற்றி உள்ள நான்கு ரத வீதிகளில் வலம் வந்தது.

தைப்பூசத்தை முன்னிட்டு ராசிபுரம், திருச்செங்கோடு, சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் பாதயாத்திரையாக கோவிலுக்கு வந்தனர்.






## தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலத்தில் கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1 முதல் ஆரம்பம்

**சென்னை, பிப்.4:**

உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தற்சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 9 நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இதுவரை 630.050 டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 351 சிறு குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், நடப்பு 2025-2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் கேழ்வரகு விவசாயிகள் பயன் பெற ஏதுவாக, கேழ்வரகு கொள்முதல் கால வரம்பு ஆகஸ்ட் 31ந் தேதி வரை நீட்டித்து வழங்க தமிழ்நாடு அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டு, மேற்படி மாவட்டங்களில், நேரடி கேழ்வரகு கொள்முதல் தற்போது, 1.2.2026 முதல் 31.8.2026 வரை கால நீட்டிப்பு செய்து கேழ்வரகு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

## தூத்துக்குடி: கொலை வழக்கில் முதியவருக்கு ஆயுள் தண்டனை

**தூத்துக்குடி, பிப்.4:**

தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் பகுதியைச் சேர்ந்த ஜெபராஜ் (வயது 62) என்பவர் கடந்த 2017-ம் ஆண்டு அதே பகுதியைச் சேர்ந்த மரியசுரேஷ்(37) என்பவரை முன்விரோதம் காரணமாக பெட்ரோல் ஊற்றி எரித்து கொலை செய்தார்.

இதுகுறித்து தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் எண்-II-ல் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா நேற்று ஜெபராஜ் என்பரை குற்றவாளி என தீர்ப்பளித்து ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த தூத்துக்குடி நகர உட்கோட்ட டி.எஸ்.பி. சுனில், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த தாளமுத்துநகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் அருளப்பன், தாளமுத்துநகர் காவல் நிலைய காவல்துறையினர், அப்போதைய தாளமுத்துநகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வனிதாராணி மற்றும் நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# கட்டுமானத் துறையில் புரட்சி! பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் புதிய முயற்சி!

நாள்தோறும் டன் கணக்கில் பிளாஸ்டிக் கழிவுகள் குவிகின்றன. பிளாஸ்டிக் பாட்டில்கள், கவர்கள், பிளாஸ்டிக் பைகள், பால் கவர்கள் என ஏராளமான பிளாஸ்டிக் கழிவுகளை தினமும் குப்பைகளாக வெளியேற்றுகிறோம். பிளாஸ்டிக் கழிவுகளையும், கட்டடக் கழிவுகளையும், தொழிற்சாலைக் கழிவுகளையும் மறுசுழற்சி செய்து கட்டடங்களுக்கு பயன்படுத்தலாம்.

பிளாஸ்டிக் கழிவுகளில் (Plastic wastes) இருந்து கட்டுமானங்களுக்கு தேவையான கற்களையும், கதவு ஜன்னல் போன்றவைகளையும் தயாரிப்பதற்கு பயன்படுத்தலாம்.

எகோக்யூப் (ECO CUBE) என்பது மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் வலுவான கட்டுமான கற்களாகும்.

பிளாஸ்டிக் கழிவுகளை உருக்கி பிளாக்குகளாக செய்து தளம் அமைக்கலாம்.

நடைபாதை மற்றும் பார்க்கிங் கற்களாக பயன்படுத்தலாம். சீலிங் பேனல்கள் மற்றும் சுவர் பேனல்களாகவும் உருவாக்கிக் கொள்ளலாம். பழைய கட்டுமானங்களை இடிக்கும் பொழுது கிடைக்கும் இரும்பு, மரம், பிளாஸ்டிக் போன்றவற்றை மறுசுழற்சி செய்து உபயோகிக்கலாம். கட்டடக் கழிவுகளை அரைத்து




பேஸ்மென்ட் பில்லிங் போன்றவற்றிற்கும், சாலைப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம். அஸ்திவாரங்களுக்கு கருங்கலுக்கு பதிலாக போர்டு எர்த் என, இன்னும் தற்சார்பு கட்டுமான முறையில் அஸ்திவாரங்கள் இடலாம். இதன் மூலம் கட்டடங்களின் செலவும் குறையும். சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும். கட்டடக் கழிவுகளை குளம் குட்டைகளில் கொட்டுவதால் நீர்நிலைகள் பாதிக்கப்படுவதுடன், சுற்றுச்சூழலும் பெருமளவில் பாதிக்கப்படும்.

WES-Tec குளோபல் என்பது டெக்னாலஜி மற்றும் கட்டுமானம் சார்ந்த நிறுவனமாகும். இந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள எகோக்யூப் (ECO CUBE) என்னும் தொழில்நுட்பம் கட்டுமானத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்ய வேண்டுமானால் தரம் பிரித்து, கழுவி சுத்தம் செய்ய வேண்டும். ஆனால் WES-Tec நிறுவனமோ மறுசுழற்சி முறையில் பிளாஸ்டிக் கழிவுகளை தரம் பிரிப்பதோ, சுத்தம் செய்வதோ இல்லை. எல்லா வகையான பிளாஸ்டிக் கழிவுகளையும் மறுசுழற்சி செய்து உறுதியான கட்டுமான தரத்திலான கற்களாக மாற்றுகிறது.

இவை சாதாரண கான்கிரீட்டை விட அதிக அழுத்தத்தை தாங்கும் திறன் கொண்டவை. கான்கிரீட்டை விட எடையும் குறைவானது. இதனால் மலைப்பகுதிகளுக்கும், கடற்கரை ஓரங்களுக்கும் இதனைக் கொண்டு செல்வது எளிதாகிறது. சுனாமி, கடல் அரிப்பு மற்றும் நிலநடுக்கம் போன்ற அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும் சூழல்களை எதிர்கொள்ளும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



25 கிலோ எடையுள்ள எகோக்யூப் கல்லை தயாரிப்பது மூலம் சுமார் 75 கிலோ கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தை தடுக்க முடிகிறது. இது பிளாஸ்டிக் எரிக்கப்படுவதையும், கடலில் கலப்பதையும், நீர்நிலைகளை பாதிப்பதையும் தவிர்க்கிறது.

இந்த எகோக்யூப், எடிசன் விருது மற்றும் CES 2026 கண்டுபிடிப்பு விருதையும் பெற்றுள்ளது.

# "மூத்தோர்கள் முது நெல்லிக்கனிகள்"

இன்று ராஜா பிசினஸில் உச்சம் தொட்டான். ஆரம்ப காலத்தில் சைக்கிளில் அலைந்தவன், இப்போது செல்வத்தில் புரள்கிறான். பணம் வந்ததும் பார்வை மாறியது. மனம் கடினமானது.



"என் வெற்றிக்குக் காரணம் என் முயற்சியே!" என்று சொல்லிக் கொண்டு, தன்னை வளர்த்த அப்பா அம்மாவை சுமையாகக் கருதத் தொடங்கினான். சின்னச் சின்ன விஷயங்களுக்கே கத்தல், அவமதிப்பு, திட்டுதல்.

அக்கம் பக்கத்தார்களோ..., உறவினர்களோ... யாரேனும் "பெற்றோர்களை மதி ராஜா" என்று சொன்னால், அவர்களையும் வசை பாடுவான். "யாருக்கும் நான் கடமைப்பட்டவன் இல்லை!" என்பதே அவன் வாழ்க்கைத் தத்துவமாகிப் போனது. கவனிக்க ஆளில்லாமல், மருத்துவமனை வாசல்களில் அலைந்து, மனமும் உடலும் சோர்ந்து அவனுடைய அப்பாவும் அம்மாவும் இறந்தே போனார்கள். ராஜாவுக்கு அது ஒரு தகவலாய் மட்டுமே இருந்தது. ஆனால் காலம் தன் கணக்கை மாற்றி எழுத ஆரம்பித்தது. ஒரு தவறான முடிவால் பிசினஸ் சரிவடைந்தது. அடுத்தடுத்து வந்த நஷ்டங்களால் நண்பர்கள் காணாமல் போனார்கள். வங்கிக் கதவுகள் மூடப்பட்டன. முத்தாய்ப்பாய் ராஜா தெருவில் நின்றான். அதே உலகம்... அதே மனிதர்கள்... ஆனால் அவனிடம் எதுவும் இல்லை. வேலை தேடி அலைந்தான். எங்கும் கிடைக்கவில்லை. கடைசியில், ஒரு முதியோர் இல்லத்தில் "மூத்தோர்களைப் பார்த்துக் கொள்ளும் வேலை" கிடைத்தது. முதல் நாளே, சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த முதியவர் அவனைப் பார்த்து சிரித்தார். அந்தச் சிரிப்பு, அப்பாவின் முகத்தை நினைவூட்டியது. இன்னொரு அறையில், ஒரு பாட்டி "மகனே" என்றழைத்தார். அம்மாவின் குரல் அவன் காதில் ஒலித்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு ராஜா தனியாக அழுதான். "என் பெற்றோரைக் கவனிக்காத குற்றத்திற்கு இத்தனை மூத்தோர்களைக் கவனிக்கும் பொறுப்பா?" என்று மனதிற்குள் கேட்டுக்கொண்டான். அடுத்த நாள் முதல், அவன் கைகள் மென்மையாயின. குரல் தாழ்ந்தது. பார்வையில் பாசம் வந்தது. பெற்றோர்களுக்கு செய்யாத சேவையை, இப்போது பெற்றோர் வயதுள்ளவர்களுக்குச் செய்தான்.

சில பாவங்களுக்கு தண்டனை இல்லை... பொறுப்பு மட்டுமே.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மர நாற்காலி

மூன்று முறை மணி அடித்தது. வகுப்புத் தலைவன் தன் நண்பனோடு சேர்ந்து மர நாற்காலியைத் தூக்கிக்கொண்டு வேப்ப மரத்தடியை நோக்கி நடந்தான். வேப்பமரத்துக்கு வடக்கே வரிசையாய் பனை மரம் வானைத்தொடும் அளவுக்கு நீண்டு வளர்ந்திருந்தது. மேற்கில் எங்கு முடிகிறது என்று தெரியாத மலையும், கிழக்கே நெருக்கமாய் புளிய மரமும், அதனை அடுத்து தேசிய நெடுஞ்சாலையும், தெற்கில் வகுப்பறைக் கட்டடங்களும், விளையாட்டு மைதானமும் விரிந்திருந்தது. முதல் வரிசையில் மாணவர்களும் அவர்களை தொடர்ந்து மாணவிகளும் நடந்தனர்.
ஒற்றை வேப்பமரம். அடர்ந்த கிளைகள். நிழல் படர்ந்த மண் தரையில் மர நாற்காலி போடப்பட்டிருந்தது. நாற்காலிக்கு முன்னே வரிசையாய் மாணவர்களும், மாணவிகளும் உட்கார்ந்திருந்தனர். முன் வரிசையில் உட்கார்ந்திருந்தவர்களின் மடியில் பிரித்து வைக்கப்பட்ட தமிழ் பாடப் புத்தகம். பனை மரத்தின் சலசலப்பு ஒரு பக்கம். காக்கைகளின் கரைதல் மறுபக்கம். ஊர்குருவின் சத்தம். எங்கிருந்து சத்தம் வருகிறது என்று கண்ணுக்கே தெரியாத பூச்சிகளின் சத்தத்தோடு இனிமையாகவே இருந்தது வேப்பமரத்தடியில் உட்கார்ந்திருந்தது. சிலர் சிறு குச்சியால் தரையில் மண்ணைக் குத்தியபடியே புத்தகத்தைப் பார்த்துப் படித்துக்கொண்டிருந்தனர். அடுத்த வரிசையில் சிலர் அருகருகில் உட்கார்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். கடைசி வரிசை உயரமான மாணவர்ளுக்கானது. அவர்களில் ஒருவன், காலை மடக்கி மண் தரையில் உட்கார முடியாமல் எழுந்து நின்று, ஆடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டி, இரு கைகளை மேலேத் தூக்கி,



விரல்களை ஒன்று சேர்த்து, உடலை வளைத்துச் சோம்பலை முறித்தான். புத்தகம் இல்லாமலிருந்தவனின் கண்ணில் குரங்கு பட்டது, அருகில் இருந்த சிறு கல்லெடுத்து அதன் மீது எறிந்தான். கல்லெறிந்தவனைப் பார்த்து அதிர்சியடைந்த குரங்கு, தனது அனைத்துப் பற்களும் வெளியே தெரிய கோபத்தோடு இளித்துக் காட்டியது. சிறிது நேரத்தில் கடைசி வரிசையிலிருந்தவனுக்கும் குரங்கிற்கும் நடந்த சண்டையின் சத்தம் கேட்டு, அனைத்து மாணவ மாணவிகளும் திரும்பிப் பார்த்தனர். வேப்ப மரத்தடியில் சலசலப்பு அதிகமானது. இதுவரை கூட்டத்தோடு கூட்டமாய் அமைதியாய் படித்துக்கொண்டிருந்தவன் "டேய் சத்தம் போடாதிங்கடா." என அதட்டியதும் அமைதியானது வேப்ப மரத்து வகுப்பறை. ஓய்வறையிலிருந்து வேகமாக முருகன் "டேய், ஐயா முதல் பத்து நிமிடத்துல மனப்பாட பாட்ட படிச்சிட்டு, அடுத்த பத்து நிமிடத்துல பாக்காம எழுதச் சொன்னாருடா" என மூச்சுவாங்கியபடியே சொன்னான். ஆரம்பத்திலிருந்து தற்போதுவரை குச்சியால் மண்ணையும், கண்ணைப் புத்தகத்திலும் வைத்து எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தவனின் அருகில் தோண்டப்பட்ட குழி பெரியப் பள்ளமாக மாறியிருந்தது. எழுந்து நின்று சோம்பல் முறித்தவன்" டேய் லீடர்" என அழைக்க, திரும்பிப் பார்த்த லீடரிடம் ஆள்காட்டி விரலை மேல் நோக்கி உயர்த்தி காட்டினான்.
"முடியாதுடா உட்காரு. மணி அடிக்கப் போறாங்க" என்றவன் புத்தகத்தின் மீது பார்வையை ஓடவிட்டான். கோடையின் தொடக்கம். வேப்பமரத்தடியின் காற்று குளிராக இருந்தது. மாணவ மாணவிகளும் தனித்தனியே உட்கார்ந்திருந்து அழகு உயிரோட்டமான சூழலாகவே இருந்தது. வகுப்புத் தலைவன் எழுந்து " சரிப்பா, எல்லோரும் எழுத ஆரம்பிக்கலாம்" எனச் சொல்லி வரிசையில் உட்கார்ந்தான். பச்சை வண்ணத்தில் வெள்ளை நிறப் பூவேடு வேப்ப மரம். ஆளில்லா நாற்காலி, வரிசையில் உட்கார்ந்து சிறு தேர்வு எழுதிய மாணவ மாணவிகள். காற்றில் அசைந்தாடிய பனை மரத்தின் ஓலை. பறவைகளின் கூச்சல். சாலையில் அதிவேகத்தில் ஊர்ந்து செல்லும் பேருந்தின் சத்தம். அருகில் உட்கார்ந்து சட்டென பறந்த சிட்டுக் குறிவியின் பயம். தெரிந்ததை விரைவாக எழுதி முடித்தவர்கள், இன்னும் எழுதத் தொடங்காமல் முழித்துக் கொண்டிருப்பவர்களைப் பார்ப்பதற்கு இனிமையாகவே இருந்தது. மூன்றாவது மணி அடித்து சிறிது நேரம் கழித்து, வேப்ப மரத்தின் கீழ் போடப்பட்டது மர நாற்காலி. நாற்பது நிமிடம் கழித்தும் நாற்காலி நாற்காலியாகவே இருந்தது. யாரும் உட்காரவில்லை. மதிய உணவுக்கு மணி அடித்தது. அனைவரும் எழுந்து ஆடைகளில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டு, தேர்வு எழுதிய காகிதத்தை வகுப்புத் தலைவனிடம் கொடுத்துவிட்டு, நண்பர்களோடு பேசியபடியே வரிசையில் வகுப்பறையை நோக்கி நடந்தனர். கடைசியாக மர நாற்காலியை வகுப்புத் தலைவன் இன்னொருவனோடு சேர்ந்துத் தூக்கிக்கொண்டு நடந்தான். வேப்ப மரத்தடியில் ஆங்காங்கே சிறு சிறு பள்ளம் பதுங்குக் குழிபோல வெட்டப்பட்டிருந்தது. மிதமானக் காற்று வீசியது. அமைதி நிலவியது.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்



# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 15



■கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## அன்னையரை அறிமுகப்படுத்துதல்

சேனை முதல் அனைவரும் கங்கையைக் கடந்தனர். பரதன் குகனுக்குக் கோசலை மாதாவை அறிமுகம் செய்தனன்.
"இவர் யார்?" என்று குகன் வினவ
"தயரதனின் முதல்தேவி! மூன்று உலகமும் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றதால் பெரும் செல்வம், யான் பிறந்ததால் துறந்த பெரியாள்!" என்றான்.
பின் குகனைக் கோசலை மாதாவுக்கு அறிமுகப்படுத்தினான். "இவன் யார்? என்று வினவ,
"இந்நின்ற குரிசில் ராகவனுக்கு இன்துணைவன் இளையோனுக்கும் எனக்கும் மூத்தோன். குன்றனைய திருநெடுந்தோள் குகன் என்பான்!" என்றான்.
கோசலை குகனைச் சகோதரனாக்கி வாழ்த்தினாள். "நீவிர் ஐவரும் ஒருவீர் ஆய் அகல இடத்தை நெடுங்காலம் அளித்தீர்!" என்றாள்.
சுமித்திரையைப் பார்த்த குகன் அறிமுகப்படுத்தச் சொன்னான். "ஐயா! அன்பின் நிறைந்தாளை உரை!" என்று கேட்க,
"ராமனுக்குப் பின் பிறந்தானும் உளன்; என்னைப் பிரியாதான் தன்னைப் பயந்த பெரியாள்!" என்று சொன்னான்.
அடுத்ததாகக் குகன் "யார் இவர் என்று உரை!"என்று கைகேயி மாதாவைப் பார்த்து கேட்க, பரதன், "துன்பமெல்லாம் படைத்தாளை, பழிவளர்க்கும் செவிலியை,தன் பாழ்த்த பாவிக் குடரிலே நெடுங்காலம் கிடந்தேங்கும் உயிர் பாரம் குறையாது தேய உடர் எலாம் உயிர் இலாத் தோன்ற உலகத்தே ஒருத்தி அன்றே, இடரிலா முகத்தாளை அறிந்தினையேல், அவள் தான் இந்நின்றாள்; என்னை ஈன்றாள்!" என்றான்.
இதனை எல்லாம் கேட்ட ஊர்மிளையின் கண்கள் கலங்கின. இவர்களுக்கு நம் நினைப்பே வரவில்லையே! இத்துடன் தானா உறவு? ஏன் இளையோனின் மனைவி வரவில்லை என்று பரதனும் சொல்லவில்லை, குகனும் அவரைப் பற்றி இன்னொரு ஆடவர் வினவுவது முறையன்று என்று நினைத்தான் போலும். அன்னையரின் மேல்தான் கோபம் வந்தது. சீதாக்கா அன்றைய செய்தியில் "அத்தையர்க்கும், மன்னர்க்கும் எனது வணக்கங்களைச் சொல்லுங்கள்!" என்று, தனக்கும் அவர்களுக்கும் உள்ள உறவை வேறுபடுத்திக் காட்டினாளே அன்று, அவர்கள் அதனை மெய்ப்பித்து விட்டார்கள். தன்னைப் பற்றிய நினைவுகள் தான் பிறந்த மிதிலை அன்னை இடத்தும் இல்லை, இவண் அன்னையர் இடத்தும் இல்லை. என்ன வாழ்வு இது? என்று அலுப்பு வந்தது ஊர்மிளைக்கு. இதில் உறக்கம் என்ன? மீளா உறக்கம் வந்தாலும் கூட, யாராவது அதற்காக வருத்தப்படப் போகிறார்களா? தன்னைப் பற்றிய நினைப்பே இல்லாமல், தான் மட்டும் அவர்களைச் சுற்றிவரும் மனத்தை உடையவளாகப் படைத்த இறைவனை என்னவென்று சொல்வது?
காலம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் எனக்கு என்ன பதில் சொல்லப் போகிறது? என் தியாகமும் உலகிற்குத் தெரியப் போகிறதா.? என் உறக்கநிலை மட்டுமே உலகறியச் செய்யுமோ காலம்! எனக்கும் பிரத்தேகமாக என்ன பதில் சொல்ல போகிறது? என்னைப் படைத்த நோக்கம் தான் என்ன? இதோ இன்று கொஞ்ச நேரத்தில் ராமனையும் அன்பரையும் கண்டு கொள்வார்கள். அதற்குள் பரத்வாச முனிவர் ஒருவர் இருக்கிறார். அவர் எப்படி எதிர்கொள்கிறார் என்று என் மனம் வனத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டது. இக்கற்பனை வாழ்வில் வலம்வர



வரட்டும். உறக்கம் என்னைப் பற்றிக் கொள்ளப் போகிறது. அதற்கு நான் என்ன பதில் செய்யப் போகிறேன் என்பதை யோசிப்பதற்குள் இதோ சிவிகையில் தாயரும், நடந்து குகனும், பரதனும், சத்துருக்கனனும் போவதைக் காண்போம் என்று நகர்ந்தாள்.
இதில் பரத்துவாசரைக் கம்பர் விருத்தி வேதியர் என்பர். விருத்தி என்பதைத் தொழில் என அர்த்தம் கொண்டால் வேதியர் விருத்தி என்பது ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறும் ஆகும்.
வந்த மாதவத்தோனை! ஆம்! மைந்தனும்! தந்தையாம் என்று வணங்கினான். அவரும் அந்தமில் நலத்து ஆசிகள் வழங்கினான்.

உடனே பரதனைப் பார்த்து "ஐய! உனக்கென்று உன் தாயார் பெறப்பட்ட மாமுடியைச் சூடி ஆளாமல், மூசு தூசு உடுத்து முடித்து உற்றுளது யாது?" என்றார்.

சினம் கொடுந்திறல் சீற்ற வெந்தீயினான் மனக்கடுப்பினன் ஆகி," மாதவ முனிவரே நீ எனக்கு அடுத்தது இயம்பிலை! உனக்கு அடுப்பது என்றால் உரவோய்!"என்றான் "இது உம் தகைமைக்குப் பொருந்தாத சொற்கள்!" என்றான்.
எந்தச் சொல் தன்னை வனம் நோக்கி ஏகியதோ, எந்தச் சொல் நமக்குத் துன்பத்தை அதிகமாகத் தந்ததோ, அதனையே அம்முனிவர் கூறக் கேட்கும் பரதனுக்குச் சினத்தீ சீறி எழுந்தது. "மூத்தவன் இருக்க இளையவன் அரசு புரிவதைக் கூறுவீரானால், உம் தகைமைக்குப் பொருந்தாதது!" என்று சொன்னான்.
"மறையின் கேள்வற்கு! ராமனுக்குப் பொருந்திய இளந்தோன்றல் பரதன் பின்முறையின் நீங்கி முதுநிலம் கொள்கிலேன். இறைவன் ராமன் கொள்கிலன் ஆமெனில் யாண்டு எலாம் கானத்து ஒருங்கி உடனே உறவென்!" என்று கூறினான்.
பரதன் உரைத்த வாசகம் கேட்டலும், ஆய காதலோடு ஐயனைக் கொண்டு தூய சாலை உறைவிடம் சென்றடைந்தான். பரதனோ அன்னக் காயும் கிழங்கும் உண்டு, அந்நாளைக் கடத்தி உறங்கப் போயினான்.

இதோ நெருங்கி விட்டது காலம் சித்திரக்கூடம்தனை அடைய. யமுனை நதியைக் கடந்தால் சித்திரக்கூடம் தான். காலம் அருகில் வந்தும் மனச்சோர்வைக் கொடுப்பது எது? நாம் எதனை நினைத்தோமோ அது நடந்தே தீர வேண்டும் என்ற இச்சைக்குத் தான் மனச்சோர்வு உண்டு. அவ்வாறே நடக்கத்தான் வேண்டும் என்பதைக் காலமல்லவா நிர்ணயிக்கிறது. நாம் மனச்சோர்வடைய காரணிகளே இல்லை. இத்தெளிவையும் மண்ணுலகில் உள்ள எந்த உயிர்களுக்கும் புலப்படாத ரகசியமாக அல்லவா காலம் தன்னுள் வைத்துக் கொண்டுள்ளது.

உறக்கம் வந்த போதெல்லாம் இனி உறக்கமே வாழ்க்கையென நினைத்து நினைத்து உறங்காமல் மனச்சோர்வு கொண்டது நாமா? காலமா?
ஊர்மிளையின் மனது இன்னும் சில தினங்களில் அமைதியாகிவிடும். முதலில் இருந்த பரபரப்பு கேள்விகள் இல்லை. அவள் மனதில் வருத்தங்கள் இல்லை.

ஆனால் "நம் வாழ்வை எப்படி வாழ வேண்டும் என்பதைக் கூடக் காலம் தான் நிர்ணயிக்கும் எனில், இறைவா என்னை ஏன் படைத்தாய்? உன் படைப்பில் எந்த உயிரும் வீணாகப் படைக்கப்பட மாட்டாது எனத் தந்தை அடிக்கடிக் கூறும் சொற்கள் அல்லவா? இது அப்படியானால் நான் எதற்காகப் பிறந்தேன்? என்னில் காலம் எதிர்பார்ப்பது எதனை? என்னால் என் அன்பருக்கோ, தமையனுக்கோ ஏன் என் தந்தை தங்கைகளுக்கோ, தமைக்கைகளுக்கோ யாருக்கும் என் சிறு உணர்வு கூட வராத போது, என்னால் நடக்க வேண்டிய கடமை எது? எனக்கு அறிய வைத்து அதனைச் சொன்னால் நான் அமைதியுற்று ஏற்பேன் அல்லவா?"
இந்தக் காலம் என்பது எதற்கும் அசைந்து கொடுக்காத ஒரு சக்தியாக அல்லவா இருக்கிறது. இதனைப் புரிந்து கொள்ளுவதும் கடினமாக இருக்கிறது. அதன் செயலும் வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதும், கடினம்.

நெடிய வழியில் பாலை நிலத்தைக் கடந்து பரதன் படைகளுடன் சித்திரக் கூடத்தை அடைந்தான் என்ற செய்தி ஊர்மிளையின் வயிற்றில் பாலை வார்ப்பதற்குப் பதிலாக, ஏதோ ஒரு உணர்வை ஏற்படுத்த காரணம் என்ன? தன் உள்ளுணர்வுகள் உறக்கத்தைத் தான் வரமாக பெற்றுள்ளாய் என்று சொல்லப் போகிறதா? பரதனின் அன்பு கூட ராமனைக் கட்டுப்படுத்தாது என்று காலம் உரைக்குமேயானால், காலத்தைப் பற்றிய உணர்வு எவ்வாறு இருக்கும்? அப்படி இருப்பதினால் காலம் என்ன தன்னை அழித்துக் கொள்ளவா போகிறது? காலச்சக்கரம் சுழல்வது நிற்பதில்லை. "ஊர்மிளா" என்று காலம் அவளது காதில் சத்தமாகச் சொல்லிப் போக, அப்படியே செயலற்று விழுந்தாள் மஞ்சத்தில். இதோ உறக்கம் அவளை ஆட்கொண்டது.

- தொடரும்

# நவகிரகங்களை வழிபடும்போது ஏழு முறை இடமிருந்து வலமாகவும் இரண்டு முறை வலமிருந்து இடமாகவும் சிலர் சுற்றுகிறார்கள். இது சரியா?

இது நிச்சயம் சரியில்லை. இது முற்றிலும் தவறானது. நவக்கிரகங்களில் ராகு, கேது இருவரும் வக்ர கதியில் சஞ்சரிக்கிறார்கள் (தலைகீழாக சுற்றுகிறார்கள்) என்பதால் ஏழுமுறை இடமிருந்து வலமாகவும், 2 முறை வலமிருந்து இடமாகவும் அதாவது தலைகீழாக சுற்ற வேண்டும் என்று காரணத்தையும் சொல்கிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி ஆகிய கிரகங்கள் வக்ர கதியில் சஞ்சரிக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கும் சேர்த்து எத்தனை கிரஹங்கள் வக்ரமோ அத்தனை சுற்றுகளை தலைகீழாக சுற்ற வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

முதலில் அறிவியல் ரீதியான ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்.

வக்ரம் என்றால் எந்த ஒரு கோளும் பின்னோக்கிச் செல்வதில்லை. சூரியனைச் சுற்றி அனைத்து கோள்களுமே தனித் தனியாக அவரவருக்கு உரிய நீள்வட்டப் பாதையில் நேராகத்தான் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு நீள்வட்டப் பாதையில் பயணிக்கும்போது ஒரு சில நேரங்களில் அவற்றின் வேகம் குறைகிறது. அவ்வாறு வேகம் குறையும் நேரத்தில் நம் கண்களுக்கு அவை பின்நோக்கிச் செல்வது போல தோன்றுகிறது. உங்களுக்கு எளிதில் புரியும்படியாகச் சொல்லவேண்டும் என்றால் அருகருகே இரு இரயில் வண்டிகள் பயணித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வண்டியின் வேகம் குறைந்தால், வேகமாகச் செல்லும் வண்டியில் பயணிப்போரின் கண்களுக்கு அருகில் உள்ள வண்டி பின்நோக்கிச் செல்வது போல தோன்றுகிறது அல்லவா. அதுபோலத்தான் இதுவும்.

இவ்வாறு கிரஹங்கள் சுற்றுகின்றபோது அவற்றின் வேகம் குறைகின்ற காலத்தையே வக்ர கதி என்று குறிப்பிடுகிறார்கள். மாறாக நீங்கள் நினைப்பது போல எந்த ஒரு கிரகமும் பின்னோக்கிச் செல்வது இல்லை.

பூமியில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருக்கும் நம் கண்களுக்கு வக்ர கதியில் உள்ள கிரஹங்கள் பின்னோக்கிச் செல்வது




போல் தெரிகிறது. அவ்வளவுதான். எந்த ஒரு கோளும் பின்னோக்கி செல்லவே செல்லாது.

ராகு-கேதுக்களைப் பொறுத்த வரை அவைகள் உண்மையான கோள்கள் இல்லை. அவைகள் இரண்டும் வெட்டும் புள்ளிகள். இந்த வெட்டும் புள்ளிகள் ஒரே இடத்தில் நிலைகொண்டு இருப்பதால் பூமியில் முன்நோக்கி பயணிக்கும் நம் கண்களுக்கு அவைகள் பின்னோக்கிச் செல்வது போல் தெரிகிறது. அதற்காக ராகு&கேதுக்களை வணங்க நாமும் பின்னோக்கிச் சுற்றுவது என்பது முற்றிலும் மூடநம்பிக்கையே ஆகும்.

அதோடு மட்டுமல்லாது சுற்றி வந்து வணங்குவது என்பது நமது இயற்கையோடு கலந்த ஒரு நடைமுறை. பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது என்பதைப் படிக்கிறோம்.

அதே போல நாமும் இறைசக்திகளை சுற்றி வந்து வணங்குகிறோம், அதோடு நில்லாது இருந்த இடத்திலிருந்தே தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் வணங்குகிறோம். இது அனைத்தும் இடமிருந்து வலமாகவே அமைகிறது. ஏனெனில் இந்த பூமியும் இடமிருந்து வலமாகவே சூரியனைச் சுற்றுவதோடு தன்னைத்தானும் சுற்றிக் கொள்கிறது. எவ்வாறு இந்த பூமியானது வலமிருந்து இடமாகச் சுற்றுவது இல்லையோ, அதே போல நாமும் வலமிருந்து இடமாக இறைசக்திகளைச் சுற்றக்கூடாது. அவ்வாறு சுற்றினால் அது இயற்கைக்கு மாறான ஒரு செயல். அதனால் உடலுக்கு நோய்தான் வருமே தவிர நன்மைகள் விளையாது.

நவக்கிரகங்கள் எண்ணிக்கையில் ஒன்பது என்பதற்காக ஒன்பது சுற்றுதான் சுற்றவேண்டும் என்ற கருத்தே தவறானது. ஏன் ஒன்பது சுற்றுகளுக்கு மேல் சுற்றினால் நவக்கிரகங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களா என்ன.? நம்மால் எத்தனை சுற்று சுற்ற இயலுமோ அத்தனை முறை சுற்றினால் போதும். ஒரே ஒருமுறை சுற்றினாலும் சிரத்தையோடு சுற்ற வேண்டும்.

இந்த உண்மையைப் புரிந்துகொண்டு சுற்றுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் இறைசக்திகளின் மேல் உங்களது கவனத்தை செலுத்தி இடமிருந்து வலமாக சுற்றி வந்து வணங்குங்கள். வளம் பெறுவீர்கள்.

சர்வம் சிவார்ப்பணம்..!



ப.கோபிசச்முத்து
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் கோவிந்தகிரி வரலாறு

கோவிந்தகிரி அல்லது கோவிந்த குரு (18581931) சமூக மற்றும் சமய சீர்திருத்தவாதி ஆவார். 1900-ஆண்டுகளின் முற்பகுதியில் தற்கால குஜராத்-இராஜஸ்தான் எல்லைப்பகுதிகளில் ஆரவல்லி மலைத்தொடர்களில் வாழ்ந்த பில் பழங்குடி மக்களின் சமூக மற்றும் சமயச் சீர்திருத்தத்திற்காக பாடுபட்டவர். இவர் பகத் இயக்கத்திற்காக நன்கறியப்பட்டவர்.

## இளமை வாழ்க்கை

லம்பாடி எனும் பஞ்சாரா நாடோடிக் குடும்பத்தில் (தற்கால இராஜஸ்தான் மாநிலத்தில்) துங்கர்பூர் சமஸ்தானத்தில் கோவிந்தகிரி பிறந்தார். கிராமக் கோயில் பூசாரியின் உதவியுடன் இளமைக் கல்வியை தானாக கற்றார். இவரது இளமைக் காலத்தில் பில் பழங்குடி மக்களை துங்கர்பூர் சமஸ்தானம் மற்றும் சந்திராபூர் சமஸ்தானங்களில் கூலி வழங்காமல் கொத்தடிமைகள் போன்று வேலை வாங்கப்பட்டனர். இவரது மனைவி மற்றும் குழந்தை HIS பஞ்சத்தால் உயிரிழந்தனர். பின்னர் துங்கர்பூர் சமஸ்தானத்திலிருந்து அருகில் உள்ள சந்திராப்பூர் சமஸ்தானப் பகுதிக்கு கோவிந்தகிரி குடிபெயர்ந்தார்.அங்கு தனது சகோதரனின் விதவை மனைவியை மணந்தார். அங்குள்ள ஒரு இந்து துறவியிடம் சீடராக சேர்ந்து கொண்டு, தனது பெயரை கோவிந்தகிரி எனும் மாற்றிக் கொண்டார்.

செயற்பாடுகள்

சமூக மற்றும் சமய நிலைகள்

பில் மக்கள், லம்பாடி போன்ற பழங்குடி மக்களின் ஒழுக்கம், சமூக மற்றும் சமய வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக கோவிந்தகுருவே கள், சாராயம் போன்ற மது வகைகளை குடிக்காதும், அசைவ உணவுகளை உண்ணாதிருந்தும் இருந்தார். கோவிந்த குரு பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காக சம்பா சபா எனும் அமைப்பை நிறுவினார். கோவிந்தகுரு ஓரிறை கோட்பாட்டை வலியுறுத்தினார். கள் மற்றும் மாமிசம் உண்ணாமை, நிதானத்தை கடைபிடித்தல், குற்றங்களை கைவிடுதல், மூட நம்பிக்கைகளை ஒழித்தல், வேளாண்மை செய்தல் போன்ற நற்பழக்கங்களை பழங்குடி மக்களிடையே வலியுறுத்தினார். தங்களுக்கான தீ வழிபாட்டுச் சடங்குகளையும், வீடுகளில் கட்டுவதற்கு கொடியை அறிமுகப்படுத்தினார்.

## அரசியல் செயற்பாடுகள்

பிரித்தானிய இந்தியாவின் ஆட்சியின் கீழிருந்த பான்ஸ்வாரா சமஸ்தானம், சந்திராப்பூர் சமஸ்தானங்களின் நிலக்கிழார்கள் பழங்குடி மக்களின் உழைப்பை சுரண்டுவதற்கு கோவிந்தகுரு கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார். ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள நிலங்கள் அனைத்தும் பில் பழங்குடி மக்களுக்கே உரிமையானது என்று போதனை செய்தார். மேலும் 800 ஆண்டுகளுக்கு முன்னர் பில் இராச்சியம் இருந்ததை மக்களுக்கு நினைவுபடுத்தினார்.

## ஆதரவும் எதிர்ப்பும்

கோவிந்தகுரு ஆரவல்லி மலைத்தொடர் பகுதிகளில் இருந்த சந்த் சமஸ்தானம், துங்கர்பூர் சமஸ்தானம் மற்றும் பான்ஸ்வாரா சமஸ்தானம் மற்றும் பிரித்தானிய இந்தியாவின் கீழிருந்த பஞ்சமகால் மாவட்டப் பகுதிகளில் இருந்த பில் பழங்குடி மக்களை பெரிய அளவில் ஒன்று திரட்டினார். கோவிந்தகுருவின் போதனைகளால் பழங்குடி மக்கள் கள் மற்றும் சாராயம் போன்றவைகள் குடிப்பதை நிறுத்தியதால், சமஸ்தானங்களுக்கு பெரிய அளவில் நிதி இழப்பு ஏற்பட்டது. இதனால் கோவிந்த குரு மீது சமஸ்தான மன்னர்கள் வெறுப்புற்றனர்.

## முதல் கைது மற்றும் விடுவிப்பு

மது விலக்கு பிரச்சாரம் செய்தமைக்காக துங்கர்பூர் சமஸ்தான காவலர்கள் கோவிந்தகுருவை 1912-இல் கைது செய்தனர். கைது காரணமாக அவரைப் பின்பற்றுபவர்களை ஏமாற்றியதாக அரசு குற்றம் சாட்டியது. மேலும் அவருடைய சேமிப்பைப்



பறிமுதல் செய்தது மற்றும் அவரது மனைவி மற்றும் குழந்தையை சிறையில் அடைத்து அவரது இயக்கத்தை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்தது. இருப்பினும் ஏப்ரல் 1913-இல் துங்கர்பூர் சமஸ்தானம் கோவிந்தகுருவை நிபந்தனையின்றி விடுவித்தது.

## மன்காட் மலை நிகழ்வுகள்

இதர் சமஸ்தானப் பகுதியின் சந்த் சமஸ்தானம் மற்றும் பான்ஸ்வாரா சமஸ்தானத்தின் மன்காட் மலைக்குன்றுகளில் தனது ஆதரவாளர்களுடன் தங்கியிருந்த கோவிந்தகுருவை இதர் சமஸ்தானத்தின் காவலர்கள் பிடிக்க முயன்றனர். 31 அக்டோபர் 1913 அன்று கோவிந்தகுருவை அவரது ஆதரவாளர்களையும் சந்த் சமஸ்தானத்தின் இரண்டு காவலர்களை கோவிந்தகுருவும் அவரது ஆதரவாளர்களும் பிடித்தனர். 1 நவம்பர் 1913 அன்று பிரித்தானிய இந்தியாவின் ஆயுதப்படைகளுடன் உதவியுடன் வந்த சமஸ்தானங்களின் படைகள் பான்ஸ்வாராவில் உள்ள பில் மக்களின் வீடுகளை சூறையாடி, 1,500 பில் மக்களை கொன்று குவித்தும், கைதும் செய்தனர். 17 நவம்பர் 1913 அன்று மன்காட் மலைக்குன்றுகளில் இருந்த கோவிந்தகுரு மற்றும் அவரது ஆதரவாளர்களை பிடிக்கும் முயற்சியில் பல பில் மக்கள் மாண்டனர் மற்றும் கோவிந்தகுருவும் அவரது ஆதரவாளர் ஒருவரும் பிடிபட்டார்.

## சிறை தண்டனை

மன்காட் மலைக்குன்றுகளில் பிடிபட்ட கோவிந்தகுரு மற்றும் ஆதரவாளர்களை 2 பிப்ரவரி 1914 அன்று நீதிமன்றத்தில் நிறுத்தினர். நீதிமன்றம் கோவிந்தகுருவுக்கு தூக்குத் தண்டனையும், அவரது ஆதரவாளர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்தது. மேல்முறையீட்டால் கோவிந்தகுருவின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

## பிந்தைய வாழ்க்கை

1919-இல் அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் கோவிந்தகுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். கோவிந்தகுரு 30 அக்டோபர் 1931 அன்று இறக்கும் வரை தற்கால குஜராத் மாநிலத்தின் பஞ்சமகால் மாவட்டத்தின் லீம்புடி அருகில் உள்ள காம்போய் கிராமத்தில் காலத்தை கழித்தார்.

## மரபுரிமை பேறுகள்

31 சூலை 2012 அன்று குஜராத் அரசின் முதலமைச்சர் நரேந்திர மோதி, கோவிந்தகுரு சமாதி இருக்கும் காம்போய் கிராமத்தில் கோவிந்தகுரு பெயரில் ஒரு பூங்கா ஒன்றை நிறுவினார். 1 நவம்பர் 2022 அன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி கோவிந்தகுருவின் நினைவிடத்திற்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் இராஜஸ்தான் மாநிலத்தின் மன்கர் தாம் பகுதிக்குச் சென்று கோவிந்த குருவின் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்தினர். கோத்ரா நகரத்தில் கோவிந்தகுரு பெயரில் சிறி கோவிந்த குரு பல்கலைக்கழகம் 2015-இல் நிறுவப்பட்டது.



குழந்தை நட்சத்திரமாக ஏராளமான படங்களில் நடித்து இருந்தவர் அனிகா சுரேந்திரன். தற்போது வளர்ந்துவிட்ட அவர் ஹீரோயினாக படங்களில் நடிக்க தொடங்கி இருக்கிறார்.

அனிகா தற்போது சேலையில் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

பச்சை நிற அழகிய சேலையில் போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்கள் இதோ.

# தூய்மைப் பணியாளர் பத்மாவை வீட்டிற்கு அழைத்து தங்க செயின் பரிசளித்த ரஜினி




சென்னை தியாகராய நகர் வண்டிக்காரன் சாலையில் பத்மா என்ற தூய்மையாளர் கடந்த 11-ந்தேதி தூய்மை பணியில் ஈடுபட்டு இருந்தார். அப்போது குப்பையோடு கிடந்த கவர் ஒன்றில் இருந்த 45 சவரன் தங்க நகைகளை கண்டெடுத்தார்.

இதை அடுத்து அந்த தங்க நகைகளை பாண்டிபஜார் காவல்நிலையில் ஒப்படைத்தார். ஏழ்மையான சூழலிலும் பத்மாவின் இந்த நேர்மையான செயல் பலராலும் பாராட்டப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அழைத்து பாராட்டி பத்மாவுக்கு ரூ.1 லட்சத்துக்கான காசோலையை வழங்கினார். மேலும் பல்வேறு தரப்பினரும் பத்மாவை பாராட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், நடிகர் ரஜினிகாந்த், பத்மாவை நேரில் அழைத்து பாராட்டினார். பத்மாவின் செயலை பாராட்டிய ரஜினிகாந்த் அவருக்கு பொன்னாடை போர்த்தி தங்க செயினை பரிசாக அளித்தார். மேலும் பத்மாவுடன் கலந்துரையாடினார். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# திரைத்துறையில் 25 ஆண்டுகள்: சினிமாவுடனான என் காதல் பயணம் தொடர்கிறது



தமிழ் திரையுலகில் இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என பன்முகத்தன்மை கொண்டவர் கவுதம் வாசுதேவ் மேனன். இவர் இயக்கத்தில் வெளியான பல திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்றுள்ளன.

இந்த நிலையில், இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் திரைத்துறையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இதையொட்டி சில தினங்களுக்கு முன் சிறப்பு இசைக்கச்சேரி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் திரைத்துறையை சேர்ந்தவர்கள் மற்றும் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில்,"கால் நூற்றாண்டு காலக் காட்சிகளும் உணர்வுகளும்: திரைப்படம் என்பது வெறும் அசைவு படங்களை பதிவு செய்வது மட்டுமல்ல, அது காலத்தையே பதிவு செய்வது என்று அடிக்கடி சொல்லப்படுவதுண்டு. நான் முதன்முதலில் "ஆக்ஷன்" என்று குரல் கொடுத்த நாளிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் இந்த தருணத்தில், கடந்து போன காலத்தால் அல்ல, அந்த காலம் எனக்கு வாரி வழங்கிய நினைவுகளின் பெருக்கத்தால் நான் திக்குமுக்காடி போகிறேன்.

இந்த அற்புதமான, சவால்கள் நிறைந்த துறையில் இருபத்தைந்து ஆண்டுகள் என்பது ஒரு தனிப்பட்ட சாதனை அல்ல. அது, என்னுடன் பயணித்த எண்ணற்ற தனிநபர்களின் கனவுகள், அர்ப்பணிப்பு மற்றும் திறமையால் நெய்யப்பட்ட ஒரு கலைப்படைப்பு. எனது ஆழ்ந்த நன்றியும் அன்பும் கலைஞர்களுக்கே உரித்தானது: என் மனதில் இருந்த கற்பனை கதாபாத்திரங்களுக்கு ஒரு ஆன்மாவையும், ஒரு குரலையும், ஒரு இதய துடிப்பையும் வழங்கிய நடிகர்களே. என் வார்த்தைகளுக்கு நீங்கள் உயிர் கொடுத்தீர்கள்; பல சமயங்களில், கதாபாத்திரங்களில் நான் உணராத ஆழங்களை கண்டறிந்தீர்கள்.

என் படக்குழுவினருக்கு: இருபத்தைந்து ஆண்டுகளாக என்னுடன் கேமராவுக்கு பின்னால் நின்ற, என் கற்பனையின் அமைதியான சிற்பிகளே, உங்களுக்கான என் நன்றியும் மரியாதையும், சினிமா மீது நாம் கொண்டுள்ள அன்பை போலவே ஆழமானது.

நான் ஜாம்பவான்களின் தோள்களின் மீது நிற்கிறேன்; யாருடைய படைப்புகள் எனக்குள் அந்த தீப்பொறியை பற்ற வைத்ததோ, அந்த திரைப்பட மேதைகளுக்கும், என் ஆரம்ப கால படிகளுக்கு வழிகாட்டிய என் வழிகாட்டிகளுக்கும் - எனக்கு வழி காட்டியதற்கு நன்றி.

என் சமகாலத்தவர்களுக்கும் சக இயக்குநர்களுக்கும், உங்கள் படைப்புகள் தினமும் எனக்கு சவாலையும் உத்வேகத்தையும் அளிக்கின்றன. கதை சொல்லும் இந்த பொதுவான பயணத்தில் நாம் பகிர்ந்துகொள்ளும் தோழமை விலைமதிப்பற்றது.

இறுதியாக, என் அன்பான ரசிகர்களுக்கு. என் கதைகளை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொண்டீர்கள், என் கதாபாத்திரங்களை உங்கள் உரையாடல்களில் வாழ அனுமதித்தீர்கள், நான் சித்தரிக்க முயன்ற அன்பு, மோதல்கள் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை தழுவிக்கொண்டீர்கள். உங்கள் அங்கீகாரமே எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வெகுமதி.

#YennoduVaaVeeduVaraikkum இசை நிகழ்ச்சியில் ஒரு நம்பமுடியாத மற்றும் மறக்க முடியாத இரவை வழங்கியதற்கு நன்றி.

நான் ஏன் இதை செய்கிறேன் என்பதை அறிந்துகொள்ள அது ஒரு ஆத்மார்த்தமான நினைவூட்டலாக இருந்தது.

சினிமாவுடனான என் காதல் பயணம் தொடர்கிறது. அடுத்த காட்சி காத்திருக்கிறது...," என குறிப்பிட்டுள்ளார்.



நடிகை பிரியங்கா மோகன் தற்போது முன்னணி நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். அவர் படங்களில் ஹோம்லியாக தான் நடித்து வருகிறார். இருப்பினும் அவ்வப்போது கிளாமர் உடைகளில் போஸ் கொடுத்து இன்ஸ்டாவில் வெளியிடும் போட்டோக்களுக்கு அவரது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு அதிகம் கிடைத்து வருகிறது.

இந்நிலையில் நகைக்கடை திறப்பு விழா ஒன்றில் கலந்துகொள்ள பிரியங்கா மோகம் செம ஹாட் உடையில் வந்திருக்கும் ஸ்டில்கள் இதோ.

# துரந்தர் பார்ட் 2 ரிலீஸ் அப்டேட்




இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங், மாதவன், அக்ஷய் கண்ணா, சாரா அர்ஜுன் உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான படம் 'துரந்தர்'. இத்திரைப்படம் உலகம் முழுவதும் சுமார் ரூ.1350 கோடிக்கும் மேல் வசூலித்து மெகா ஹிட் ஆனது. மூன்றரை மணி நேரம் நீளம் கொண்ட இந்த படம் இந்தியா-பாகிஸ்தான் எல்லை பதற்றத்தை மையமாகக் கொண்டு, இந்திய உளவுத்துறை மேற்கொள்ளும் ரகசிய மிஷன் குறித்த விறுவிறுப்பான கதையாகும்.

திரையரங்குகளில் வெளியாகி இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், கடந்த ஜனவரி 30ஆம் தேதி இந்தப் படம் இந்தி மட்டுமின்றி தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளிலும் நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியானது. இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் வெளியாக இருப்பதும், இதற்கான பணிகள் கிட்டத்தட்ட முழுமை பெற்றுவிட்டதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், "துரந்தர்: தி ரிவெஞ்ச்" (Dhurandhar: The Revenge) திரைப்படம் வருகிற மார்ச் 19ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், இந்தப் படத்தின் டீசர் இன்று வெளியாகிறது. துரந்தர்: தி ரிவெஞ்ச் திரைப்படம் இந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடா மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் உலகளவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

துரந்தர் திரைப்படம் பெரும் வெற்றி பெற்ற நிலையில், இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்திற்கான ரிலீஸ் தேதி அறிவிப்பு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.








Landbazzar
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes
5 APPOINTMENTS ONLY
97900 21367

ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

WANTED
CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979

WANTED
- MARKETING MANAGER
- ACCOUNTANT
- CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
- PLASMA & BENDING OPERATOR
- LATHE MILLING MACHINERY OPERATOR
AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750

Looking for CCTV Network ENGINEERS & TECHNICIANS for a 2000 plus Camera - CCTV Project across Tamilnadu and Kerala.
Apply with your Biodata to
8086660679
via whatsapp or Mail id:
jobs.groupdivine@gmail.com
We are also looking for SUB-CONTRACTORS
Send details to 8086660679
via whatsapp or Mail id:
info@groupdivine.in

PHARMACIST REQUIRED
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

ஆட்கள் தேவை
மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு
40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

அசோக்நகரில் உள்ள
மாயா நர்சிங் ஹோம்க்கு
அருகில் வசிக்கும்
வார்டு பாய்
ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

MOUNT HOSPITAL
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS
730 530 5231

அசோக்நகரில் உள்ள
மாயா நர்சிங் ஹோம்க்கு
அருகில் வசிக்கும்
வார்டு பாய்
ஆயாக்கள் தேவை
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

POWERCARE SOLUTIONS PVT. LTD
(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE)
Ct: 89259 93101, 91766 85440

கேரளாவில் உள்ள
பிரபல
ஹோட்டலுக்கு
அனுபவமுள்ள
தோசை மாஸ்டர் &
டீ மாஸ்டர் தேவை
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள்
ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்
பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

SHANMUGA PRIYA
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
TELE CALLERS
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

ST COURIER®
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை. (ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)
தகுதி: 10 வது,12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

Aruvi
SUPERMART
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY







## விழிப்புணர்வு

மாந்தர்களே நாம்
உறங்கிவிட்டால்
பிரச்சனைகள்
விழித்துக்கொள்ளும்!
நாம் விழித்துக்
கொண்டால்தான்
பிரச்சனைகள் தூங்கும்!

இங்கே உறக்கத்திலும்கூட
விழித்திருக்க வேண்டிய
காலச்சூழலில் தான்
வாழ்கிறோம் என்பதை
எப்படி மறுக்க முடியும்?

சுடுகாட்டில் எரிகின்ற
பிணங்கள் கூட
எழுகின்றன வெட்டியான்
அடித்தால் தான் வீழ்கின்றன!

இமைப்பொழுதும்
சோராமல் மீன்கள்
விழித்திருந்தாலும்
கூடச்சமயத்தில்
தூண்டிலில் அகப்படுகின்றன!

பார்ப்பதற்குப்புதை குழிகள்
கூடச்சமமாகத்தான்
காட்சியளிக்கின்றன
கால் வைத்தால்தானே
இன்னல் புரிகிறது!
பார்வையற்றவர்களின்
புற உலகு இருண்டிருந்தாலும்
அக உணர்வு
சுடர் விடுகின்றது!

மாலுமி எவ்வளவு தான்
விழித்திருந்தாலும்
திமிங்கலம் கப்பலைக்
கவிழ்த்து விடுகிறது
யானையைக் குழிவெட்டி
பிடிப்பதைப்போல்நம்மைச்
சுற்றிலும் மாயக்குழிகள்
தோண்டப்பட்டிருக்கலாம்!
இரவு நேரத்தில் காட்டுப்புதரில்
கைவிளக்கு கொண்டு
செல்வது மட்டும்
விழிப்புணர்வு அல்ல!
எடுத்து வைக்கும்
ஒவ்வொரு அடியும்
சீரிய சிந்தையோடும்
உணர்வோடும்
வைக்க வேண்டும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

## மனம்

காய்ந்துபோன மனதினிலே
சருகான அவள் நினைவு

பார்த்த அந்த முதல் நாளின்
பிரதி பிம்பம் அவள் நினைவு

பார்க்க முயன்று
பார்ப்பதை அறிந்து
பக்கம் பார்த்த அந்நாளும்

பார்ப்பதை அறிந்து
பக்கம் சென்று பூத்த
மலராய்
முகமலர்ந்த நாளும்

தினம் பார்க்க மனம்
விழைந்து காதல் சொன்ன
திருநாளும் மலர் கூட மாலை
போலும் மனம் கூடி மணம்
கொண்ட நாளும்

தினம் வாழ்ந்து உடன்
சேர்ந்து அவள் தந்த
மழலைகளும்

வாழ்வென்றால் இதுவன்றோ
வாழவேண்டும் இப்படியன்றோ



என்றேதான்
ஆகிடவேண்டும்
ஊரார்க்கு ஒரு
சான்றாய்

**ஓம் குமார் P N**
மதுரை

## மனிதநேயம் ஒன்றுதான் மனிதனுக்கு அழகு !

சாதியின் பெயரால் மோதுவது முறையோ ?
சகோதர வால்வவைச் சிதைப்பது தகுமோ ?

உயர்ந்தவன் தாழ்ந்தவன் சாதியில் இல்லை !
உயர்ந்தவன் தாழ்ந்தவன் சிந்தையில் உண்டு !

உலகில் பிறந்த மனிதர்கள் யாவரும் ஓரினம் !
என்று அன்றே உலகிற்கு உரைத்தவன் தமிழன்!

ஒரே ஊருக்குள் சாதிச் சண்டை நடந்தால் !
உலகம் சிரிக்கும் நம்மைப் பார்த்து !

வெட்டுவதும் குத்துவதும் விவேகம் அன்று !
வீணாக சண்டையிடுவது பகுத்தறிவு அன்று !

விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் இனிக்கும் !
வீரமென்று மோதி வீழ்ந்தால் கசக்கும் !

சொந்தமாக சிந்தித்தால் சண்டை வராது !
சிலர் தூண்டி விட மோதுவது முட்டாள்தனம் !

உயர்திணை மனிதன் அக்றிணையாகலாமா !
ஒரு போதும் மனிதன் விலங்ககாகக் கூடாது !



விலங்குகள் கூட தன இனத்தை அழிப்பதில்லை !
மனிதன்தான் தன் இனத்தை அழிக்கின்றான் !

மனிதநேயம் ஒன்றுதான் மனிதனுக்கு அழகு !
மனிதன் மனிதனாக வாழ்வதே நன்று !

## உலகம் பாராட்டும் ஒப்பற்ற தமிழன் !

தரணியில் தமிழராகப் பிறந்ததற்கு ஒவ்வொரு
தமிழரும் மனதளவில் பெருமை கொள்வோம் !
உலகின் முதல் மொழி நம் தாய் மொழி தமிழ் !
உரைப்பது அமெரிக்காவின் மொழி ஆய்வாளர்!

உலகப் பொதுமறையை உலகிற்கு தந்த மொழி!

உலகம் வியக்கும் ஒப்பற்ற மொழி நம்தமிழ் !

திருக்குறள் வழி நடந்து பாருங்கள் !
தித்திக்கும் வாழ்க்கை வசமாகும் !

ஆத்திசூடி படித்துப் பாருங்கள் நீங்கள் !
அத்தனையும் அற்புதம் சொல்அமுதம் !

கொன்றைவேந்தன் படித்துப் பாருங்கள் !
குவலயத்தில் சிறப்பாக வாழலாம் !

தொடக்கக் கல்வி தமிழில் கற்றவர்களே !
தொட்டார்கள் சிகரம் சாதனைகளில் !

பயிர் வளரத் தேவை இயற்கை உரம் !
உயிர் வளரத் தேவை இனிய தமிழ்உரம் !

பண்பாடு பயிற்றுவிகக்கும் தமிழ் !
பண்பாடு உலகிற்கு உணர்த்தும் தமிழ் !

வந்தாரை வரவேற்பவன் தமிழன் !
வாய்ப்பு வழங்கி உதவுபவன் தமிழன் !



உலகம் முழுவதும் வாழ்பவன்
தமிழன் ! உலகம் பாராட்டும்
ஒப்பற்ற தமிழன் !

சாதி மதம் உடன் மறப்போம் !
சங்கத் தமிழால் இணைவோம்!

**கவிஞர் இரா .இரவி !**


## சிங்காரச் சென்னை

சின்னப்பாப்பா சின்னப்பாப்பா
கொஞ்சம் பேசலாம்"
சிங்காரச் சென்னையை நாம்
சுற்றிப் பார்க்கலாம்!

கண்ணைக் கவரும்
மெரினாவில் கடலில் ஆடலாம்
கல்லூரிகள் பல உண்டு கற்று
உயரலாம்"

விண்ணைமுட்டும்
கட்டிடங்கள் வியந்து
ரசிக்கலாம் விடியல் தேடி
வந்து வாழ வழியும் தேடலாம்'

மன்னர் ஜெயின்ட் ஜார்ஜினால்
சென்னையானது மதராசு
பட்டணம் என்ற பெயரும்
இருக்குது!



பண வேட்டை,
தொழிற்பேட்டை, பலவும்
நடக்குது பாரிமுனையில்
கந்தகோட்ட கடவுள் காக்குது!

பங்கிங்காம் பழவேற்காடு
கூவம் நீர் நிலை பல இருக்க
செம்பரம் பாக்கம் காக்குது.

மன்றம் பல காப்பகமாய்ப்
பலவும் நிக்குது. மகிழ்ந்து
திரைப் படத் தொழிலில்
முதன்மை சேர்க்குது.
எங்கிருந்தும் மக்கள் கூட்டம்
வந்து இறங்குது
எந்த ஆளும் வேகமாக
இடித்து நடக்குது'

தங்கத் தமிழ் நாட்டிற்கிது
தலைநகரமாம் !தரணிதன்னில்
சென்னை என்றும் பெருமை
கொள்ளுமாம்!

**திருமதி.இரா.இராஜாமணி.**
ஈரோடு.



## என்னைத் தெரியுமா?!

உன்னைப்பார்க்கா விட்டால்
பேசா விட்டால்
அணைக்கா விட்டால்
நினைக்கா விட்டால் என்
விழிகளில் கண்ணீரும்
மனதில் வலியும்
எண்ணத்தில் ஏக்கமும்
கொடிய பசலையும்
என்னை ஆட்டிப் படைக்கிறது
என்றெல்லாம் நீ
சொல்லும் போது கூட நான்
உணரவில்லை!
மெல்ல மெல்ல உன் பிரிவு
உன்னைப்பற்றிய ஏக்கம்
என்னில் படர்ந்த போது
தான் அறிந்தேன்! கா த ல்
எவ்வளவு அழகானதோ
அத்தனைக்கத்தனை
ஆபத்தானதுமென்று!
உன் பிரிவும் சொல்லியது
நாம் பிரிந்திருக்கும் போது
நீ என்னிடம்
காதலைத் தெரியுமா?
*என்னைத் தெரியுமா?!
என்று பரிதவிப்புடன்
கேட்கும் போது
மிக மிக நன்றாகவே புரிகிறது
நீயும் காதலும் எனக்கு
வெவ்வேறல்ல என்று!

---

நீ என்எதிரே வரும்
போதெல்லாம் உன்
விழிகளின் பார்வைகள்
*என்னைத் தெரியுமா?!
என்று திரும்பத் திரும்பக்
கேட்டதால் தான் நான்
உன்னையும் உன்னிடமிருந்து
என் மீது பாய்ந்த
கா த லை யு ம் தெரிந்து
கொண்டேன்!
ஒரு போர்ப்படை போல்
உன் விழிகளிலிருந்து
தொடர்ச்சியாகப் பாய்ந்த
அந்தக்கா த ல் க ணை க ள்
ஒவ்வொரு முறையும்
என்னை வீழ்த்திய பிறகல்லவா
ஓய்கிறது!
அப்படியும் கூட என்னை
மீண்டும் மீண்டும்எழ வைப்பது
*என்னைத்தெரியுமா?!
என்ற உன் பார்வை தானே!

---

சில மங்கையரை நான்
பார்த்தும் பல தேவியர்
என்னைக்கண்டும்
கடந்து சென்றாலும் தேவதை
உன் கண்கள் மட்டுமே
என்னை நேருக்கு நேராயப்
பார்த்ததும் *என்னைத்
தெரியுமா?! என்று கேட்டது!
இத்தனை கவிதைகளைக்
கூடக்கண்களில் வைத்திருக்க
முடியும் என்ற ஓர் அதிசய
அழகிய உண்மையை உன்
விழிகளைக் கண்ட பிறகே
நான் பிரமிப்பாக நம்பினேன்!
என் தொடர் பார்வையோ
கண்களை மட்டுமா?!
என்னையே நீ படிக்கலாம்
என்று உன்னைக்காதலாக்கி
என்னிடம் அழைத்து வந்தது!

---

உத்தம புத்திரனாமே நீ?!
கா த லெ ன் றா ல்
உனக்கு என்னவென்றே
தெரியாதாமே!
ஓர் ஓரப்பார்வை கூடப்
பார்க்கத் தெரியாத
அப்பாவியாமே நீ!
அடப்பாவி
*என்னைத்தெரியுமா?!
உனக்கு! உன்னை
மிக விரைவிலேயே
உத்தம வில்லனாக்குகிறேன்
பார் என்றேல்லாம் பேசுகிறது
சொல்கிறது உன் பார்வை!
இதற்குப் பின்னரும் அமைதி
காக்க என் மனம் எனக்கு
உத்தரவிடுமா என்ன?
விரும்புகிறேன்
வரவேற்கிறேன்
வழி மொழிகிறேன்
காதலிக்கிறேன்
என்றெல்லாம்
சொல்லச் சொல்லி
ஆணையிட்டு விட்டது!
உன் மீது கா த ல் கொண்ட
கா த லை மட்டுமே கொண்ட
என் அன்புள்ளம்!

---

பீட்சா பர்கர் பாஸ்தா நூடுல்ஸ்
இவைகளின் நலன் விரும்பிநீ!
*என்னைத் தெரியுமா?
என்று கேட்கிறாய்!
உனக்கு நான் கொழுப்பு
கோமதி என்று
பட்டம் வழங்கிய பின்னர்
தானே நீ என்னைச்
சுற்ற ஆரம்பித்தாய்!
தேகம் முழுக்கத் திமிர்
பரவியிருந்தாலும்
மனசு முழுக்கக்
கா த லைப்படர விட்டிருக்கும்
என் கவிதைகளின் ராணி நீ!
உன்னை அன்பில் குளிக்க
வைப்பதற்காகவே என்னை
அரசனாக்கிப்பல்லக்கில்
அமர வைத்திருக்கும் அன்பு
தேவதை நீ!
நீ உத்தரவிடுவதற்கு
முன்னதாகவே என்
மு த் த ங் க ள் கடமை
செய்யக் காத்திருக்கும்!



இதை விடக்கா
த லை
அலங்கரிக்க
வேறென்ன
வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## அருணகிரித் தமிழ்

முத்துத் தமிழ் சந்தம் பாடிட
முந்தித் திரு வருளைப்
பொழிந்திடும் சிந்துத் தமிழ்
தந்தாய் இங்கு அருள்வாயே.!

நித்தம் புதுக் கவிதைகள்
பாடியும்.. நீடுத் தமிழ்க்
கவியால் பரவியும்..
நின்னைச் சரண் அடைந்தேன்
இங்கு வருவாயே.!

சித்தம் தனில் உந்தன்
நினைவுகள்.. சிந்துக் கவி
சிந்தும் பறவைகள்..
நித்தம் உனைத் தேடித்
திரிவதை அறியாயோ..

புத்தம் புது உணர்வுகள்
பொங்கிட..புதுமைக் கவி
உலகில் தங்கிட..பித்தன்
எனக்காக ஒருமுறை
வருவாயோ!

*எட்டுத் தொகைப் பத்துப்
பாட்டென..இலங்கும் கவி
சிலம்பின் ஒலியென..
எதுவும் தரவில்லை.! எனக்கு
அருள்வாயோ

கொட்டும் மழைக் கம்பன்
பாட்டென..கூவும் குயில் பாரதி
இசையென..ஒற்றைக்கவி
தந்தேனில்லை பொறுப்பாயோ?

பட்டுச் சுடர் பரவும்
தாசனின்..
வெட்டும் கூர்ப் பாட்டுத்
தீயினை..தொட்டும்
ஒரு பாடல் தந்திட
மறந்தேனே..

கட்டுக் கரை மீறிடும்
ஆசையில்..
கவிதை என ஏதோ
எழுதினேன்கிட்டே வந்து ஒரு
முத்தம் தந்திடு முருகோனே.!

*சுற்றும் புவி நின்றே
கேட்கட்டும்..சூழும் புயல் வீசிட
வாழ்த்தட்டும்..சற்றே மயில்
வாகனம் மீதினில் வருவாயே.!

குற்றம் குறை எனக்குள்
ஆயிரம்.. கூறும் தமிழ் ஒன்றே
பாயிரம்.. குமரா இதைக்
கருத்தில் கொண்டு பார்ப்பாயே

வற்றும் நதி மழைவர பாயுமே
வருடும் முகில் மொட்டுகள்
விரியுமே.. சற்றேநீ அதுபோல்
என்னுள் வருவாயே.!



அற்றே விழும் வாழ்க்கைச்
சாலையில் அருணகிரி
அருளால் பாடுவேன்
அழகா! மலைக் குமரா!
எனக்கு அருள்வாயே.!

**வே.கல்யாண்குமார்.**


## அழகு !

சாலையில் செல்லும் பெண்
ஓரக் கண் பார்வையில்
பார்த்தால் போதும்...
உடனடியாக
தெருவோரத்தில்
நிற்கும் இரண்டு
சக்கர வாகனத்தின்
கண்ணாடியை திருப்பி
தன் தலைமுடியை கோதி
விடுவதும்.
ஒரு சிலிர்ப்பு சிலுப்பி



தன் உடையை சரி
பார்த்துக் கொள்வதும்...
வாலிப
விடலைகளுக்கு
கைவந்த கலை !

**எம்.பி.தினேஷ்.**
கோவை




## உன்னால் வந்தது உலகே வியந்தது.

காஞ்சி தந்த காவிய
தலைவன்! அண்ணா என்ற
அருந்தவபுதல்வன்!
பொன்மொழி தந்த
செந்தமிழ்புலவன்!
வாழ்வியல் தத்துவம்
கூறியவள்ளுவன்!

கடமை கண்ணியம்
கட்டுப்பாடு என்ற
தரகமந்திரத்தை எப்போது
உச்சரி! மாற்றான் தோட்டத்து
மல்லிக்கும் மணம் உண்டு
என்பதை உணர்ந்தறி!
கத்தியை தீட்டாதே
உன்புத்தியை தீட்டு என்ற
வன்முறையை கலைந்து எரி.!

எதையும் தாங்கும் இதயம்
வேண்டும் என்றால் உனக்கு
உயர்வடி! அறிவையும்
ஆற்றலையும் வளர்த்திட
நீபடி!
உழைப்பால் என்று
உயர்ந்திடலாம் என்பதை
அறிந்து உழைக்கும்படி!
வியர்வை சிந்தி உயர்வை
சந்தி. பகுத்தறிவு என்னும்
பாடம்படி!
பகுத்து அறிந்து நடக்கும்படி!
அன்பும் பண்பும் கண்கள்
போலே! அறிவும் தெளிவும்
பெண்களாலே! பெண்கள்
வீட்டின் கண்கள் என்று
படித்தால் சாதி ஒழியும் என்று!
பெரியார் வழி;யில் சொன்னாய்
அன்று!

வாழ்க்கை என்னும் பாறையை
அறிவு என்ற உளியாலே!
அழகிய சிற்பமாய் நீ செதுக்கு!

பதர்தனை நீக்கி நெல்லை
எடு! பிதற்றலை நீக்கி
சொல்லை எடு!
அடுக்குமொழியில் நீபேசி
மூளைமுடுக்கு எங்கும்
ஒலிக்கசெய்தாய்!

ஏழையின் சிரிப்பில்
இறைவனை காணலாம்.!
ஒன்றே குலம் ஒருவனே



தேவன் என்பது
எல்லாம்
உன்னால் வந்தது
உலகே வியந்தது.!!!

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**



## கவிஞனின் காதல்

பத்து ரூபா பவளம் பகட்டுதே
உன் கழுத்தில்...

சில்லரைக்கு வாங்கிய
சிமிக்கி சினுங்குதே உன்
காதில்..

மரிகொழுந்தும், மல்லியும்
பயக்குதே உன் பின்
தலையில்...

பத்து ரூபா உதட்டு சாயம்
பகட்டுதே உன் உதட்டில்...

சில நூறு ரவிக்கைசிலையாய்
காட்டுதே முன் அழகை...

உள்ளாடை உன் கற்பை
ரானுவ வீரனைபோல்
காத்திருக்கே ....

பல நூறு புடவை கட்டி
பரவசமா உன் அழகை கூட்டி
போனவனையெல்லாம் பொரி
கலங்க வச்சிருக்கே...

பெண்ணா பிறந்ததாலே
இந்த பூமியே
வாழ வச்சி இருக்கே...
எத்தனை முறை உன்னை
வர்ணிக்க வார்த்தைகள்
அருவி நீராய் கொட்டுதடி...



நீ திரும்பும்
திசையெல்லாம்
காதல் புயலாய்
கிளம்புதடி....!!

**பொன். கருணா**
நவி மும்பை

## கடந்து போகும்


உலகமே நம்மை
வெறுத்தாலும்
ஊரே பகையானாலும்

வினை வந்து சூழ்ந்தாலும்
வீண் பழிகள் நேர்ந்தாலும்

நட்பே துரோகம்
ஆனாலும் நடு முதுகில்
குத்தினாலும்

எதை நாம் பெற்றாலும்
எதை நாம் இழந்தாலும்

இதுவே இறுதியானது அல்ல



என்பதை மட்டும்
நம்புவோம்

"எதுவும் கடந்து
போகும் "

**ம. இந்திராணி**
திருச்சி

## ஞானக்கூக்கூ....

மொழியை அறியாதவர்கள்
மொழியைப் பற்றி பேசி
மொழியை அழிக்கிறார்கள்..

நாளுக்கு நாள் புத்தகங்கள்
உதயமாகிக்கொண்டிருக்கின்றன
இல்லத்தில் உறங்க..?
முரண்பாடுகளை
கலையாமல் முட்டுக்கட்டை
போட வருகிறது தேர்தல்...!

விலைவாசி ஏறிப்போச்சு
கூடுதலா போட்டுக்
கொடுப்பா....வாக்களிக்க
பணம் ?
தங்கத்தை நேசிப்பதால்



தங்கத்தின்
விலை
ராக்கெட்டில்
பறக்கிறது !

**நல.ஞான பண்டிதன்**

## கனா.!

வட்ட நிலா பொழியும்
தினமொன்றின்.. வெட்ட
வெளிச்சத்தில்.. அலறி
ஆர்பாட்டமிடுகின்றன
ஆட்காட்டிகள்...
திண்ணையில் நிலைதப்பி
கிறங்கிக்கிடக்கும் பாட்டி...
அரக்கப்பறக்க
வாரிச்சுருட்டி எழுந்து...
யாரோ அரியள்ளிப்போக
கள்வன் புகுந்ததாய்....
கவண் கல்லென வசவுச்



சொற்களை
வாரி
வீசியெறிகிறாள்..
பாவம்..
பாடுபட்ட
காடு..
கைமீறிச்
சென்று கட்டிடக்காடாகிய
கதை அறியா பேதை
அவள்!–

**க.குமாரகுரு,**மயிலாடுதுறை






## "அடமானத்தில் அவள் மானம்"

மருத்துவமனை வேள்வியில்
மணாளன் உயிர் காத்திருக்க,
வீட்டுக்குள் அவளுயிர்
மௌனமாய் இறந்தது!

தொட்டுத்தாலி கட்டினான்
அன்று சந்தோஷச் சேர்க்கை!
கட்டிய தாலியின்று
சாவோடு உடன்படிக்கை!

அடமான வேள்விகாய்
அவள் தாலி கழன்ற
வினாடியில் அவளுள்ளம்
கிள்ளப்பட்ட குழந்தை
போல்
கதறிக் கிழிந்தது.

கணவனின் மூச்சு
ஒவ்வொரு விநாடியும்
கணக்குப் புத்தகமாக
மாறியதால்
கண்ணீர் விழவில்லை!
வலிக்கு நேரம் இல்லை!

தங்கம் எடையிடப்பட்டது
அவள் மங்கல சாட்சி
விலைக்குள் விழுந்தது!
அவள் நம்பிக்கை
அடகு வைக்கப்பட்டது!

எமனின் பாசக் கயிற்றுக்கு
எதிராகப் பாய்ந்தது
பத்தினியின் தாலிக்கயிறு!



தாலி போனது...
கழுத்து லேசானது
ஆனால் அவள்
மனசாட்சி
உயிரோடு
சுடுகாடானது

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



குழந்தைப் பாடல்

## முறுக்கு!

முறுக்கு முறுக்கு முறுக்கு
அம்மா செய்த முறுக்கு
அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்துசெய்த முறுக்கு!
கலந்துசெய்த முறுக்கு!!

முறுக்கு முறுக்கு முறுக்கு
மணப்பாறை ஊரில் தானே
மாண்பாய்ச் செய்த முறுக்கு!
மாண்பாய்ச் செய்த முறுக்கு!!

முறுக்கு முறுக்கு முறுக்கு
உடலைக் கெடுக்காமல்
நன்மைசெய்யும்
வீட்டில் செய்த முறுக்கு!
வீட்டில் செய்த முறுக்கு!!

முறுக்கு முறுக்கு முறுக்கு
தம்பிப் பாப்பா தாத்தாவும்
விரும்பி உண்ணும் முறுக்கு!
விரும்பி உண்ணும் முறுக்கு!!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கனவிலும் நீ தானே

கருமேகம் உன்னை பார்த்து
மழையாய் பொழிகிறதே...!

மழை துளி உன்
கன்னத்தில் கண்ணாடியாய்
தெரிகிறதே....!

கும்மிருட்டில் கூட உன் மேனி
தங்கமாய் சொலிக்கிறதே...!

மூடிய இதழ் விரிந்தபோது
சொர்க்கம் தெரிகிறதே...!

சிந்திய வெண்ணீர் முத்தாய்
வளர்கிறதே....!

இனையாத ரயில் பாதை
முட்டிக்கொள்கிறதே.....!

கண் மூடி தூங்கினாலும்
இதயம் துடிக்கிறதே....!
உன்னை கட்டி



அனைக்கும்போது
கவலைகள்
பறந்து மறந்து
போகிறதே....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## சூரியனும், சூரியகாந்தியும் ரகசிய காதல்...

நானோ– பச்சை நிற
சேலையில் சிவந்து
மலர்ந்து நிற்கிறேன்
பூமியில்!

நீயுயோ– வெள்ளை மேகநிற
வேட்டியில் சிவந்து
உதயமாகிறாய் வானில்!

நானோ–மேக தூதர்களை
அழைத்து என் காதலைச்
சொல்லி தூது விட்டேன்!

நீயுயோ– வான தேவதையிடம்
உன் காதலை
முத்த மழையாக
அனுப்பி வைத்தாய்!

நானோ– என்
தேகம் சிலிர்க்க உன்
வெப்பத்தை தேடினேன்!

நீயோ– மழையை நிறுத்தி
உன் சூரிய கதிர்களால்
என்னை அணைத்துக்
கொண்டாய்! யாருக்கும்
தெரியாமல் ரகசியமாக...

**பாரதி முத்து**
ஓட்டேரி, வேலூர்.

1. பணத்தால் ஆன
உதவிகள் மட்டுமே
பேசப்படுகிறது
மனதால் ஆன உதவிகள்
மறக்கப்படுகிறது

2. கோபப்பட்டு சாப்பிடாமல்
இருந்தால் அது பிறந்த வீடு
கோபப்பட்டு சமைக்காமல்
இருந்தால் அதைப்புகுந்தவீடு

3. மனைவியை ஜெயிக்க
நினைத்தவன் வாழ்க்கையில்
தோற்கிறான் அவளிடம்
தோற்றவன் வாழ்க்கையில்
ஜெயிக்கிறான்

4. வாழ்க்கையில் நாம்
நினைத்தது நடந்தால்
பெருமை கொள்ளுங்கள்
நடக்கவில்லை என்றால்
பொறுமை கொள்ளுங்கள்

5. ஒரு உண்மை பல



பொய்களால்
தோற்றுப்
போனாலும்
ஒரு நாள்
உண்மை பல
பொய்களை
தோற்கடிக்கும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## வருவாயா?

பெண்பார்த்துச் சென்ற
பேரழகா ? சிலிர்த்துப்
பனிக்கட்டியாய் சில்லென
உறைந்திருக்கிறேன்
கதிரவனாய் வருவாயா ?

சில்வண்டு இரைச்சலாய்
சித்தம் இரைந்திருக்கிறேன்
மழையென வருவாயா?

நித்திரையின்றி
நீள்கனவுகளால் நிறைந்து
கொண்டிருக்கிறேன்
நிலவென வருவாயா ?

ஒரிடம் உனக்காய் ஒதுக்கி
வைத்திருக்கிறேன்
ஓவியனாய் வருவாயா ?



வளைபுருவத்தோடு
சீதையாய்
வாசலில்
காத்திருக்கிறேன்
ராமனாய்
வருவாயா?

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## யார்தான் மனிதன்.?

கல்லாய்ப் பிறந்திருந்தால்..
கலை வடிவம்பெற்றிருப்பேன்.!

புல்லாய்ப் பிறந்திருந்தால்..
பூமித்தாய் மகிழ்ந்திருப்பாள்.!

சொல்லாய்ப் பிறந்திருந்தால்..
தூயத்தமிழ் சொத்தாவேன்..!

எல்லாப் பிறப்பும்
எடுத்திளைத்தேன்! இங்கே
மனிதனாய் பிறந்துவிட்டேன்.!

தொட்டால் உணர்வதில்லை
மரப்பாவை அடையாளம்
ஆனதுவே.!

பட்டால் தேய்வதில்லை
படைப்பாளி செதுக்கிவைத்தச்
சிலைகளுக்கு..

விட்டால் நிற்பதில்லை
விழிகளிலே வழிகின்ற ஏழை
சிந்தும் கண்ணீர்த் துளிகள்..

பட்டதனைச் சொல்கின்றேன்..
மனிதருக்கு அடையாளம்
எதுவென்றே..

அன்பிருந்தால்.. அணைக்கும்
கரமிருந்தால்.. இங்கு
அவன்தான் மனிதன்!

பண்புடனே பாரினிலே
பார்த்துநடை போடுகின்ற
பாதங்கள் இருந்தால்
மனிதன்.!

துன்பத்தில் இன்பத்தில்
சமநிலையாய் நிற்கின்ற
துணிவிருந்தால் இங்கு
அவனே மனிதன்.!

என்புதோல்



போர்த்தி
நின்றால்
மனிதனில்லை!
இரக்கமுடன்
இருப்பவனே
இங்கு
மனிதன்.!

**வே.கல்யாண்குமார்.**

## ஏழைப் பெண் ஒரு கனவு கண்டாள்.!

பசியொடு வலியொடு
பாரினில் வாழ்கிற
பாவையே..!
நசிவுடன் நடைபாதை
நடுவிலே வாழ்வது நரகமே..!


கட்டிய கணவனோ
முட்டவே குடித்துப்
வீதியிலே.. வெட்டிய
வாழையாய் பெற்றதோர்
பிள்ளைகள் அழுகையிலே..

குடிசையின் வாசலில்
குத்துயிராக கண்ணீர்
சிந்துகிறாள்.. விடிவினை
காணவே விழிகளில்
நீரொடு வெதும்புகிறாள்.!

ஒருமகன் பசியிலே..
ஒருமகன் நோயிலே..
வாடுகிறார்.. இருப்பது
பாரமோ.. இலைகள்
தாங்குமோ ஏங்குகிறாள்.!

வறுமையில் பூத்தது
வாடியே வதங்குது
வாசலிலே.. தெருவினில்
ஆயிரம் தென்படும் ஏழையர்
வாழ்வரோ.?

**வே.கல்யாண்குமார்.**



குழந்தையின்
அழகிய சிரிப்பு
பள்ளிக்கூடத்திலிருந்து
வரும் மாணவர்களின்
சத்தம்.
காய்கறிக்கார



அம்மாவின்
சத்தம்
ஊர்வந்தும்
மறந்து விட்டது
கண்டக்டரின்
சில்லறை
பாக்கி.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

அடுத்த ஸ்டேஷனில்
இறங்கி விடலாம்..
ஆனால் இதுவரை
உன்னைப் பற்றியே
யோசித்துக் கொண்டிருந்த



நினைப்புகளை
இந்தப் பெட்டி
முழுக்க
நிரப்பி
இருக்கிறேனே..
அவற்றை
என்ன செய்ய..

**ரிஷபன்**

சற்றே வா வெளியே!
உன்னை எழுதிய
கவிதைகளைப் படித்துவிட்டு



பின்னிரவின்
பனிவெளியில்
உக்கிரமாகத்
தேடுகிறது
நிலவு உன்னை
உச்சி முகர.

**கே. பி. ஜனார்த்தனன்**

கண்காணிப்புக் கேமராவை
உடைத்து சுக்கு நொறுக்கி
அலாரத்தைச் செயலிழக்கி
களவாட யத்தனிக்கிறான்

நடமாட்டம் மிகுந்த பகலில்
மிளகாய்ப் பொடியைத் தூவி
பூச்சிக் கொல்லி
தெளிப்பானை கருவிழிகளில்
பீய்ச்சியடித்து அகப்பட்டதை
சுருட்ட முயற்சி

தொப்பை மிகுந்த
காவலரிடம் தப்பிக்க திட்டம்
வகுக்கிறான் உசைன்
போல்ட்டுக்கு சமமாய்
வேகப் பயிற்சி எடுக்கிறான்

அனைத்தையும் ஆண்டவர்
நேரிடையாகப் பார்க்கிறார்



எனும் அச்சப்
போர்வையால்
நேர்மை
கொஞ்சம்
வாழ்கிறது

**பி. பழனி,**
சென்னை.

## ஹைக்கூ

திரவத்தங்கம் திடத்தங்கம்
விலை உயர உயர
ஏழைகளுக்கு துன்பம் !

பிறக்கையில் முகம்
சுளித்தவர்கள் சாதித்தும்
அகம் குளிர்ந்தார்கள்
பெண் குழந்தை !

கூட்டணிவைத்து
கோடிகள்அடித்து
கடைசியாக அறிவித்தனர்
கசப்பான கூட்டணி !

கோயில் கருவறை
அனுமதி இல்லை
தமிழ் தமிழன் !

உயர் நீதி மன்றத்தில்
தொடரும் தீண்டாமை
தமிழ் மொழிக்கு !

உதட்டிலும் உள்ளத்திலும்
இல்லை தமிழ் தமிழன் ?

பாதுகாக்க முடியவில்லை
வேண்டவே வேண்டாம்
புதிய சிலை !

மரியாதைக்கு நிறுவியது
அவமதிக்க
காரணியானது சிலை !

சாலையில் படுத்திருந்தான்
சங்கடமின்றி குடிகாரன் !

குடியால் கோடிகள் அரசுக்கு
குடும்பம் தெருக்கோடிக்கு
திருந்தாத குடிமகன்கள் !

உதவுவதாக நினைத்து
துன்புறுத்துகின்றனர்
மாட்டுக்கு லாடம் !
(இரும்புக் காலணி)

இறந்த வீட்டில் எல்லோரும்
கேட்கும் கேள்வி
காப்பீடு எவ்வளவு ?

தவிர்க்கலாம் இட நெருக்கடி
புதைப்பதை விட
எரிப்பதே நலம் !

அளவான குடும்பம்
அளவற்ற இன்பம்
குடும்பக்கட்டுப்பாடு !

கருப்பணம் வெள்ளையானது
கோயில் கணக்கில்
உண்டியல் வசூல் !

கவனம் கவனம்
சாமியாரில் ஆசாமிகளில்



யாரும்
இல்லை
சாமி !

பறிக்கப்
பறிக்கத்
துளிர்க்கும்
அட்சயப் பாத்திரம்
தேயிலைச்செடி !

**கவிஞர் இரா .இரவி**

## காலத்தின் முரண்பாடு

எந்த ஒரு உயிருக்கும்
தீங்கும் உயிர் வலியும் தராத
வரையில்... நீங்கள் செய்யும்
காரியங்கள் ஏதோ ஒரு
வகையில் இயற்கையினால்
மன்னிக்கப்பட்டுக்கொண்டுதான்
இருக்கின்றன. அனைவரின்
பார்வையையும் உன் பக்கம்
திருப்புவதற்காக நீ செய்யும்
சில குதர்க்கமான நிகழ்வுகள்,
உன் பாதையில்பெரும்
ஆபத்துகளைக்
கொண்டுவரும்.
எரிமலைக் குழம்புகளும்
கூர்மையான ஈட்டிகளும்
உன் பயணத்தில்
காத்திருக்கின்றன;
எச்சரிக்கையுடன் நடைபோடு!
இப்போதெல்லாம், "நடந்தவை
நடந்தவையாகவே
இருக்கட்டும்" என்பதில்
தான் பலருக்கும் கவனம்
இருக்கிறது. ஆனால்,
"நடக்கப்போவது
நல்லவையாக அமையுமா?"
என்பதை எவரும்
சிந்திப்பதில்லை; இங்கே
தான் ஒரு முரண் நிகழ்கிறது.
கடந்த காலமே கசப்பானதாக
நீடித்தால், வருங்காலம்
எப்படி வசந்தமாகும்? வீழ்ந்த
இடத்திலேயே கசப்புகளைக்
கடந்து நிமிர்ந்து நில்!



துணிச்சலோடு
நீ தேடும்
பாதையில்
தான் எல்லாம்
இருக்கிறது

**ஜனனி அந்தோணிராஜ்,**
திருச்சிராப்பள்ளி.



### வரிசை

உன்னைப் பற்றி
ஒரு காதல் கவிதை
எழுத நினைத்து விட்டாலே
போதும் வார்த்தைகள் வந்து
வரிசை கட்டி நிற்கின்றன!

### உலா

நீ என்னை முறைத்துப்
பார்க்கும் போது(ம்) கூட
எனக்குள் என்னமாய்
உலா வருகின்றன
இந்தக் கவிதைகள்!

### நலம்

அள்ளி அணைத்து
நலம் விசாரிக்கிறாய்!
என்னை வாடாமல்
வைத்திருப்பது உன்
அன்பு ஒன்றுதான் என்று
தெரிந்து வைத்திருக்கும் நீ!

### வீச்சு

உன் விழி வீச்சில்
விழுகிறேன் நான்!
எழுந்தாடுகிறது
இந்தக்கா த ல்!

### கோலம்

வாசலைச்சுத்தம் செய்து
தண்ணீர் தெளிக்கிறாய்!
உன் அழகில் கோலம்
போட்டுக் கொண்டது
என் மனசு!

### அதிசயம்

நீ ரோசாப்பூ நிற
அழகி என்றாலும் உனக்கு
மல்லிகை மனசு!
இப்பொழுது சொல்!
பூக்களுக்கு நான்
மயங்குவதில் என்ன அதிசயம்
இருக்கிறது?!

### கடமை

நீ ஒவ்வொரு முறை
என்னைக்கடந்து செல்லும்
போதும் முறைத்துக்
கொண்டேதான் செல்கிறாய்!
ஆனால் அப்பொழுதும் கூடக்
கா த ல் எழுதும்
கடமையிலிருந்து
தவறுவதேயில்லை உன்
கண்கள்!

### வேலை

என் கவிதைகளில்
எப்படியாவது இடம் பெற்று
விடுவதே உன் காதலுக்கு
வேலையாகப் போயிற்று!

### வந்தனம்

சிணுங்கினாலும்
முரண்டு பிடித்தாலும்
ஊடலைக் கைப்பற்றினாலும்
சினத்தையே குத்தகைக்கு
எடுத்தாலும்(கூட) நீ
காதலுக்கு வந்தனம்
சொல்லும் அழகு
ஒன்றிற்காகவே உன்னை
உயிராக நேசிக்கிறேன்!

### ஊஞ்சல்

உன் கூந்தலில்
தொங்கும் பூச்சரத்தை
ரசிக்கும் போதெல்லாம்
ஊஞ்சலாடுகிறது
என் மனம்!

### சிறகு

இதழ்கள் விரித்து
அழகாய் சிரிக்கிறாய்!
என் இதயம் இறக்கை
கட்டிக் கொள்கிறது!

### திறமை

நீ என்னுடன் இல்லாத
நேரங்களிலும் கூட
என்னைக்கைப்பற்றித்
தக்க வைத்துக் கொள்கிறது
உன் காதல்!

### மனம்

சந்தித்து விட்டுப்புறப்படத்
தயாராகிறாய்!



உன்னைத்
தொடரத்
தொடங்குகிறது
என் மனம்!

**முத்து ஆனந்த்**
வேலூர்


பாதை மாறாமல்
பயணித்துச் செல்லும்
வேடந்தாங்கல் பட்சி!

சொந்தங்களோடு கூடி
வந்த இடத்தில் வசித்து
வாரிசுகளுடன் வாழும்
வாழைமரம்!

கட்டை விரலைக்
காணிக்கை யாக்கிக்
கலைகள் பயின்ற
சுயமாய்த் தோன்றிய
ஏகலைவன்!

தனிப்பாதையாய்ச் செல்லும்
தண்டவாளமாய் இல்லாமல்
தாறுமாறாய்ச் செல்லும்
ஒற்றையடிப் பாதை!

கூட்டைச் சுமந்தே
நகர்ந்து திரியும் நாதியற்ற
நத்தையல்ல!



கட்டிய கூட்டைப்
பிரித்து வானில்
பறக்கும் வண்ணத்துப்
பூச்சி நான்!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



## "ஒரு வெளிநாட்டு வேதனை"

அம்மா... இங்கே எல்லாம்
இருக்குது, ஆனா
"சாப்பிட்டியா?"ன்னு
கேட்கத்தான் யாருமில்லை!

காலையில் கண் திறக்க
சைரன் ஒலிக்குது?
என் உறக்கம் மட்டும்
நம்மூர் கோவில்
மணியோசையில்
விழிக்குது!

நம்மூர்த் தெருவில்
காலணி இல்லாது
நடந்த போது கல்லும்
முள்ளும் குத்தலை!
இங்கே பூட்ஸ் அணிந்து
நடந்தாலும் வெற்றித்தரை
குத்திக் குத்திச்
சிரிக்குது!

இங்கே என்
கண்ணீருக்கு
மொழி புரியாது,
என் துக்கத்துக்கு
விசா தர மாட்டாங்க!
அதனால்தான்
இரவுகளோடு மட்டும்
மௌனமா பேசுறேன்!

அப்பா இறந்த செய்தி
வீடியோ காலில்
வந்த போது... நான் வெறும்
பார்வையாளனாக நின்றேன்!

அம்மாவின் முகத்தில்
வழியும் கண்ணீரைத்
துடைக்காத கைகள்
இங்கே எனக்கு
எதிரி உறுப்பானது!

திரும்ப வர்றேன்னு
ஒவ்வொரு நாளும்
என்னை நானே
ஏமாத்திக்குறேன்...

ஒரு நாள் அந்நிய மண்ணில்
என் சுவாசம்நின்றாலும்,
என் கடைசி ஆசை...

"என்னை என் தாய்
மண்ணுல
புதைச்சுடுங்க..."



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

RG
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ
Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE (Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜூஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
అజంతా
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small
Business
website
E - commerce
Website
Corporate
Website
Enterprise
website
Mobile App
Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com



Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel


CUSTOMIZED MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
EPC & Infra Turnkey Contractors
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.


MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.999/Month
EMI
Trusted by 1000+ satisfied clients
+ EMI Available
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699



TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARTING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




## சோம்பேறித்தனம் !



ஒரு ஊரில் ஒரு சோம்பேறி இருந்தான். அவன் எந்த வேலையும் செய்யாமல் இருந்தான். இதனால் அவனுக்கு உடம்பில் பல வியாதிகள் தொற்றிக் கொண்டது.

வைத்தியரிடம் சென்று தனது நோய்க்கான காரணத்தை கேட்டான். வைத்தியரும் அவனை பரிசோதித்துவிட்டு அதற்கான மருந்தை கொடுத்தார். வைத்தியர் அவனிடம், உனக்கு எப்போதெல்லாம் வியர்க்கிறதோ அப்பொழுது இந்த மருந்தை உட்கொள்ளலாம் என்று கூறினார்.

அந்த சோம்பேறி வீட்டுக்கு வந்து வியர்க்கும் வரை காத்திருந்தான். பல மணி நேரம் ஆகியும் தனக்கு வியர்க்காததால் குழம்பினான். உடனே தனது மனைவி அழைத்து எப்போது வியர்க்கும் எனக் கேட்டான்.

அவன் மனைவி, ஏதாவது வேலை செய்தால் வியர்க்கும் எனக் கூறினாள். அதன் பின் அவன் தோட்ட வேலை செய்வது, நிலத்தில் வேலை செய்வது, கடைக்குப் போவது என பல வேலைகளை செய்ய ஆரம்பித்தான்.

வேலையின் போது ஒவ்வொரு முறை வியர்க்கும்போது வைத்தியர் கொடுத்த மருந்தை மறக்காமல் சாப்பிட்டான். சிறிது நாட்களிலேயே அவனது நோய்கள் குணமடைந்து ஆரோக்கியமாக இருந்தான்.

ஆனால் வைத்தியர் கொடுத்த மருந்து மீதம் இருந்ததால் அதை எடுத்துக் கொண்டு வைத்தியரிடம் சென்றான். மீதி மருந்தை வைத்தியரிடம் கொடுத்து விட்டு, எப்படி பாதி மருந்திலேயே எனக்கு குணமானது? என்று கேட்டான்.

அதற்கு அவர், உன் வியாதி மருந்தால் தீரவில்லை. சுறுசுறுப்பான உன் வேலைகளால் சோம்பேறித்தனம் போய் குணமடைந்து விட்டாய். நான் கொடுத்தது மருந்தேயில்லை. வெறும் துளசி, வெல்லம் கலந்தது தான் என்றார்.

அதன்பின் தான் அவனுக்கு புரிந்தது, இத்தனை நாட்கள் சோம்பேறித்தனமாக இருந்து உடலை கெடுத்துக் கொண்டோம் என்று. வைத்தியருக்கு நன்றி கூறி விட்டு அங்கிருந்து புறப்பட்டான். போகும் வழியில் இனி சோம்பேறியாக இருந்து உடலை கெடுத்துக் கொள்ளாமல் சுறுசுறுப்புடன் இருக்க வேண்டும் என மனதில் உறுதி கொண்டான்.

தத்துவம் :

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்புவது உடல் ஆரோக்கியம். உடல் ஆரோக்கியத்திற்கு தடையாக இருப்பது சோம்பேறித்தனம். சோம்பேறித்தனத்தை தகர்த்தெறிந்தால் நோயின்றி வாழலாம்.

-A.s.Govinda rajan
Kodambakkam, Chennai

## மீம்ஸ்







## தைரியம் அவசியம்...!



காட்டில் முயல்கள் கூட்டம் ஒன்று வசித்து வந்தது. அந்த முயல்களிடம் தாழ்வு மனப்பான்மை இருந்து வந்தது. அந்த முயல்கள் எந்த செயல்களையும் செய்ய முடியாத கோழைகளாக எண்ணி வாழ்ந்து வந்தன.

வேட்டைக்காரன் வந்தால் நம்மைத்தான் வேட்டையாடுகிறான். சிங்கம், புலி போன்ற மிருகங்களும் நம்மைத்தான் அடித்து உண்ணுகின்றது. எனவே, நம் கூட்டம் இவ்வுலகில் வாழ எந்த தகுதியும் இல்லை, நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஏதேனும் ஒரு குளத்தில் விழுந்து இறந்து விடலாம் என முயல்களின் தலைவன் கூற அனைத்து முயல்களும் குளத்தை நோக்கிச் சென்றன.

அந்தக் குளத்தில் நூற்றுக்கணக்கான தவளைகள் வாழ்ந்து வந்தது. தவளைகள் கரையில் அமர்ந்திருந்தன. முயல்கள் கூட்டமாக வருவதைப் பார்த்த தவளைகளின் தலைவன் முயல்கள் கூட்டமாக நம்மைத் தாக்கத்தான் வருகின்றன. நாம் கரையில் இருந்தால் ஆபத்து, உடனே குளத்தினுள் சென்று விடுவோம் என முடிவு செய்து குளத்தில் குதித்தன.

இதைப் பார்த்த முயல்கள், நாம் கோழைகள் தான், நமக்குத் தைரியமில்லை தான். ஆனாலும், நம்மை விடத் தைரியமில்லாதவர்களும் இந்த உலகில் இருக்கிறார்கள். முயல்களை கண்டு தவளைகள் பயந்தன. தவளைகளைப் பொறுத்தவரை அவைகளை விட நாம் தைரியசாலிகள். நாம் இறக்கக் கூடாது, இனி தைரியத்தை வளர்த்துக் கொண்டு நம்மை யாரேனும் தாக்க நினைத்தால் நாலு கால் பாய்ச்சலில் நம்மை காத்துக்கொள்ளுவோம் என்று கூறியது முயல்களின் தலைவன்.

தத்துவம் :


நாம் எந்தச் சமயத்திலும் தைரியத்தை இழக்காமல் மன உறுதியோடு வாழ வேண்டும். அப்போது தான் நாம் எண்ணிய யாவும் வெற்றி பெற முடியும்.

## விடுகதை



| | |
|---|---|
| காலைக்கடிக்கும் செருப்பல்ல, காவல் காக்கும் நாயல்ல அது என்ன? | முள் |
| ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன? | கொடி |
| பிறந்தது முதல் வயிற்றாலே போகிறது. அது என்ன? | பாம்பு |
| ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளபளக்கும், தங்கம் அல்ல. அது என்ன? | சூரியன் |

## ஜோக்ஸ்



"ஒன்னுமே தெரியாத ஸ்டூடண்ட் (students ) கிட்ட கொஸ்டின் பேப்பர் (questions papers ) கொடுக்குறாங்க..."

"எல்லாம் தெரிஞ்ச வாத்தியார் கிட்ட ஆன்சர் பேப்பர்(answer papers ) கொடுக்குறாங்க..."

"என்ன கொடும சார் இது?...."

=========================================

"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான்!"

=========================================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"

=========================================



"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

=========================================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம்!"

=========================================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

=========================================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"

மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"



# குழந்தைகளின் கை வண்ணம்

சிறுவர் உலகம்





**சஹரிஸ்**
3rd std





**ரா.ரஜிகுமார்**
எட்டாம் வகுப்பு






**ச.நிஹாஷினி**





**மு.அஸ்விக்**





**மு.அஸ்விக்**





**ரா.வெற்றிமாறன்**

# வெள்ளைச் சேவல்





மங்களம் என்ற அழகான பசுமை எழில் சூழ்ந்த கிராமத்தில் ஒரு பண்ணை வீடு இருந்தது. அங்கு ஆடு, மாடு,கோழி,சேவல்... என அனைத்தும் வாழ்ந்து வந்தன. மயூ என்கிற ஆட்டுக்குட்டியும் அழகான வெள்ளை நிற சேவலும் நண்பர்களாக பழகி வந்தன. தினமும் காலை ஆட்டுக்குட்டியை " கொக்கரக்கோ" என சேவல் கூவி எழுப்பும். உடனே ஆட்டுக்குட்டியும் எழுந்து துள்ளி குதித்து விளையாட சென்று விடும்.

வெள்ளை நிற சேவல் ஆட்டுக்குட்டியுடன் மிகவும் நட்பாக பழகியதை மற்றொரு சேவல் கண்டு பொறாமை பட்டது. வெள்ளை நிற சேவல் இடம் வந்து நீ அவற்றுடன் பழகக் கூடாது.நம் இனத்துடன் தான் பழக வேண்டும் என்று கூறி எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தது.


இதை கவனித்த மயூ ஆட்டுக்குட்டி... வெள்ளைச்சேவலே நீ.. நீ ஏன் உன்னை மிரட்டும் சேவலிடம் கடிந்து பேச மறுக்கிறாய். எப்பொழுதும் சதுவாகவே ஏன் பேசுகிறாய். நான் யாருடன் வேண்டுமானாலும் பழகுவேன் நீ உன் வேலையை பார்த்துக் கொள் என்று கூற வேண்டியது தானே என்றது.

அதற்கு அந்த வெள்ளைச் சேவல்.. மயூ நண்பா.. இந்த சேவல் இப்பொழுது தான் என்னிடம் இப்படி வம்பு செய்கிறது. மூன்று மாதத்திற்கு முன் எனக்கு காலில் அடிபட்டு படுத்த படுக்கையாக இருந்த பொழுது அந்த சேவல் தான் எனக்கு தினமும் உணவு கொண்டு வந்து கொடுத்து உதவியது. அந்த நன்றி என்றும் எனக்கு இருக்கும் என்றது வெள்ளைச்சேவல்.

அதற்கு மயூ ஆட்டுக்குட்டி.. ஒரு சிறிய உதவியை நீ இவ்வளவு பெரிதாக எடுத்துக்கொண்டு... காலத்திற்கும் நினைத்திருக்க வேண்டுமா? ஒரு நாள் உதவி செய்துவிட்டு பலமுறை உன்னை கட்டுப்படுத்துகிறதே.. என்றது. அப்படி இல்லை நண்பா... எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல்... எனக்கு அது உதவி செய்தது. நான் உதவி கேட்பதற்கு முன் தானாக பிறருக்கு உதவி செய்ய வேண்டும் எண்ணத்தில் உதவி செய்தது.அந்த உதவி சிறியதாயினும் எனக்கு அது பெரிய உதவி தான். இதைத்தான் திருவள்ளுவர்,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

என்று கூறுகிறார் என்றது வெள்ளைச் சேவல். சரி நண்பா... இனிமேல் நானும் யாருடைய உதவியையும் அலட்சியப்படுத்த மாட்டேன் என்று கூறி இரண்டும் விளையாட சென்றன.



முனைவர்
**-உமாதேவி பலராமன்**
திருவண்ணாமலை.

# பொது அறிவுப் பூங்கா

"நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
=================
சிந்தும் ஒவ்வொருத் துளியி
ரத்தமும் சேர்ந்து வெள்ளையன்
உயிர்கு டிக்கவே
இந்தியர்களே ஒன்று கூடுவோம்
எம்மி ரத்தம் வர லாறு தீட்டிடும்
சொந்த நாடு சு தந்திரப்
பரிசென
துணிவும் வீரமும் சேவையும்
நல்குவோம்"
இந்த வார்த்தைநே தாஜி
அவர்களின்
எழுச்சி மிக்கதோர் சொற்பொழி
வாகுமே

= = = = =   = = = =   = =
கொல்கத் தாவில் கோ தானியா
ஊரிலே
ஜானகிநாத் பிர பாவதி
தேவிக்கும்
நல்முத் தாகநே   தாஜியும்
தோன்றினார்
ஜனவரி இருபத்து மூன்றாம்
நாளிலே
துல்லிய மாகவே ஆயிரத்
தொன்னூற்றுத்
தொன் நூற் றேழிலே
தோன்றிய சிங்கமாம்.
செல்லப் பிறப்புகள்
பதின்மூன்று பேருடன்
சேர்ந்த ஒன்பதாம் பிள்ளைநே
தாஜியாம்.

============  = = = =
கட்டாக் நகரிலே தொடங்கியக்
கல்வியும்
லண்டன் ஐ சி எஸ் தேர்வில்
முடிந்தது
எட்டுத் திக்கிலும் வெள்ளையன்
பேய்களாய்?
இந்தியர் குருதியில் தாகம்
தணித்தனர்.
துட்டரின் ஆட்சியால் போஸ்,
கொதித்தெழுந்திட்டார்.
தூக்கி எறிந்தார்த்   தம் ஐசிஎஸ்
பட்டத்தை
சட்டத்தை மீறிய ஜாலியன் வால
பாத்
கொலையினால் பதறி ஓடி
வந்தார் இங்கே

= = = =   = = = :   = = =
=   = = = =
ஹிட்லர் முசோலினி நட்புடன்
"இந்தியத்
தேசிய இராணுவப் படை"யைத்
ததிரட்டினார்
எட்டுத் திக்கிலறு பத்து   நா
லாயிரம்
இந்தியர் சேர்ந்தனர் ஹிட்லர்
மலைத் திட
திட்ட மிட்டு ஜப் பானும்
சென்றவர்
சிதறிக் கிடந்த போர் வீரரை
சேர்த்திட்டார்
ஒட்டு மொத்தத் தாய்
நாட்டினை   மீட்டிடும்
தலைவன் போஸ் எனக்
ஹிட்லர் வாழ்த்தினார்.
=====================



குடந்தை
**பரிபூரணன்**

# உலக பழமொழிகள்

(1) சரிகை ஆடைகளுடன் நரகத்திற்குப் போவதை விட கந்தல் ஆடைகளுடன் சொர்க்கத்திற்குப் போவதே மேல்
- இங்கிலாந்து

(2) அதிர்ஷ்டம் குருடு, எவர் மடியிலும் போய் விழும்
- எஸ்டோனியா

(3) தெரிந்ததை எல்லாம் சொல்லாதே, கேட்டதை எல்லாம் நம்பாதே, முடிந்ததை எல்லாம் செய்யாததே
- போர்ச்சுகல்

(4) நோயைக் கொன்றாலும் ஆளைக் கொன்றாலும் வைத்தியருக்கு ஃபீஸ் உண்டு
- போலந்து

(5) உன்னுடைய பிள்ளைகள் கெட்டவர்களாயிருந்தால் நீ அவர்களுக்கு சொத்து சேர்த்து வைக்க வேண்டாம். அவர்கள் நல்லவர்களாயிருந்தால் உன் சொத்து அவர்களுக்கு



தேவையில்லை
- பல்கேரியா

(6) இந்த உலகத்தில் மூன்று நண்பர்கள் உள்ளனர். தைரியம், புத்தி, நுண்ணறிவு
- ஆஃப்ரிகா

(7) கெட்டிக்கார கோழிக்குஞ்சு முட்டைக்குள்ளிருந்தே கூவும்
- ஆஃப்ரிகா

**ஆர்.ஹரிகோபி,**
புது டெல்லி

# கடிகாரம்

காலம் காட்டும் கடிகாரம்
கடிதில் ஓடும் கடிகாரம்
கோலம் கொண்ட கடிகாரம்
குட்டி குட்டி கடிகாரம்!

இரண்டு முட்கள் கொண்டதுவாம்
இரண்டும் சமமாய்ப் போகாது
புரண்டு புரண்டு படுத்தாலும்
போகும் காலம் நிற்காது!

கடிகை என்றும் சொல்வாரே
கையில் கட்டி மகிழ்வாரே
துடிப்பாய் இயங்கும் கடிகாரம்
தூய்மைக் காலம் காட்டிடுமே!

முனைவர்
**இரா.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.



# மிதிவண்டி!



மிதிவண்டி மிதிவண்டி
மேன்மை யான
மிதிவண்டி
மிதித்தால் போகும்
மிதிவண்டி
மேடு பள்ளம்
போகலாமே!

பொழுது போக்க
உதவிடுமே
போகவும் வரவும்
பயன்படுமே
சுழன்று முன்னே
சென்றிடுமே
செலவே இல்லா
மிதிவண்டி!

உடலுக்குப் பயிற்சி
ஆகிடுமே
உள்ளம் மகிழ்ச்சி
கூடிடுமே
உடலெடைக் குறைக்கப்
பாயன்படுமே
உண்மையில் செலவே
ஆகாது!

இதய நோயைப்
போக்கிடுமே
இன்பம் தன்னை
ஆக்கிடுமே
உதய மாகும்ஆ
ரோக்கியம்
உன்னத மான
மிதிவண்டி!

முனைவர்
**இரா.வேதநாயகம்.**

# தெரிந்து கொள்வோம்

1.நீர் அருந்தாத நீர் வாழ் உயிரினம் எது? நன்னீர் டால்பின்

2.ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கல்வி தினம் என்று கடைப்பிடிக்கப்படுகிறது? ஜனவரி 24

3.இந்தியாவின் தேசிய கல்வி தினம் என்று கடைப்பிடிக்கப்படுகிறது? நவம்பர் 11

4.பத்மஸ்ரீ விருது முதன்முதலில் பெற்றவர் யார்? அன்னை தெரசா

5.ஜார்க்கண்டில் மிகுதியாக இருக்கும் வளம் எது? கனிம வளங்கள்

6.ராஞ்சியின் அடையாள பெயர்? நீர்வீழ்ச்சிகளின் நகரம்

7.ஜெம்ஷெட்பூரில் தென் இந்திய கட்டிடக்கலை வடிவில் அமைந்துள்ள கோவில் எது? புவனேஸ்வரி கோவில்

8.தன்பாத்தில் அமைந்துள்ள இயற்கை வளம் எது? நிலக்கரி

9.தேசிய கீதத்தில் வரும் உத்கல என்பது எந்த பகுதி? ஒடிசா பண்டைய கால பெயர்

10.ஒடிசாவின் லிங்கராஜா கோவில் எந்த கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டு? கலிங்க கட்டடக்கலை 'தேவுள்' பாணிக்கு எடுத்துக்காட்டு



தொகுப்பு:
**T.P.குமரன்,**
மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No

8122664699

## பிப்.12-ல் கூடுகிறது புதுச்சேரி சட்டப்பேரவை கூட்டத்தொடர்!



**புதுச்சேரி, பிப்.04:**

15-வது புதுச்சேரி சட்டப்பேரவையின் ஆறாவது கூட்டத்தொடர் பிப்ரவரி 12 தொடங்கும் என சபாநாயகர் ஆர். செல்வம் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கும் நிலையில், கூட்டத்தொடரில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார். நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கு அனுமதி கோரும் துணை மானியக் கோரிக்கைகளும் இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் புதுச்சேரியில் 657 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சட்டமன்றக் கட்டிடம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் சபாநாயகர் செல்வம் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் ஜன.20-ல் தொடங்கி 24ஆம் தேதி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

## காலிமனையை பத்திர பதிவு செய்து தருவதாக கூறி பெண்ணிடம் ரூ.1 கோடி மோசடி - டாக்டர் கைது,



**புதுச்சேரி, பிப்.04:**

புதுச்சேரி, அரியாங்குப்பம் அகத்தியர் நகரை சேர்ந்தவர் சகாயலூர்து சாமி. இவரது மனைவி ஜாக்குலின் ஆரோக்கிய செல்வி (48).

இவர் அரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவியாளராக பணி செய்து வருகிறார். இவரின் உறவினரான கடலூர் கோண்டூரை சேர்ந்தவர் ஜவகர் கென்னடி (56). இவர் புதுச்சேரி அரசு ஆஸ்பத்திரியில் டாக்டராக பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், டாக்டர் ஜவகர் கென்னடி தனது குடும்ப சூழ்நிலைக்காக, ஜாக்குலின் ஆரோக்கிய செல்வியிடம், 6 பவுன் தங்க நகையை வாங்கினார்.

மேலும், ஜாக்குலின் ஆரோக்கிய செல்வியின் உறவினரான மூலக்குளத்தை சேர்ந்த சவரியம்மாளுக்கு, தனது காலிமனையை பத்திர பதிவு செய்து தருவதாக ரூ.1கோடியை, ஜாக்குலின் ஆரோக்கிய செல்வி மூலம் பெற்றார்.

ஆனால் அந்த காலிமனையை வேறு ஒருவரிடம் ஜவகர் கென்னடி விற்று விட்டார்.

இதனை அறிந்த ஜாக்குலின் ஆரோக்கிய செல்வி பணம் மற்றும் நகையை திருப்பி கொடுக்குமாறு வற்புறுத்தி வந்தார். ஆனால் டாக்டர் ஜவகர் கென்னடி நகை பணத்தை கொடுக்காமல் ஏமாற்றி வந்தார். நகை-பணம் மோசடி செய்யப்பட்டதால் ஜாக்குலின் ஆரோக்கிய செல்வி, அரியாங்குப்பம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதனடிப்படையில் முருகானந்தம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில் கடலூர் மாவட்டம் கோண்டூர் அருகே காரில் சென்று கொண்டிருந்த டாக்டர் ஜவகர் கென்னடியை போலீசார் மடக்கி பிடித்து கைது செய்தனர்.

அவரிடமிருந்து ரூ.17 லட்சத்தை பறிமுதல் செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு ஜெயிலில் அடைத்தனர்.

## கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்




சென்னை கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்காக முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார்.உடன் அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா, எம்எல்ஏக்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப்சாமுவேல், கூடுதல் தலைமைச்செயலாளர் காகர்லா உஷா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

## கல்லூரிகளில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு காசோலை



காந்திஅடிகள், நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், அண்ணா, கருணாநிதி, ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ் வளர்ச்சித் துறையால் பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு காசோலை மற்றும் சான்றிதழ்களை அமைச்சர் சாமிநாதன் வழங்கினார்.தமிழ்வளர்ச்சித் துறை செயலாளர் ராஜாராமன், தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் அருள் உடன் உள்ளனர்.

## அமைச்சர் எ.வ.வேலு , கோவா கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்று, படகுகள் கட்டுமானப் பணிகளை ஆய்வு




கன்னியாகுமரியில் மூன்று நவீன புதிய பயணிகள் படகுகள் கொள்முதல் செய்து இயக்குவதற்கு, அமைச்சர் எ.வ.வேலு , கோவா கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்று, படகுகள் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்.

## தமிழ்நாடு அரசியலின் நிரந்தர அடையாளம் பேரறிஞர் அண்ணா - ஆதவ் அர்ஜுனா,




**சென்னை, பிப்.04:**

பேரறிஞர் அண்ணாவின் 57-வது நினைவு நாளையொட்டி த.வெ.க. தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

'மக்களிடம் செல், அவர்களிடம் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்..' என்று ஜனநாயகத்தின் அடிப்படையை சொல்லித்தந்த மாபெரும் தலைவர். கொள்கை அரசியலையும் மக்களுக்கான நடைமுறை தீர்வுகளையும் கற்றுத் தேர்ந்து, 'இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சியும் மாநிலத்தின் ஆட்சியை அமைக்கலாம், ஒரு சாமானிய மனிதனும் அதிகாரத்தை அடையலாம்' என்ற ஜனநாயக புரட்சியை நிகழ்த்திக் காட்டியவர்.

தமிழ்நாட்டின் தலைமகன், மாநில சுயாட்சியின் உரிமை முழக்கம், மக்கள்நல அரசியலின் நாயகர், ஜனநாயக-தேர்தல் அரசியலின் வழிகாட்டி மற்றும் தமிழ்நாடு அரசியலின் நிரந்தர அடையாளம் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான இன்று, அவர் புகழைப் போற்றுவோம். அவர் வழியில் மீண்டுமொரு சாமானியர்களுக்கான ஆட்சியை, மக்கள் துணையோடு வென்றெடுப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அண்ணா வழியில் அயராது உழைப்போம்! வெல்வோம்! - அமைச்சர் தங்கம் தென்னரசு




**சென்னை, பிப்.04:**

பேரறிஞர் அண்ணாவின் 57-வது நினைவுநாளை ஒட்டி அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழ்நாடு என்ற பெயரை மாநிலத்திற்குச் சூட்டி, இருமொழிக் கொள்கையால் தமிழரைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாள்.

'மக்களிடம் செல். மக்களுடன் வாழ். அவர்களிடமிருந்து கற்றுக்கொள். அவர்களை நேசி. அவர்களுக்குச் சேவை செய்! அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு' என்பது அண்ணா நமக்கு வகுத்துத் தந்த அரசியல் பாதை. பேரறிஞரின் பாதையே, சமூகநீதியைப் பேணிக் காத்து, ஆதிக்கம் எனப்படும் பேதைமையை ஒழிக்கும், பேராயுதம்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம்! வெல்வோம்! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## புதுச்சேரி அரசு ஊழியர்களை அரசியல் பிரமுகர்கள் சொந்த பணிக்கு பயன்படுத்த தடை- கவர்னர் அதிரடி நடவடிக்கை



**புதுச்சேரி, பிப்.04:**

புதுச்சேரியில் புதிதாக பொறுப்பேற்கும் ஆட்சியாளர்கள் அவரவர் விருப்பப்பட்ட அரசு ஊழியர்களை சர்வீஸ் பிளேஸ்மென்ட் அடிப்படையில் சொந்த பணிக்கு அழைத்துக் கொள்வது வழக்கமானது.

இதனால் அனைத்து துறைகளிலும் மற்ற அரசு ஊழியர்களுக்கு கூடுதல் பணி சுமை ஏற்படுகிறது. இது தொடர்பாக கவர்னர் கைலாஷ்நாதனுக்கு புகார் சென்றது.

இதை தொடர்ந்து இந்த சர்வீஸ் பிளேஸ்மென்டை அதிரடியாக ரத்து செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனையடுத்து நிர்வாக சீர்த்திருத்தத்துறை அனைத்து துறைகளுக்கு அனுப்பியுள்ள அவசர சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் ஆகிய வெளிப் பிராந்தியங்களில் நியமிக்கப்பட்ட அமைச்சகப் பணியாளர்கள், புதுச்சேரி பிராந்தியத்திற்கு சேவை இடமாற்றம் எனும் சர்வீஸ் பிளேஸ்மென்ட் செய்வதை கட்டுப்படுத்த கவர்னர் உத்தரவிட்டுள்ளார்.

எனவே, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பிராந்தியங்களைச் சேர்ந்த அமைச்சகப் பணியாளர்கள் எவரேனும் புதுச்சேரிக்கு சேவை இடமாற்றம் செய்யப்பட்டிருந்தால், அந்த இடமாற்றத்தை உடனடியாக ரத்து செய்து, அவர்களை மீண்டும் அந்தந்த அலுவலகங்களிலேயே பணியமர்த்த வேண்டும்.

அவசரத் தேவையின் காரணமாக சேவை இடமாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால், அதற்கு கவர்னரின் கட்டாய அனுமதி பெறப்பட வேண்டும். நிர்வாகச் செயலர்கள், துறைத் தலைவர்கள் இந்த அறிவுறுத்தல்களைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

தவறினால் அது தீவிரமாகக் கருதப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூர் ஆடைகள் ஏற்றுமதி 2 மடங்காக உயரும்: உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி

**திருப்பூர், பிப்.04:**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2-வது முறையாக பதவி ஏற்ற பிறகு உலக நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிப்பில் மிகவும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

அந்தவகையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்கள் மீதும் 25 சதவீதம் கூடுதல் வரியை கடந்த ஆண்டு (2025) ஆகஸ்டு மாதம் 1-ந் தேதி அமல்படுத்தினார். அதன் பின்னர், இந்தியா தொடர்ந்து ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தாத காரணத்தால், அந்த அதிருப்தி காரணமாக மேலும் 25 சதவீதம் அபராதம் விதித்து 50 சதவீதமாக கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ந்தேதி உயர்த்தினார். இதனால் இந்திய ஏற்றுமதியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். குறிப்பாக திருப்பூர் ஆடை உற்பத்தியாளர்கள் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர். 50 சதவீத வரி விதிப்பால் திருப்பூரில் ஆடை உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் உற்பத்தியாளர்கள் தவித்தனர்.

திருப்பூரில் ஆண்டுக்கு ரூ.50ஆயிரம் கோடிக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படும் நிலையில், அதில் ரூ.15 ஆயிரம் கோடி அளவுக்கு அமெரிக்காவுக்கு ஆடைகள் அனுப்பப்படுகின்றன. இதன் காரணமாக ரூ.15 ஆயிரம் கோடி ஆடை வர்த்தகம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

எனவே வரி விவகாரத்தில் சுமூக தீர்வு காண வேண்டும், அமெரிக்க வரி விதிப்பில் இருந்து மீள்வதற்கு சலுகை திட்டங்களை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று திருப்பூர் ஆடை உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து மத்திய அரசு பஞ்சு இறக்குமதி வரி குறைப்பு உள்ளிட்ட சில சலுகை திட்டங்களை மத்திய அரசு அறிவித்தது. இருப்பினும் திருப்பூர் ஆடை வர்த்தகம் அமெரிக்காவை நம்பியே இருப்பதால் வரியை குறைத்தால் மட்டுமே இதற்கு தீர்வு கிடைக்கும். இல்லையென்றால் திருப்பூர் ஆடை வர்த்தகம் முற்றிலும் முடங்கும். எனவே மத்திய அரசு இதற்கு உரிய தீர்வு காண வேண்டும் என்று தமிழக அரசு மற்றும் ஆடை ஏற்றுமதியாளர்கள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து வரியை குறைக்கும் வகையில், இருநாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையும் நடந்து வந்தது. இந்த நிலையில், இதுதொடர்பாக பிரதமர் மோடியை, அமெரிக்க அதிபர் டிரம்ப் தொலைபேசியில் நேற்று தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அதனைத் தொடர்ந்து இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதாகவும், இந்தியா மீது விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டதாகவும் டிரம்ப் அறிவித்தார். அதன்படி அமெரிக்காவின் இறக்குமதி வரி 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார். இதனை திருப்பூர் தொழில் துறையினர் வரவேற்று மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.




## வந்தவாசி ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் போதை ஒழிப்பு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



**வந்தவாசி, பிப் 04:**

திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாநில ரெட் கிராஸ் சங்கம், மாவட்ட பள்ளி கல்வித்துறை , மாவட்ட ரெட் கிராஸ் சங்கம் இணைந்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடத்தியது.

இந்த நிகழ்விற்கு பள்ளி தாளாளர் அ.ரமேஷ் தலைமை தாங்கினார். வந்தவாசி வட்டாட்சியர் பா.ஜெயவேல், பள்ளி நிர்வாகி சி.வி. ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் ஆ.தீனதயாளன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, மாவட்ட ரெட் கிராஸ் சங்க தலைவர் பா.இந்திரராஜன் பங்கேற்று, போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா.சீனிவாசன், ரெட் கிராஸ் சங்க உறுப்பினர்கள் கேப்டன் பிரபாகரன், எம்.பி.வெங்கடேசன், பிடிஜி ஆறுமுகம், ஜெஆர்சி ஆசிரியர்கள் பார்த்திபன், கார்த்திகேயன், அரிகிருஷ்ணன், மேகலா, சாரணர் இயக்கம் கோவிந்தசாமி, சமூக ஆர்வலர்கள் மலர் சாதிக், டாக்டர் பாஸ்கரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேச்சு போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது.

முன்னதாக போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் பள்ளி ஜெஆர்சி ஆலோசகர் வனஜா நன்றி கூறினார்.

## மகள் தயாரிப்பில் உருவான படத்தை திரையரங்கில் பார்த்து ரசித்த ரஜினிகாந்த்!



**சென்னை, பிப்.04:**

சௌந்தர்யா ரஜினிகாந்த் தயாரிப்பில், அறிமுக இயக்குநர் மதன் இயக்கத்தில் அபிஷன் ஜீவந்த், அனஸ்வரா ராஜன் நடித்துள்ள படம் 'வித் லவ்'. இப்படத்தின் மூலம் அபிஷன் கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

காதல் கதையை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட இப்படத்தில் காவ்யா அனில், ஹரிஷ்குமார், சச்சின் நாச்சியப்பன், தேனி முருகன், ஆர்ஜே ஆனந்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார்.

படத்தின் டீசர், டிரெய்லர், பாடல்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றநிலையில், படம் பிப்.6ஆம் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் ப்ரீமியர் ஷோவை சத்யம் திரையரங்கில் நடிகர் ரஜினிகாந்த் பார்த்துள்ளார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் பரவிவருகிறது.

# சுற்றுலா: பத்திரமணல்: இயற்கை ஆர்வலர்களுக்கான ஒரு பசுமை விருந்து!

ஆலப்புழாவில் உள்ள வேம்பநாடு ஏரியின் நடுவே அமைந்துள்ள பத்திரமணல் தீவு (PATHIRAMANAL) இயற்கை ஆர்வலர்களுக்கும், பறவை பார்வையாளர்களுக்கும் ஏற்ற தீவாகும். இந்த சிறிய, மக்கள் வசிக்காத தீவு, அமைதியையும் பல்வேறு பறவை இனங்களை கவனிக்கும் வாய்ப்பையும் தேடுபவர்களுக்கு இது ஒரு சிறந்த இடமாகும். ஆலப்புழா முகம்மா பகுதியில் அமைந்துள்ள இத்தீவை படகு மூலம் மட்டுமே சென்றடைய முடியும். முகம்மா படகுத்துறையில் இருந்து (MUHAMMA BOAT JETTY) ஏராளமான படகுகள் கிடைக்கின்றன.



இத் தீவு புலம்பெயர்ந்த மற்றும் வசிக்கும் பறவைகளுக்கு ஒரு சிறந்த புகலிடமாக உள்ளது. புகைப்படக் கலைஞர்களின் சொர்க்கமாகத் திகழும் இத்தீவின் அமைதி பரபரப்பான நகர வாழ்க்கையில் இருந்து ஒரு அமைதியான ஓய்வு நிலையை வழங்குகிறது.

பத்திர மணல் தீவு அடர்த்தியான இயற்கை தாவரங்களால் சூழப்பட்டுள்ளது. இது பிராந்திய தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் செழித்து வளர ஏற்ற காலநிலையை கொண்டுள்ளது. இது இயற்கை ஆர்வலர்களிடையேமிகவும்பிரசித்தி பெற்றது. 'இரவின் மணல்' என பொருள்படும் இந்த பத்திரமணல் பசுமையான வனாந்தரம், அமைதியான ஏரிக்கரை மற்றும் அழகிய நிலப்பரப்பு ஆகியவற்றை கொண்டுள்ளது. 10 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்துள்ள இந்தத்தீவுபல அரியமற்றும் அழிந்து வரும் உயிரினங்களின் தாயகமாக இருப்பதால், பறவைகளை காண்பதற்கு ஏற்ற இடமாகும்.

இங்கு 50 வகையான புலம்பெயர்ந்த பறவைகளும், 90 வகையான உள்ளூர் பறவைகளும் காணப்படுகின்றன. அயல்நாட்டு பறவைகளில் ஊசிவால் வாத்துகள், நீலக் கருவாலி, இரவு நாரை, நீர்க்காகம், டார்ட்டர், இந்திய ஷாக், ஊதா நாரை, கால்நடை கொக்கு, இந்திய குளம் நாரை, சிறிய கொக்கு, வெண்கல இறக்கைகள் கொண்ட ஜக்கானாக்கள், விசில் வாத்து, பருத்தி குள்ள வாத்து, சிறிய நீர்க்காகம், மீசை கொண்ட டெர்ன் போன்றவை காணப்படுகின்றன. இங்கு பல மருத்துவ குணங்களைக் கொண்ட தாவரங்கள் செழித்து வளர்கின்றன.



ஆனந்த பத்மநாபன் தோப்பு என்று அழைக்கப்படும் பத்திரமணல் 70களின் பிற்பகுதி வரை தாய்மட்டத்தில் குடும்பத்தின் தனியார் உரிமையின் கீழ் இருந்துள்ளது. கொச்சின் மெஸ் பீம்ஜி தேவ்ஜி அறக்கட்டையிடமிருந்து செவாலியர் ஏ.சி.எம். அந்த்ரப்பர் இதை வாங்கினார். இருப்பினும் 1979 ஆம் ஆண்டு நில சீர்திருத்த சட்டங்களுக்குப் பிறகு, தீவு இந்திய அரசாங்கத்தின் கீழ் வந்தது. பின்பு இது இந்திய சுற்றுலா துறையால் நிர்வகிக்கப்பட்டது. 70களின் பிற்பகுதி வரை, 14 குடும்பங்கள் இங்கு வசித்து வந்தன. தற்போது இத்தீவில் மக்கள் யாரும் வசிப்பதில்லை. சுற்றுலா நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. டிசம்பர் முதல் மார்ச் மாதங்களுக்கு இடையில் வானிலை இதமாக இருப்பதால் பார்வையிட சிறந்த நேரமாக கருதப்படுகிறது. இத்தீவில் தங்குமிட வசதிகள் இல்லை என்பதால் அதற்கேற்ப திட்டமிட வேண்டியது அவசியம். இத்தீவு இடம்பெயர்வு பறவைகளின் பருவத்துடன் இணைந்து அக்டோபர் முதல் மார்ச் வரை பார்வையிட சிறந்த நேரமாக உள்ளது.

எப்படி செல்வது?

வேம்பநாடு ஏரியின் நடுவில் அமைந்துள்ள இத்தீவு ஆலப்புழாவிலிருந்து 13 KM தொலைவில் உள்ளது. 30 நிமிட வேக படகு(SPEED BOAT) பயணம் அல்லது 1.5 மணிநேர மோட்டார் படகு சவாரி மூலம் இதை அடையலாம். இத் தீவில் தங்க முடியாது என்பதால் படகு வீடுகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தீவுக்கு அருகில் நீரில் இரவைக் கழிக்கலாம். சுகமான அனுபவமாக இருக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### எஸ்.பி.ஐ வங்கியில் வேலை: 2050 காலிப்பணியிடங்கள்: விண்ணப்பிப்பது எப்படி?




நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ வங்கியில் உள்ள வட்டார அதிகாரி பதவியில் உள்ள 2,050 காலிப்பணியிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 165 காலிப்பணியிடங்கள் உள்ளன. இதற்கு எப்படி விண்ணப்பிப்பது கல்வித்தகுதி என்ன? என்பது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

பணி நிறுவனம்: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

பதவியின் பெயர்: வட்டார அதிகாரி (Circle Based Officer) காலிப்பணியிடங்கள்: 2,050 -சென்னை வட்டாரத்தில் மொத்தம் 165 காலிப்பணியிடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு + வங்கிகளில் 2 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம். வயது வரம்பு: 2025 டிசம்பர் 31-ம் தேதியின்படி, விண்ணப்பதார்கள் 21 வயதிற்கு கீழ் இருக்கக்கூடாது. 30 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: 4 கட்ட தேர்வு முறை உள்ளன. ஆன்லைன் தேர்வு, தெரிவு செய்தல், நேர்காணல் மற்றும் உள்ளூர் மொழி தேர்வு ஆகியவற்றில் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் சம்பளம்: இப்பணியிடங்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ.48,480 ஆகும். அதிகப்படியாக ரூ.48,480 - 85,920 என்ற விதம் சம்பள அளவு நிர்ணயிக்கப்படும். விண்ணப்பிக்க கடைசி நாள்: 18.02.2026

இணையதளம்: https://sbi.bank.in/

## வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 5ந் தேதி காளான் வளர்ப்பு பயிற்சி

**கோவை, பிப்.4:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பயிர் நோயியல் துறை சார்பில், ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு தொடர் பான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பிப்ரவரி மாதத்திற்கான பயிற்சி 5ந் தேதி வியாழக் கிழமை நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பு வோர், பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமாக ரூ.850 (ஒருவருக்கு) நேரடி யாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590 (ஒருவருக்கு) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அடையாளச் சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலை வர், பயிர் நோயியல் துறை,தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை. தொலைபேசி 0422-6611336, 0422-6611226, 9629496555, 6379298064. மின்னஞ்சல்: PATHOLOGY@TNAU.AC.IN

## மொடக்குறிச்சியில் நியாயவிலை கட்டிடம்: அமைச்சர் முத்துசாமி திறந்து வைத்தார்

**ஈரோடு, பிப். 4:**

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள முழுநேர நியாயவிலைக் கடையின் புதிய கட்டிடத்தை, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துசாமி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

மொடக்குறிச்சி வட்டத்திற்கு உட்பட்ட கணபதிபாளையத்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் செயல்பட்டு வந்த கிளியம்பட்டி முழுநேர நியாயவிலைக் கடை, இதுவரை 1,184 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வந்தது. டி.மேட்டுப்பாளையம், சீரங்கம்பாளையம், பெரளிமேடு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், சுமார் 1.5 முதல் 2.05 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து அத்தியாவசியப் பொருட்களை பெற்றுவந்தனர்.

இதனால், பயணத் தூரத்தை குறைத்து தங்கள் பகுதியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அமைச்சர் சு.முத்துசாமியிடம் கோரிக்கை வைத்திருந்தனர். இதனை ஏற்று, சுமார் 505 குடும்ப அட்டைகள் பயன்பெறும் வகையில் புதிய முழுநேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. இக்கடை அனைத்து வேலை நாட்களிலும் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தற்போது 913 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 340 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் என மொத்தம் 1,253 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 7.64 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 50 ஏக்கரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம்!

**தஞ்சாவூர், பிப்.4:**

*தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில், 50 ஏக்கரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.*

*தஞ்சாவூரில் ராஜராஜ சோழனையும், அவரது ஆட்சி நிர்வாகத்தையும் பெருமைப்படுத்தும் வகையில், மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 2023-ம் ஆண்டு மார்ச் 20-ம் தேதி சட்டப் பேரவையில், முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.*



*இதையடுத்து தஞ்சாவூரில் அருங்காட்சியகம் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது. அப்போது பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் அருகே உள்ள காலியிடம் உட்பட 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.*

*இதையடுத்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ. சாமிநாதன் ஆகியோர் தஞ்சாவூருக்கு வருகை தந்து, இடங்களை பார்வையிட்டு சென்றனர். ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.*

*இதற்கிடையில் கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் சோழர் அருங்காட்சியகம் கட்டுவதற்கான டெண்டர் வெளியிடப்பட்டது. அப்போது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் அருகே தேர்வு செய்யப்பட்ட 12 ஏக்கர் இடம் போதாது என தெரிவிக்கப்பட்டது.*

*ரூ.56.41 கோடி மதிப்பில்... எனவே, தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் 50 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு ரூ.56.41 கோடி மதிப்பில் அருங்காட்சியகமும், 125 அடி உயரத்தில் மாமன்னன் ராஜராஜசோழன் சிலையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*விரைவில் இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளது. குஜராத்தில் சர்தார் வல்லபபாய் படேலுக்கு அமைக்கப் பட்ட சிலை போன்று, ராஜராஜ சோழன் சிலையை வடிவமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என வரலாற்று ஆர்வலர்கள் தெரிவித்தனர்.*

## காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்திட நடவடிக்கை எடுத்திடுக: கோவை கலெக்டர் பவன்குமாரிடம் விவசாயிகள் கோரிக்கை

**கோவை, பிப்.4:**

*கோவை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் தலைமையில் நடைபெற்றது.*

*கலெக்டர் அலுவலகத்தில் தோட்டக்கலை துறை சார்பாக ராபி பருவ காய்கறி சாகுபடி மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் தொடர்பாக கருத்துக்காட்சியும், வேளாண் வணி கம் மற்றும் விற்பனைத்துறை சார்பாக இரண்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவன மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தொடர்பாக கருத்துக் காட்சியும் அமைக்கப்பட்டது.*



*மேலும், இக்கூட்டத்தில் விவசாயிகள் நீர் வழிப்பாதையிலுள்ள முட்புதர்களை அகற்றவும், குளம், குட்டை ஆக்கிரமிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கவும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் குளம், குட்டைகளை தூர்வாருமாறும், சாலையோரங்களிலுள்ள முட்புதர் களை அகற்றவும், தென்னை நார் கழிவுகள் மூலம் நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கவும், காட்டுப்பன்றிகளை கட்டுப்படுத்திடவும், நொய்யல், கௌசிகா நதி மற்றும் பவானி ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவரிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் ஜெயராஜ், முதுநிலை மண்டல மேலாளர் பழனிகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அழகிரி, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) தமிழ்செல்வி, துணை இயக்குநர் (தோட்டக் கலைத்துறை) பாலசுப்பிரமணியன், கலெக்டன் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆனந்தகுமார் மற்றும் அரசு துறை அலுவலர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.*

## ஈரோடு ஈகேஎம் அப்துல் கனி மதரசா பள்ளி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

**ஈரோடு, பிப்.4:**

ஈரோடு ஈ.கே.எம்.அப்துல் கனி மதரசா இஸ்லாமியர் பள்ளியில், 20042005 கல்வியாண்டில் பயின்று வெளியேறிய முன்னாள் மாணவ, மாணவிகளின் சந்திப்பு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு தங்களின் மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய பள்ளியின் தாளாளர் அல்ஹாஜ் ஜி. முகமது தாஜ் முஹ்யித்தீன்,

"இந்தப் பள்ளியில் பயின்ற அனைவரும் எங்களுக்கு எப்போதும் பிள்ளைகளே. எத்தனை ஆண்டுகள் கழித்து வந்தாலும், அதே பாசத்துடனும் மரியாதையுடனும் மாணவர்கள் பழகுவது மகிழ்ச்சியளிக்கிறது," எனத் தெரிவித்தார்.

மேலும், முன்னாள் மாணவர்கள் தங்களின் பொருளாதார நிலைக்கேற்ப, தற்போது பள்ளியில் பயின்று வரும் ஏழை மாணவமாணவிகளில் ஒருவரையாவது மேல்நிலை கல்வி அல்லது கல்லூரி படிப்பு வரை தத்தெடுத்து கல்வி உதவி வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தற்போது பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு முன்னாள் மாணவ, மாணவிகள் சார்பில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், இப்பள்ளியில் பணியாற்றி மறைந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், ஈ.கே.எம். தாஜ் முகமது கலீல் ஹாஜி, முனைவர் ஏ.முகமது உதுமான், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பி.மூசா ராஜா, மதரசா இஸ்லாமிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் ஜுனைதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோடை சீசனை முன்னிட்டு குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணி தொடங்கியது

**குன்னூர், பிப்.4:**

*நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கோடை சீசனை முன்னிட்டு 4 லட்சத்து 50 ஆயிரம் விதைகள் மற்றும் நாற்றுகள் நடவும் பணி தொடங்கியது.*

*நீலகிரி மாவட்டம் குன்னூரில் கோடை சீசனை முன்னிட்டு சிம்ஸ் பூங்காவில் 4 லட்சத்து 50 ஆயிரம் மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணியினை தோட்டக்கலை இனை இயக்குநர் ஷீபிலா மேரி தொடங்கி வைத்தார்.*



*இதில் சிம்ஸபூங்காவில் பல்வேறு வகையான 50 மலர் நாற்றுகளும், 125 க்கும் மேற்பட்ட மலர் விதைகளும் தற்போது நடவும் செய்யும் பணிகள் தொடங்கி உள்ளது. இதில் குறிப்பாக சால்வியா, டேலியா, மெரி கோல்ட், லில்லியம்,*

*பெகோனியா, மேரி கோல்டு, டேலியா உட்பட பல்வேறு வகையான மலர் நாற்றுகளை தோட்டக்கலை பணியாளர்கள் மற்றும் பூங்கா ஊழியர்கள் நடவு செய்தனர். கடந்த ஏப்ரல் முதல் இதுவரை 4 லட்சத்து 25 ஆயிரம் சுற்றுலா பயணிகள் வருகை புரிந்துள்ளனர். இந்தாண்டு அதை விட அதிகமாக சுற்றுலா பயணிகள் வருகை புரிவார்கள் எனத தெரிவித்தார்.*

# கொளத்தூரில் ரூ.11.74 கோடி செலவில் ரத்த சுத்திகரிப்பு நிலையம், மறுவாழ்வு மையம்: மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, பிப்.4:

கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் ரூ.4.98 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் ரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் அந்த வளாகத்தில் 6 நியாய விலைக் கடைகள், கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை



திறந்து வைத்தார்.

மேலும், வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலை சந்திப்பு பகுதியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை, பாதுகாப்பான வளைதள மின்மாற்றிகளாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூர் ரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் திறப்பு:

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் 11.74 கோடி ரூபாய் செலவில் தரைதளம் மற்றும் நான்கு தளங்களுடன் 21,850 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இந்த மையத்தின் தரைத்தளத்தில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள், வரவேற்பு அறை, மின்தூக்கி லாபி, 5 சிந்தாமணி நியாய விலைக் கடைகள் மற்றும் 1 அமுதம் நியாய விலைக் கடை என 6 நியாய விலைக் கடைகள், சாய்வுதளம், மின் தூக்கி (பயணிகள் மற்றும் ஸ்ட்ரெச்சர் வசதியுடன்) மற்றும் கழிப்பறை வசதிகள்; முதல் தளத்தில் பிஸியோதெரபி, உடற்பயிற்சி வசதிகள், எலெக்ட்ரோதெரபி அறைகள், அல்ட்ரா சவுண்ட் பிரிவு, உடற் சிகிச்சைக்கான வசதிகள், காத்திருப்பு அறை, மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள்; இரண்டாம் தளத்தில் செயற்கை மூட்டு (கை/கால்) மையம், மின் தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள்; மூன்றாம் தளத்தில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான அத்தியாவசிய வசதிகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள், நோயாளிகள் சிகிச்சைக்கான 15 படுக்கை வசதிகள், மின்தூக்கி மற்றும் கழிப்பறைகள்; நான்காம் தளத்தில் மருத்துவ ஆலோசனை அறைகள், நோயாளிகள் காத்திருப்பு அறை, பணியாளர்கள் உடைமாற்றும் அறை, உணவு அருந்தும் இடம், மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

## விளையாட்டு செய்திகள்

### நீலகிரியில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசு



நீலகிரி, பிப்.4:

உதகை மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட திறந்த வெளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முதலமைச்சரின் வழிகாட்டுதலின் பேரில், இளைஞர்களின் சமூக முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு, சமூக இணைப்பு மற்றும் உடல்-மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில், ஜனவரி 25 முதல் பிப்ரவரி 8 வரை தமிழ்நாடு முழுவதும் "இது நம்ம ஆட்டம்" என்ற தலைப்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா நடத்தப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற்ற கபடி, கைப்பந்து, கேரம், கயிறு இழுத்தல் மற்றும் எறிபந்து போட்டிகளில் முதலிடம் பெற்ற வீரர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.6,000, இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு ரூ.4,000 மற்றும் மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு ரூ.2,000 பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மண்டல முதுநிலை மேலாளர் (கோவை மண்டலம்)அருணா, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவலர் இந்திரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மகளிர் கிரிக்கெட்டில் சென்னை அணி

சென்னை, பிப்.4:

5 அணிகள் இடையிலான 4-வது மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூ.பி.எல்.) டி20 கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில் நடந்து வருகிறது. முதல் 3 சீசன்களில் களிர் கோப்பையை மும்பை 2 முறை , பெங்களூரு அணி ஒரு முறை கைப்பற்றியுள்ளது

மகளிர் பிரீமியர் லீக் தொடரில் மும்பை, பெங்களூரு, குஜராத், உபி, டெல்லி ஆகிய மாநிலங்கள் சார்பில் அணிகள் உள்ளது. இதில் தமிழகம் சார்பில் எந்த அணியும் இல்லை.

இந்நிலையில் சென்னை அணி நிர்வாகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை மகளிர் கிரிக்கெட்டில் முதலீடு செய்வதாக இருக்கும் என்று சென்னை அணி தலைமைச் செயல் அதிகாரி காசி விஸ்வநாதன் உறஉறுதிப்படுத்தியுள்ளார். அதன்படி மகளிர் பிரீமியர் லீக் தொடரில் தமிழகத்தை அடையாளப்படுத்தும் வகையில் ஒரு அணி உருவாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# மனைவியை குத்திக்கொன்ற வழக்கில் அரசு ஊழியருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

திருவனந்தபுரம், பிப்.4:

கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டம் சேர்த்தலை பள்ளிபுரத்தை சேர்ந்தவர் ராஜேஷ் (வயது 31). இவர் கேரள அரசு படகு போக்குவரத்து துறையில் ஊழியராக பணியாற்றி வந்தார். இவருடைய மனைவி அம்பிளி (27). இவர் அந்த பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவு வங்கியில், பணம் வசூல் செய்யும் முகவராக பணியாற்றி வந்தார்.

இந்தநிலையில் மனைவியின் நடத்தையில் ராஜேசுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதற்கிடையே அம்பிளி பணம் வசூலை முடித்து விட்டு வீடு நோக்கில் ஸ்கூட்டரில் பள்ளிபுரம் கிராம நிர்வாக அலுவலகம் அருகே வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ராஜேஷ், அம்பிளியை நடு ரோட்டில் வழிமறித்து




திடீரென மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக குத்தினார். பின்னர் வசூல் பணத்துடன் அங்கிருந்து தலைமறைவானார். கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த கொலைவெறி தாக்குதலில் பலத்த காயமடைந்த அம்பிளியை, அருகில் நின்றவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அம்பிளி பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் கடந்த 2024-ம் ஆண்டு மே மாதம் 18-ந்தேதி நடந்தது. இந்த கொலை தொடர்பாக சேர்த்தலை போலீசார் வழக்குப்பதிவு செய்து ராஜேசை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை ஆலப்புழை கூடுதல் செசன்சு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி பாரதி, ராஜேஷை குற்றவாளி என அறிவித்தார். மேலும் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.2 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

# அமெரிக்காவின் நெருக்கடிக்கு மோடி பணிந்துவிட்டார்: ராகுல் காந்தி விமர்சனம்

பெங்களூரு, பிப்.4:

நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் காந்தி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: வர்த்தக ஒப்பந்தம் விவகாரத்தில் அமெரிக்காவின் நெருக்கடிக்கு மோடி பணிந்துவிட்டார். நாட்டின் நலனில் மோடி சமரசம் செய்துவிட்டார். பிரதமர் மோடி கலக்கத்தில் உள்ளார். நான்கு மாதங்களாக எந்த முன்னேற்றமும் இன்றி வர்த்தக ஒப்பந்தம் இருந்தது.

எதுவுமே மாறாத நிலையில், தற்போது ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. ஆயிரக்கணக்கான கோடிகள் செலவும் செய்து கட்டமைக்கப்பட்ட மோடி பிம்பம் உடைந்துள்ளது.



பிரதமர் மோடி சமரசம் ஆகிவிட்டார் என்பதுதான் உண்மை. இதை செய்தது யார்? எப்படி செய்தார்கள் என்பதை மக்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்

அமெரிக்காவில் அதானி மீது ஒரு வழக்கு உள்ளது, அது உண்மையில் மோடி மீதான வழக்குதான்.எப்ஸ்டீன் கோப்புகளில் அமெரிக்கா இன்னும் வெளியிடாத பல விஷயங்கள் உள்ளன.

அதன் காரணமாகவும் அழுத்தம் உள்ளது. இவைதான் அந்த இரண்டு அழுத்தப் புள்ளிகள்" இவ்வாறு அவர் பேசினார்.

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளி: மக்களவை ஒத்திவைப்பு

சென்னை, பிப்.4:

நாடாளுமன்றத்தில் கடந்த 1ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று முதல் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இதில், சீன ஆக்கிரமிப்பு குறித்து ராகுல் காந்தியின் பேச்சால் நேற்று நாடாளுமன்றத்தில் அமளி ஏற்பட்டது. இந்நிலையில், நாடாளுமன்றத்தில் மக்களவை இன்று காலை 11 மணிக்கு மீண்டும் கூடியது. அப்போது, அமெரிக்கா - இந்தியா வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுக்கு சாதகமாக இருப்பதாக கூறி நாடாளுமன்றத்தின் மக்களவையில் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் , மக்களவை மதியம் 2 மணிவரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். இதே விவகாரத்தில் மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சென்னை - பெங்களூரு இனி 1.13 மணி நேரத்தில் பயணம்: அஷ்வினி வைஷ்ணவ்

புதுடெல்லி, பிப்.4:

புல்லட் ரயில் பயன்பாட்டுக்கு வந்தால் சென்னையிலிருந்து பெங்களூருக்கு 1.13 மணி நேரத்தில் செல்ல முடியும் என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்

இது குறித்து மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்ததாவது:

"தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்காக 2009-14 காலகட்டத்தில் ஆண்டுக்கு சராசரி ஒதுக்கீடு ரூ. 879 கோடியாக இருந்த நிலையில், 2026-27 நிதியாண்டில் 9



மடங்கு உயர்ந்து ரூ. 7,611 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு 2 புல்லட் ரயில்கள் மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் ரயில்வே துறைக்கு ரூ. 7,611 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, சென்னை - பெங்களூரு மற்றும் சென்னை - ஹைதராபாத் ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் இரண்டு புதிய புல்லட் ரயில் திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன. புல்லட் ரயிலின் மூலம் சுமார் 1 மணி நேரம் 13 நிமிடங்களில் சென்னையில் இருந்து பெங்களூருக்கு செல்ல முடியும்; சென்னையில் இருந்து ஹைதராபாத்துக்கு 2 மணி நேரம் 55 நிமிடங்களில் செல்ல முடியும்" என்றார். நாட்டின் அதிவேக ரயில் இணைப்புக்கான உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஒன்றான அகமதாபாத்-மும்பை புல்லட் ரயில் திட்டம், 508 கி.மீ. தொலைவுடையது.

இது குஜராத் மற்றும் தாத்ரா-நகா ஹவேலியில் 352 கி.மீ., மகாராஷ்டிரத்தில் 156 கி.மீ. தொலைவுக்கு அதிநவீன பொறியியல் நுட்பங்களுடன் உலகத் தரத்தில் கட்டமைக்கப்படுகிறது. இதில் 465 கி.மீ. அதாவது 85 சதவீதம் பாலங்களைக் கொண்டதாகும்.

இந்த புல்லட் ரயில் பயன்பாட்டுக்கு வரும்போது, மும்பை-அகமதாபாத் பயண நேரம் 2 மணி நேரம் 17 நிமிடங்களாக குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### பாலியல் தொல்லை கொடுத்த நண்பரை காதலனுடன் சேர்ந்து கத்தியால் குத்திக்கொன்ற பெண் உள்பட 3 பேர் கைது

மும்பை, பிப்.4:

மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்தை சேர்ந்தவர் மகேஷ். இவருக்கு ரகுசவுகான்(வயது27) என்ற நண்பரின் காதலியான கீதா மாலி என்ற பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து மகேஷ், கீதாமாலியை அடிக்கடி சந்தித்து பேசி வந்தார். மேலும் அவர், அந்தப்பெண்ணுக்கு பலமுறை பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்து வந்தார். இதுபற்றி கீதாமாலி தனது காதலன் ரகுசவுகானிடம் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து ரகுசவுகான் தனது கூட்டாளி ஷியார் மங்ரோலியா(21), காதலி கீதா மாலி ஆகியோர் சேர்ந்து மகேஷை கொலை செய்ய திட்டம் போட்டனர். அதன்படி, பால்கர் மாவட்டம், நைகாவில் உள்ள ஓட்டலுக்கு கடந்த மாதம் 28-ந்தேதி இரவு அவர்கள் மகேஷை வரவழைத்தனர். அப்போது அங்கு அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது ஆத்திரமடைந்த ரகுசவுகான் தனது கூட்டாளியுடன் சேர்ந்து மகேஷை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பியோடினார்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். மேலும் தலைமறைவான ரகுசவுகான், காதலி கீதா மாலி, கூட்டாளி ஷியார் மங்ரோலியா ஆகியோரை போலீசார் தேடி வந்தனர். இதற்கிடையே, அவர்கள் குஜராத் மாநிலத்தில் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. இதன்பேரில் போலீசார் அங்கு சென்று 3 பேரையும் கைது செய்தனர்.

### ரத்தக்கறையால் துப்பு துலங்கியது: நர்சை பலாத்காரம் செய்து கொன்ற வியாபாரிக்கு ஆயுள் தண்டனை

பத்தனம்திட்டா, பிப்.4:

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் கோட்டாங்கல் பகுதியை சேர்ந்தவர் டிஞ்சு (வயது25). நர்சாக பணியாற்றி வந்த இவர் கணவருடனான கருத்து வேறுபாடு காரணமாக, ஆண் நண்பரான டிஜின் (36) என்பவருடன் வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி டிஞ்சு வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக கிடந்தார். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிந்து டிஜினை கைது செய்தனர். டிஞ்சு சாவுக்கு தான் காரணமில்லை என டிஜின் போலீசாரிடம் மன்றாடினார். ஆனால் போலீசார் அவர் மீது நடவடிக்கை எடுத்தனர். இதற்கிடையே டிஞ்சுவின் பிரேத பரிசோதனை அறிக்கையில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டு கொல்லப்பட்ட அதிர்ச்சி தகவல் வெளியானது.

மேலும் அந்த பெண்ணின் விரல் நகத்தில் இருந்த தோல் செதில்கள் மற்றும் ரத்தக்கறை, டிஜின் உடையது அல்ல என்பது தெரிய வந்தது. இதை தொடர்ந்து நிரபராதி என அறிவித்து டிஜின் விடுவிக்கப்பட்டார். ஆனால் உண்மையான குற்றவாளி யார்? என்பதில் மர்மம் நீடித்தது. பின்னர் இந்த வழக்கை குற்றப்பிரிவு போலீசார் விசாரித்தனர். சுமார் 22 மாதங்களுக்கு பிறகு இந்த வழக்கில் துப்பு துலங்கியது. அதாவது, அருகில் உள்ள பகுதியை சேர்ந்த மர வியாபாரியான நசீர் (46) என்பவரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். நேரடி சாட்சிகள் இல்லாத நிலையில், டிஞ்சுவின் பிரேத பரிசோதனையின் போது பெறப்பட்ட ரத்தக்கறை ஆகியவற்றை பரிசோதித்த போது, நசீர் உடன் ஒத்துபோனது. இதுதான் இந்த வழக்கின் முக்கிய ஆதாரமாக அமைந்தது. மேலும் நர்சுவை பலாத்காரம் செய்து வியாபாரி கொன்றது எப்படி? என்ற பகீர் தகவலும் அம்பலமானது. சம்பவத்தன்று மர வியாபாரியான நசீர், டிஞ்சு வீட்டுக்கு மரத்தை வெட்டுவதற்காக வந்த போது, அங்கு டிஞ்சு மட்டுமே இருந்துள்ளார். அவரை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை துளிர்விட, உடனே அவர் வீட்டுக்குள் அத்துமீறி புகுந்தார். அங்கு கண்ணிமைக்கும் நேரத்தில் டிஞ்சுவை தாக்கியதில் அவர் மயக்க நிலைக்கு சென்றார். பின்னர் அவரை நசீர் பாலியல் பலாத்காரம் செய்தார். பிறகு அரை குறை உயிருடன் போராடிய நர்சுவை அங்கிருந்த துணியால் கழுத்தில் கட்டி, வீட்டில் தொங்க விட்டு கொன்றது போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. இதுதொடர்பான வழக்கு பத்தனம்திட்டா கூடுதல் கோர்ட்டில் நடைபெற்று வந்த நிலையில் நசீர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து நீதிபதி ஜெயகிருஷ்ணன், குற்றவாளி நசீருக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

## வணிகச் செய்திகள்

### மீண்டும் ஏறுமுகம்: தங்கம் விலை ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,560 உயர்வு

சென்னை, பிப்.4:

சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கம் விலை (பிப்.3) ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,560 உயர்ந்துள்ளது. வெள்ளி விலை காலை குறைந்திருந்த நிலையில், மதியம் கிராமுக்கு ரூ.30 உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

2026 ஜனவரி பிறந்ததில் இருந்து தங்கம் விலை பல உச்சங்களைத் தொட்டு பேரதிர்ச்சியைக் கடத்தி வந்தது. ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்தை கடந்தது. வெள்ளி விலையும் கடும் ஏற்றம் கண்டது. இந்தச் சூழலில் மாதக் கடைசி நாட்களான ஜன.30, 31 தேதிகளிலும், பிப்.2-ம் தேதியும் தங்கம் விலை ஏறிய வேகத்தில் இறங்கி வாடிக்கையாளர்களை ஆசுவாசப்படுத்தியது. மூன்று நாட்களில் பவுனுக்கு ரூ.22,800 வரை குறைந்தது. இந்த விலை குறைப்பு நீடிக்காத என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்னையில் இன்று (பிப்.3) காலை 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,030-க்கும், பவுனுக்கு ரூ.640 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,12,240-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்று மதியமும், கிராமுக்கு ரூ.240 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,270-க்கும், பவுனுக்கு ரூ.1920 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,14,160-க்கும் விற்பனையாகிறது. இன்று ஒரே நாளில் மட்டும் தங்கம் விலை மொத்தமாக பவுனுக்கு ரூ.2,560 அதிகரித்துள்ளது.

# ரயில்வே துறைக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கீடு



புதுடெல்லி, பிப்.4:

சென்னை-பெங்களூரு உள்பட 7 அதிவேக ரெயில் பாதைகள் அமைக்கப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரெயில்வே துறையின் மூலனதச் செலவுகளுக்காக மத்திய பட்ஜெட்டில்முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ரெயில்வே துறையின் மூலனதச் செலவுகளுக்காக மத்திய பட்ஜெட்டில்முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் புதிய ரெயில் வழித்தடங்கள் அமைத்தல், ரெயில் என்ஜின், பெட்டிகள் கொள்முதல், உற்பத்தி உள்ளிட்டவை அடங்கும்.

கடந்த ஆண்டு ரெயில்வேக்கு ரூ.2,52,000 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் இந்த முறை 10.25 சதவீதம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பட்ஜெட் ஆவணங்களில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ரெயில்வே துறை மொத்தம் ரூ.3,85,733.33 கோடி வருவாய் ஈட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதில் செலவு ரூ.3,82,186.01 கோடி என்றும், நிதியாண்டின் இறுதியில் உபரித் தொகை ரூ.3,547.32 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ரெயில்வே துறைக்கான மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. ரூ.2,77,380 கோடியில் ரயில்வே தண்டவாளங்கள் அமைக்க ரூ.36,721.55 கோடி, தண்டவாளத்தை அகலப்படுத்தும் பணிகளுக்கு ரூ.4,600 கோடி, இரண்டாவது வழித் தடம் அமைக்க ரூ.37,750 கோடி, என்ஜின், பெட்டிகள் கொள்முதல், உற்பத்திக்கு ரூ.7,500 கோடி, சிக்னல் அமைப்பு, ரெயில்வே தொலைத்தொடர்பு, கவச் பாதுகாப்பு ஏற்பாடு உள்ளிட்டவற்றுக்கு ரூ.7,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை-பெங்களூரு, சென்னை-ஹைதராபாத், புணே-ஹைதராபாத், பெங்களூரு - ஹைதராபாத், பெங்களூரு - வாரணாசி, வாரணாசி - சிலிகுரி இடையே அதிவேக ரயில் வழித்தடங்கள் அமைக்கும் அறிவிப்பு பட்ஜெட்டில் வெளியாகியுள்ளது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இது தொடர்பாக ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், 'ரெயில்வே துறைக்கான அறிவிப்புகளுக்காக பிரதமர் மோடி, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

7 அதிவேக வழித்தடங்கள் மட்டுமல்லாது, சரக்கு போக்குவரத்துக்கான பிரத்யேக வழித்தடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. வளர்ந்த பாரதம் என்ற இலக்கை எட்ட ரெயில்வே துறை தொடர்ந்து சிறப்பாக பங்களிக்கும்' என்றார்.

## பிகார் சட்டப்பேரவைக்கு சக்கர நாற்காலியில் வந்த தேஜஸ்வி யாதவ்!

பாட்னா, பிப்.4:

பிகார் சட்டப்பேரவைக்கு ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சி செயல் தலைவரும், முன்னாள் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் (36), சக்கர நாற்காலியில் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பிகார் சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் திங்கள்கிழமை தொடங்கியது. தேஜஸ்வி யாதவ் பேரவைக்கு சக்கர நாற்காலியில் வந்து கலந்து கொண்டார். இதையடுத்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: எனது வலது கால் பெருவிரலில் பலத்த காயம் ஏற்பட்டது. விரலில் உள்ள நகம், அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. இதனால் நடப்பது கடினமாக உள்ளது. பிகார் ஆளுநரின் பேச்சு, மாநில அரசால் தயாரிக்கப்பட்டது. வளர்ச்சிக் காரணிகளில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பிகார் பின்தங்கிய போதிலும், ஆளுநர் உரையில் வளர்ச்சி நல்ல நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 20 ஆண்டுகளாக அவரே (நிதிஷ்குமார்) முதல்வர் நாற்காலியில் உள்ளார். அப்படி இருக்கையில் ஏன் இந்நிலை என்பது குறித்து அரசு மௌனம் காக்கிறது. இதேபோல், பிகாரில் பாலியல் வன்கொடுமைகள், கொலைகள், பிற குற்றங்கள் தொடா்ந்து அரங்கேறுகின்றன. ஆனால் மாநில அரசோ, சட்டம்-ஒழுங்கு நிலை நன்றாக இருப்பதாகத் தெரிவிக்கிறது.

## பொதுத் துறை வங்கிகளில் 49% அந்நிய நேரடி முதலீடு: மத்திய அரசு பரிசீலனை

புதுடெல்லி, பிப்.4:

பொதுத் துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக அதிகரிக்க மத்திய அரசு பரிசீலித்து வருவதாக மத்திய நிதியமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறை செயலர் எம்.நாகராஜூ தெரிவித்தார்.

இப்போது பொதுத் துறை வங்கிகளில் 20 சதவீதமும், தனியார் வங்கிகளில் 74 சதவீதமும் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் டில்லியில் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த எம்.நாகராஜூ இது தொடர்பாக கூறுகையில், 'பொதுத்துறை வங்கிகளின் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக அதிகரிப்பது குறித்து மத்திய அரசு தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. மத்திய அமைச்சங்களுக்கு இடையே இது தொடர்பாக ஆலோசனை நடத்தப்படுகிறது. ஐடிபிஐ வங்கி விற்பனை தொடர்பான அறிவிப்பு மற்றும் அதற்கான நிதி 'டெண்டர்' இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்தில் வெளியாகும்' என்றார். பல வங்கிகளை இணைத்து ஒரு சில பெரிய வங்கிகளை உருவாக்கும் திட்டம் தொடர்பான கேள்விக்கு, 'நமது நாடு பெரியது எனவே, அதற்கு ஏற்ப 3 அல்லது 4 மிகப்பெரிய வங்கிகள் அவசியம்தான்' என்றார்.

மொத்தமுள்ள 12 பொதுத் துறை வங்கிகளில் மத்திய அரசின் பங்குகளின் எண்ணிக்கை கடந்த 2020-ஆம் ஆண்டு முதல் குறையாமல்தான் உள்ளது. எனினும், விகிதம் அடிப்படையில் மத்திய அரசு கைவசம் உள்ள பொதுத்துறை வங்கிகளின் பங்குகள் குறைந்தே வருகின்றன. வங்கிகள் சந்தையில் பங்குகளை வெளியிட்டு தங்கள் மூலனதத்தை அதிகரித்து வருவதே இதற்குக் காரணமாகும்.

## மூன்று நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்றார் ஜெய்சங்கர்: அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை

புதுடெல்லி, பிப்.4:

வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மூன்று நாள்கள் பயணமாக அமெரிக்காவுக்கு திங்கள்கிழமை புறப்பட்டார். அங்கு அந்நாட்டு அமைச்சர்களுடன் அரியவகை கனிம வளங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அவர் விவாதிக்க இருக்கிறார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் வரி விதிப்புகள் உள்ளிட்ட செயல்பாடுகள் காரணமாக அந்த நாட்டுடனான இந்திய உறவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மோசமாக உள்ளது. அண்மையில், இந்திய - ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து டிரம்ப் அதிருப்தி தெரிவித்தார். மேலும், இந்தியா இனி (அமெரிக்க கட்டுப்பாட்டில் உள்ள) வெனிசுலாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் என்றும், இதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ள ப்பட்டுவிட்டதாகவும் தன்னிச்சையாக அறிவித்தார். இந்தச் சூழ்நிலையில் ஜெய்சங்கரின் அமெரிக்கப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பிப்ரவரி 2 முதல் 5-ஆம் தேதி வரை அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்கிறார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தலைமையில் அரியவகை கனிமங்கள் விவகாரம் தொடர்பாக அது சார்ந்து துறை அமைச்சர்களுடன் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க இருக்கிறார். கனிமங்கள் மட்டுமின்றி எரிசக்தி விநியோகம் தொடர்பான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுகிறார். அமெரிக்க அதிபரின் நிர்வாகத்தில் உள்ள மூத்த அதிகாரிகளையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச இருக்கிறார்' என்று கூறப்பட்டுள்ளது.

## இரவில் கல்லறைக்கு பிரியாணி ஆர்டர் செய்த பெண்! டெலிவரி செய்ய மறுப்பு!



புதுடெல்லி, பிப்.4:

இரவில் கல்லறையில் இருந்தவாறு பெண் ஒருவர் பிரியாணி ஆர்டர் செய்துள்ளார். இதனைக் கொண்டுவந்த உணவு விநியோய ஊழியர், அச்சத்தின் காரணமாக உணவை விநியோகிக்காமல் சென்றுள்ளார்.

கல்லறைக்கு வெளியே இருந்து அப்பெண்ணுக்கு அழைத்தபோது, நேராக உள்ளே வருமாறு அவர் கூறியுள்ளார்.

இதனால் அச்சமடைந்த உணவு விநியோக ஊழியர், ஆர்டரை ரத்து செய்யுமாறு பணிவுடன் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்துள்ளார்.

இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது. ஒருபுறம் நகைப்பாக இருந்தாலும் உணவு விநியோக ஊழியரின் இடத்தில் இருந்து பார்த்தால், மிகவும் மோசமான அனுபவமாகவே இருக்கும் என பலர் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

இந்த விடியோவில் உணவு விநியோக உழியர் ஒருவர், இரவு நேரத்தில் தனது கடைசி உணவு (பிரியாணி) ஆர்டரை டெலிவரி செய்யச் செல்கிறார். அந்த இடம் நேராக கல்லறைக்கு வெளியே சென்று முடிகிறது. இதனால், பிரியாணி ஆர்டர் செய்த பெண்ணுக்கு தொலைபேசியில் அழைக்கிறார். உணவு டெலிவரி செய்ய வேண்டிய இடத்திற்கு வந்துவிட்டதாகவும், உணவை வாங்கிக்கொள்ளுமாறும் கூறுகிறார். ஆனால், அப்பெண் கல்லறையின் வாயிலில் நுழைந்து நேராக வருமாறு கூறுகிறார்.

உள்ளே பார்ட்டி கொண்டாட்டத்தில் இருப்பதாகவும், பிரியாணியை கொண்டுவந்து தருமாறும் கூறுகிறார். இதனால் அச்சமடைந்த உணவு விநியோக ஊழியர், கண்ணியமாக உணவு ஆர்டரை ரத்து செய்துகொள்ளுமாறு கூறுகிறார். தனக்கு அச்சமாக இருப்பதாகக் கூறி அழைப்பை துண்டித்துவிட்டு அந்த இடத்திலிருந்து புறப்படுகிறார். இந்தக் காட்சிகள் இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

பிரியாணி டெலிவரி செய்ய வந்தவர், பேய், பிசாசுகளுக்கு பிரியாணியாகியிருப்பார் என பலர் கேலியாக கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

பார்க்க கேலியாக இருந்தாலும் உணவு விநியோகம் செய்பவரின் இடத்தில் இருந்து பார்க்கும்போது மிகவும் மோசமான அனுபவமாக இது இருந்திருக்கும் எனவும் கருத்துகளைப் பதிவிட்டுள்ளனர்.

## "இவ்வளவு பொய் பேசும் தலைமை தேர்தல் ஆணையரை பார்த்ததே இல்லை" - மம்தா காட்டம்

புதுடெல்லி, பிப்.4:

திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை இன்று சந்தித்தார். அவருடன் 15 பேர் கொண்ட கட்சி நிர்வாகிகளும், தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏராளமான பொதுமக்களும் சென்றனர். இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி, "நான் மிகவும் வருத்தமாக இருக்கிறேன். நான் டெல்லி அரசியலில் நீண்ட காலமாக இருக்கிறேன். 4 முறை அமைச்சராகவும், 7 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளேன்.

இவ்வளவு ஆணவமாகவும் இவ்வளவு பொய் பேசுபவராகவும் இருக்கும் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையரை நான் பார்த்ததே இல்லை. உங்கள் நாற்காலியை நான் மதிக்கிறேன் என்று நான் அவரிடம் சொன்னேன். ஏனென்றால், எந்த நாற்காலியும் யாருக்கும் நிரந்தரமல்ல. ஒரு நாள் நீங்கள் வெளியேறத்தான் வேண்டும். மேற்கு வங்கம் ஏன் குறிவைக்கப்படுகிறது? ஜனநாயகத்தில் தேர்தல்கள் ஒரு திருவிழா. ஆனால், நீங்கள் 58 லட்சம் பெயர்களை நீக்கிவிட்டீர்கள். அவர்களுக்கு இருக்கும் உரிமையை அவர்கள் பாதுகாத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், தேர்தல் நடைபெறும் மாநிலங்களை தவிர்த்துவிட்டு முறையான திட்டமிடலுடன் செய்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் (தேர்தல் ஆணையம்) அவ்வாறு செய்யவில்லை. அசாமில் தீவிர திருத்தப் பணிகளை நீங்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால், மேற்கு வங்கத்திலும் தமிழ்நாட்டிலும் செய்திருக்கிறீர்கள். இதில் நிறைய முரண்பாடுகளும் தவறான பதிவுகளும் உள்ளன என்றார்.

## டிசம்பரில் விமான சேவை கடும் பாதிப்பு: பயணிகளுக்கு ரூ. 22 கோடிக்கும் மேல் இழப்பீடு வழங்கிய இண்டிகோ!




புதுடெல்லி, பிப்.4:

2025 டிசம்பரில் இண்டிகோ நிறுவன விமான சேவைகள் முடக்கத்துக்கு இழப்பீடாக பயணிகளுக்கு அந்த ஒரு மாதத்தில் மட்டும் அந்நிறுவனம் ரூ. 22 கோடி இழப்பீடு வழங்கியுள்ளது.

விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணிநேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிடிஎல்) கடந்த ஆண்டு நவ. 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தன.

இந்த மாற்றங்களுக்கு ஏற்ப இண்டிகோ நிறுவனம் முன்கூட்டியே திட்டமிடாததால், விமானிகள், விமானப் பணிப்பெண்கள் உள்ளிட்டோா் அடங்கிய பணிக் குழுவுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால், இண்டிகோ நிறுவன விமான சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இதன்விளைவாக, டிசம்பர் தொடக்கத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டு பயணிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.

இந்த நிலையில், விமானம் ரத்து, தாமதமாகுதல் அல்லது பிற காரணங்களுக்காக பயணிகளுக்கு சேவைக் குறைபாடு ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டைச் சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்கள் வழங்க வேண்டும். அந்த வகையில், கடந்த 2025-ஆம் ஆண்டின் டிசம்பரில், விமான நிறுவனங்கள் பயணிகளுக்கான இழப்பீடாக செலவழித்த தொகை மொத்தம் ரூ. 24 கோடிக்கும் மேல் என்ற தகவலை மாநிலங்களவையில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், இண்டிகோ நிறுவனம் ரூ. 22.68 கோடியும், ஏர் இந்தியா குழுமம் ரூ. 74.61 லட்சமும், ஸ்பைஸ்ஜெட் மற்றும் ஏர் ஆகாஷா தலா ரூ. 40 பயணிகளுக்காக வழங்கியுள்ளன.

## திறன் மேம்பாட்டுத் திட்ட முறைகேடு வழக்கில் சந்திரபாபு நாயுடுவுக்கு தொடர்பு இல்லை: அமலாக்கத் துறை

விசாகப்பட்டினம், பிப்.4:

திறன் மேம்பாட்டுக் கழக முறைகேடு தொடர்பான வழக்கில், ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு அமலாக்கத் துறை நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. குற்றம்சாட்டப்பட்ட சம்பவத்தில் அவருக்கு நேரடி அல்லது மறைமுகத் தொடர்பு இல்லை என்றும் அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது. விசாகப்பட்டினத்தில் உள்ள எம்.பி, எம்எல்ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் ஜனவரி 31 அன்று தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் குற்றப் பத்திரிகையில், திறன் மேம்பாட்டுக் கழக முறைகேடு வழக்கில் சந்திரபாபு நாயுடுவுக்குத் தொடர்பு இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று அமலாக்கத் துறை கூறியுள்ளதுடன், இந்த வழக்கில் அவரை குற்றம்சாட்டப்பட்டவராக சேர்க்கவில்லை. முன்னதாக, திறன் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான முறைகேடுகளில் சந்திரபாபு நாயுடுவுக்குத் தொடர்பு இல்லை என்பதை ஆந்திரப் பிரதேச குற்றப் புலனாய்வுத் துறையும் உறுதிப்படுத்தியிருந்தது. வழக்கை வாபஸ் பெற அனுமதித்தபோது, விஜயவாடா ஊழல் தடுப்புப் பிரிவு நீதிமன்றமும், குற்றச்சாட்டுகளை நிரூபிக்க எந்த முகாந்திரமும் இல்லை என்று தெளிவுபடுத்தியது.

## கடந்த ஜனவரி மாதம் மின்சார இருசக்கர வாகனங்கள் பதிவு உயர்வு



புதுடெல்லி, பிப்.4:

நாட்டில் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதற்கு ஏற்றாற்போல் புதிதாக வாங்கும் மின்சார இருசக்கர வாகனங்களின் வாகனபதிவுகளும் உயர்ந்து வருகிறது.அந்தவகையில் நாடு முழுவதும் கடந்த ஜனவரி மாதம் பதிவான மின்சார வாகன பதிவுகள் குறித்தான விவரத்தை மத்திய அமைச்சகத்தின் வாகன் டேட்டா தெரிவித்துள்ளது. இதில் நாட்டில் மொத்தம் 2 லட்சத்து 8 ஆயிரம் மின்சார இருசக்கர வாகனங்கள் கடந்த மாதத்தில் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டு ஜனவரியை காட்டிலும் 22 சதவீதம் அதிகமாகும்.

## மோமோஸுக்காக ரூ. 85 லட்சம் நகை! சிறுவனை ஏமாற்றிய 3 இளைஞர்களுக்கு வலைவீச்சு!



புதுடெல்லி, பிப்.4:

உத்தரப் பிரதேசத்தில் மோமோஸுக்காக சிறுவன் ஒருவன், வீட்டில் இருந்த ரூ. 85 லட்சம் மதிப்புடைய நகையை வியாபாரிகளிடம் கொடுத்துள்ளார். அப்பகுதியில் மோமோஸ் கடை நடத்திவரும் 3 இளைஞர்கள் சிறுவனிடம் நன்கு பழகி, நகைகளைப் பெற்றுக்கொண்டு மோமோஸ் வழங்கியுள்ளனர். இது காவல் துறையின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் தியோரியா மாவட்டத்தில், வாழ்நாள் முழுவதும் இலவசமாக மோமோஸ் தருவதாகக் கூறிய 3 இளைஞர்களை நம்பி, 7 ஆம் வகுப்பு பயிலும் சிறுவன், வீட்டில் இருந்த ரூ. 85 லட்சம் மதிப்பிலான நகைகளைக் கொடுத்துள்ளார்.

சிறுவனின் சகோதரி பெற்றோரிடம் நகைகளைக் கேட்டு அழுதுள்ளார். அப்போது, பெற்றோர் அலமாறியைத் திறந்து பார்க்கும்போது வீட்டில் நகைகள் இல்லைஎன்பது தெரியவந்துள்ளது.

இதனைத்தொடர்ந்து சிறுவனிடம் கேட்டபோது, மோமோஸுக்காக வியாபாரிகளிடம் நகைகளைக் கொடுத்ததைக் கூறியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட காவல் துறையினர், 3 இளைஞர்களே இதற்கு காரணம் என்பதை கண்டறிந்தனர். 3 இளைஞர்களும் தியோரியா - கசாயா சாலையில் மோமோஸ் கடை நடத்தி வருகின்றனர்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் சிறுவனிடம் நன்கு பழகி, அவனின் நம்பிக்கையைப் பெற்ற பிறகே, இலவச மோமோஸுக்காக வீட்டில் இருந்த நகைகளை எடுத்துவர அவர்கள் கட்டாயப்படுத்தியுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

வீட்டில் உள்ள நகைகளை சிறுவனால் எடுக்க முடியும் என்பதை கண்காணித்தே இதனைச் செய்துள்ளனர். சிறுவன் எடுத்து வந்து கொடுத்த நகைகள் அனைத்துமே சகோதரியினுடையது. இதன் மதிப்பு ரூ. 85 லட்சம் என காவல் துறை மதிப்பிட்டுள்ளது.

சிறுவனின் தந்தை விமலேஷ் மிஸ்ரா, வாரணாசியில் உள்ள கோயிலில் பூசாரியாக உள்ளார். படிப்புக்காக மகனையும் மகளையும் கிராமத்தில் விட்டுச் சென்றுள்ளார். சிறுவனின் தந்தை கொடுத்த புகாரின்பேரில் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து, 3 இளைஞர்களையும் தேடி வருகின்றனர்.

அறிமுகமில்லாத நபர்கள் பேச்சுக்கொடுத்தால், அதனை நம்ப வேண்டாம் என குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என பெற்றோர்களிடம்காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். மோமோஸ் உணவுக்காக அறிமுகம் இல்லாத நபர்களின் வாக்குறுதியை நம்பி, வீட்டில் இருந்த நகைகளை சிறுவன் ஒருவன் எடுத்துக்கொடுத்துள்ள சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியா எண்ணெய் கொள்முதலை நிறுத்தவில்லை! - ரஷிய அரசு தகவல்!

**மாஸ்கோ, பிப்.4:**

எண்ணெய் கொள்முதலை நிறுத்துவது குறித்து இந்தியாவிடம் இருந்து எந்தவொரு செய்தியும் வரவில்லை என ரஷிய அரசு அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தத்திற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த திங்களன்று (பிப். 2) ஒப்புதல் வழங்கினார். இத்துடன், இந்திய பொருள்கள் மீதான 25 சதவீத வரியை 18 ஆகக் குறைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




இதனைத் தொடர்ந்து, ரஷியாவிடமிருந்து எண்ணெய் கொள்முதலை நிறுத்தவும், வெனிசுவேலா மற்றும் அமெரிக்காவிடம் எண்ணெய் இறக்குமதி செய்வதற்கும் பிரதமர் நரேந்திர மோடி ஒப்புக்கொண்டதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். இந்த விவகாரம், சர்வதேச அளவில் பெரும் பேசுபொருளாகியுள்ளது.

இந்த நிலையில், இந்த விவகாரத்தில் இந்திய அரசிடம் இருந்து எந்தவொரு செய்தியும் வரவில்லை என ரஷிய அரசின் செய்தித்தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் கூறுகையில், இந்தியாவுடனான உறவுகளை அனைத்து வழிகளிலும் மேம்படுத்துவதற்கு ரஷியா விரும்புவதாகக் கூறியுள்ளார்.

மேலும், ஒப்பந்தத்தை ரத்து செய்வது குறித்து இந்திய சுத்தகரிப்பாளர்களிடம் இருந்தும் எந்தவொரு தகவலும் வரவில்லை என ரஷிய எரிசக்தி அமைச்சகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, 88 சதவீத எண்ணெய்யை இந்தியா வெளிநாடுகளிடம் இருந்து கொள்முதல் செய்கின்றது. உக்ரைன் மீதான போரால், ரஷியாவிடம் எண்ணெய் கொள்முதல் செய்வதை ஐரோப்பிய நாடுகள் ரத்து செய்துள்ளன.

ஆனால், மிகப் பெரிய எரிசக்தி தேவையுடைய இந்தியா தொடர்ந்து ரஷியாவிடம் எண்ணெய் கொள்முதல் செய்வதால், கடந்த 2025 ஆம் ஆண்டு இந்தியா மீது அதிபர் டிரம்ப் 50 சதவீத வரி விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு! 3 இந்தியர்கள் கைது!

**நியூயார்க், பிப்.4:**

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் சர்ரே நகரத்தின் கிரெசண்ட் பீச் பகுதியில், கடந்த பிப்.1 அன்று அதிகாலை அங்குள்ள வீட்டின் மீது சில நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்துவதாக, கனடா காவல் துறையினருக்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பணம் பறிக்கும் கும்பல்களுக்கு எதிரான ரோந்துப் பணியில் ஈடுபட்ட காவல் துறையினர் இந்தியாவைச் சேர்ந்த ஹர்ஜோத் சிங் (வயது 21), தரன்வீர் சிங் (19) மற்றும் தயாஜீத் சிங் பில்லிங் (21) ஆகியோரை, நேற்று (பிப். 2) கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில், 3 பேரின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் மூவரும் பிப்.5 வரை விசாரணைக்காக அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும், கைது செய்யப்பட்ட மூவரும் வெளிநாட்டவர்கள் என்பதால் அவர்கள் மீது கூடுதல் பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படும் எனக் கூறப்படுகிறது. முன்னதாக, பிரோஜக்ட் அஷ்ஷுரன்ஸ் எனும் பெயரில் கனடா அதிகாரிகள் பணம் பறிக்கும் கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் அடிப்படையில், இந்தியர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், சமீபகாலமாக சர்ரே நகரத்தில் வீடுகள் மற்றும் வர்த்தக மையங்களின் மீதான கும்பல்களின் துப்பாக்கிச் சூடு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ரஷியாவில் அதிசயம்..! ஒரே நேரத்தில் தோன்றிய 4 நிலவுகள்!

**மாஸ்கோ, பிப்.4:**

ரஷியாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரே நேரத்தில் 4 நிலவுகள் வானில் தென்பட்டன. இதுதொடர்பான புகைப்படங்களும்,



விடியோக்களும் இணையத்தை ஆக்கிரமித்து ஆச்சரித்தை ஏற்படுத்தியுள்ளது. மொத்தமுள்ள 8 கோள்களில் புதன் (மெர்குரி) மற்றும் வியாழன் (வெள்ளி) கோள்களைத் தவிர மற்ற அனைத்திலும் நிலவுகள் உள்ளன. அதிகபட்சமாக சனி (சாட்டர்ன்) மற்றும் வியாழன் (ஜூப்பிடர்) கோள்களில் 100-க்கும் அதிகமான நிலவுகள் உள்ளன.

பூமிக்கு ஒரு நிலவு மட்டுமே உள்ள நிலையில், ரஷியாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் மட்டும் 4 நிலவுகள் ஒரே நேரத்தில் வானில் தென்பட்டது எப்படி என்ற கேள்வி எழுந்துள்ளது. இதனை மாயத்தோற்றம் (OPTICAL ILLUSION) என்று வானிலை ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த நிகழ்வு பாரசெலீன் (PARASELENE) அல்லது மூன் டாக் (MOON DOG) என்று அழைக்கப்படுகிறது. இந்த பாரசெலீன் நிகழ்வு ஒரு அரிய வானிலை நிகழ்வாகும். பூமியில் இருந்து 20,000 அடி உயரத்துக்கு மேல் பனிக்கட்டிகளால் உருவாகும் சிரஸ் மேகக் கூட்டங்கள் வழியாக நிலவின் ஒளி ஊடுருவிச் செல்லும்போது ஏற்படும் ஒளிவிலகலால் இதுபோன்ற போலி நிலவுகள் உருவாவதாக வானிலை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

# கோஸ்டா ரிகா அதிபர் தேர்தல்: ஆளுங்கட்சி வேட்பாளர் வெற்றி

மத்திய அமெரிக்க நாடான கோஸ்டா ரிகாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், ஆளுங்கட்சி வேட்பாளர் லாரா ஃபெர்னாண்டஸ் 48.9 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். அந்நாட்டு சட்டப்படி, ஒரு அதிபர் வேட்பாளர் முதல் சுற்றிலேயே வெற்றி பெற 40 சதவீத வாக்குகள் போதுமானது என்பதால், ஏப்ரலில் நடைபெறவிருந்த 2-ஆம் கட்டத் தேர்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பொருளாதார நிபுணர் ஆல்வாரோ ராமோஸ் 33 சதவீத வாக்குகளுடன் தோல்வியைத் தழுவினார். அவர் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டதோடு, புதிய அரசுக்கு ஒரு 'ஆக்கபூர்வமான' எதிர்க்கட்சியாக இருந்து செயல்படுவோம் என்றும் அறிவித்துள்ளார்.

தற்போதைய அதிபர் ரோட்ரிகோ சாவ்ஸின் தீவிர ஆதரவாளரான 39 வயது லாரா ஃபெர்னாண்டஸ், ஏற்கெனவே திட்டமிடல் மற்றும் அதிபர் துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

# அமெரிக்கா செல்கிறார் கொலம்பியா அதிபர்! டிரம்ப்பின் மிரட்டலுக்குப் பணிந்தாரா?

**கொலம்பியா, பிப்.4:**

கொலம்பியா நாட்டின் அதிபர் குஸ்தாவோ பெட்ரோ அமெரிக்காவுக்குச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அதிரடியாகத் தாக்குதல் நடத்தி அமெரிக்கா சிறைப்பிடித்தது. போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் அமெரிக்க நீதிமன்றத்தில் வெனிசுவேலா அதிபரின் வழக்கு விசாரிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்குள் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வருவதாக கொலம்பியா அதிபர் குஸ்தாவோ பெட்ரோவின் மீது குற்றம்சாட்டிய அதிபர் டொனால்ட் டிரம்ப் அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மிரட்டல் விடுத்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகளால், அதிபர் பெட்ரோ, அவரது குடும்பத்தினர் மற்றும் கொலம்பியாவின் அரசு அதிகாரிகளின் மீது தடை விதிப்பதாக டிரம்ப்பின் நிர்வாகம் கடந்த 2025 அக்டோபரில் அறிவித்திருந்தது. இந்த நிலையில், அரசு முறைப் பயணமாக (பிப். 3) அமெரிக்காவுக்குச் செல்லும் கொலம்பியா அதிபர் குஸ்தாவோ பெட்ரோ வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்ப்பை நேரில் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, அதிபர் டிரம்ப் கூறுகையில், வெனிசுவேலா தாக்குதலுக்குப் பிறகு அவர் (அதிபர் குஸ்தாவோ பெட்ரோ) மிகவும் நல்லவராக நடந்து கொள்கிறார்" எனக் கூறியுள்ளார்.

முன்னதாக, இடதுசாரி கொள்கைகளுடைய அதிபர் குஸ்தாவோ காஸா, வெனிசுவேலா விவகாரங்களில், அதிபர் டிரம்ப்பின் நிர்வாகத்தின் நடவடிக்கைகள் அனைத்தையும் கடுமையாக விமர்சித்து வந்தார். இந்தச் சூழலில், அமெரிக்கா மற்றும் கொலம்பியா அதிபர்கள் இடையிலான சந்திப்பு சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.

# அமெரிக்க குடியுரிமை சட்டத்தை விமர்சித்த பாடகி..! கிராமி விருது விழாவில் சர்ச்சை!

**வாஷிங்டன், பிப்.4:**

கிராமி விருது வென்ற அமெரிக்க பாடகி பில்லி ஐலீஷின் (24 வயது) பேச்சு சமூக வலைதளத்தில் ஆதரவும் எதிர்ப்புமாக சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.



அமெரிக்க நாட்டில் குடியுரிமைக்கு எதிரான தனது கருத்தினை விருது விழாவில் கூறிய அவருக்கு கடுமையான எதிர்ப்புகளும் கிளம்பி வருகின்றன.

கடந்த பிப்.1ஆம் தேதி நள்ளிரவு லாஸ் ஏஞ்சலீஸில் 68-ஆவது கிராமி விருது விழா நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த விழாவில் அமெரிக்க பாடகரும் எழுத்தாளருமான பில்லி ஐலீஸுக்கு 2025-ன் சிறப்பான பாடலுக்கான கிராமி விருது வழங்கப்பட்டது. 'வைல்டுபிளவர்' என்று எழுதப்பட்ட இந்தப் பாடலுக்கு கிராமி விருது வழங்கப்பட்டது. இது அவரது 10-ஆவது கிராமி விருது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மர், சூடான் உள்பட 75 நாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேற விரும்பும் மக்களால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக சுட்டிக்காட்டியே மேற்கண்ட நாடுகளிலிருந்து அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேற விரும்பும் மக்களுக்கு விசா வழங்குதல் நிறுத்தப்பட உள்ளது. இந்த நடைமுறை வரும் ஜன. 21 முதல் அமலுக்கு வந்தது.

# பனிப்புயல் - உருக்குலைந்த அமெரிக்கா: 100-ஐ நெருங்கும் பலி எண்ணிக்கை

**ஜார்ஜியா, பிப்.4:**

பனிப்புயலால் அமெரிக்காவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100ஐ நெருங்கி உள்ளது.

அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியை தாக்கிய சக்திவாய்ந்த பனி புயல் காரணமாக வட மற்றும் தென் கரோலினா மாகாணங்கள் மற்றும் ஜார்ஜியா மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.



மலைபோல் குவியல் குவியலாக குவிந்து வரும் பனி குவியல்களால் மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். சுமார் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. பெரும்பாலான இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் பனிப்புயல் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் 100ஐ நெருங்குவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஈரான் அணுசக்தி விவகாரம்! பதற்றத்தைத் தணிக்க தொடர் முயற்சி: ரஷியா



**கீவ், பிப்.4:**

ஈரான் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இடையே அணுசக்தி விவகாரத்தில் நீடித்து வரும் பதற்றத்தைத் தணிக்க , ரஷியா தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஈரானிடம் இருக்கும் அணுசக்தி மூலப்பொருளான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை, ரஷியாவுக்கே கொண்டு வந்து சுத்திகரிக்கவோ அல்லது பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவோ தாங்கள் தயாராக இருப்பதாக ரஷியா மீண்டும் உறுதியளித்துள்ளது.

இது தொடர்பாக ரஷிய அதிபர் மாளிகையான கிரெம்ளினின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஈரானின் யுரேனியத்தை ரஷியாவுக்கு மாற்றிப் பாதுகாக்கும் திட்டம் நீண்ட நாள்களாகவே ஆலோசனையில் உள்ளது. ஈரான் மீது சில நாடுகளுக்கு உள்ள கவலைகளைப் போக்கவே இந்த யோசனையை ஒரு தீர்வாக ரஷியா முன்வைக்கிறது.

இப்போதுள்ள சூழலில், இதில் சம்பந்தப்பட்ட ஈரான், அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளுடனும் நாங்கள் பேசி வருகிறோம். மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றத்தைக் குறைத்து, அமைதியை நிலைநாட்ட எங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றார்.

# சீனாவின் முன்னாள் நீதித்துறை அமைச்சருக்கு ஆயுள் சிறை: ஊழல் வழக்கில் தண்டனை

அதிகார துஷ்பிரயோகம் மற்றும் வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்தது தொடர்பான வழக்கில், சீனாவின் முன்னாள் நீதித்துறை அமைச்சர் டாங் யிஜுனுக்கு (64) ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 முதல் 2023 வரை சீனாவின் நீதித்துறை அமைச்சராகப் பணியாற்றிய இவர், தனது பதவிக்காலத்தில் பல்வேறு நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்கவும், வங்கி கடன் பெற்றுத் தரவும் சுமார் 13.7 கோடி யுவான் லஞ்சம் பெற்றாகப் புகார் எழுந்தது. இக்குற்றச்சாட்டை புஜியான் மாகாண நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பின் மூலம் டாங் யிஜுன் தனது அரசியல் உரிமைகளை வாழ்நாள் முழுவதும் இழக்கிறார். மேலும், சட்டவிரோதமாகச் சேர்த்த அவருடைய சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீன அதிபர் ஷி ஜின்பிங் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய பிறகு, அந்நாட்டில் உயர் பதவியில் இருந்த ஒருவர் தண்டிக்கப்படுவது இது முதல்முறையல்ல என்றாலும், நீதித்துறை அமைச்சராக இருந்தவரே தண்டிக்கப்பட்டிருப்பது கவனம் ஈர்த்துள்ளது.

# அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரியை சந்திக்கும் ஜெய்சங்கர்

**வாஷிங்டன், பிப்.4:**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் வரி விதித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதையடுத்து வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இருநாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

இதனிடையே, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை 18 சதவீதமாக குறைத்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனால், இரு நாடுகளுக்கும் இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், 3 நாட்கள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் அமெரிக்கா சென்றுள்ளார். அவர் இன்று அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மார்கோ ருபியோவை சந்திக்கிறார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தக ஒப்பந்தம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். ஜெய்சங்கரின் அமெரிக்க பயணத்தின்போது அரிய வகை கனிமங்கள் தொடர்பான முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆசன வாயில் வெடிகுண்டுடன் வந்த நபர்..பயத்தில் அலறி அடித்து ஓடிய நோயாளிகள்

**பாரீஸ், பிப்.4:**

தேங்காயில் பாம் வச்சுட்டாங்களென்று ஒரு படத்தில் கவுண்டமணி பேசுவார். அதுவரை அறியப்படாத விஷயம் என்பதால் அந்த டயலாக் ரொம்பவே பாப்புலர் ஆனது. அதேபோல இப்போது யாரும் இதுவரை கேள்விப்படாத வகையில் மிக விநோதமான முறை ஒன்று பிரான்ஸ் நாட்டில் அரங்கேறி உள்ளது.

பிரான்ஸ் நாட்டில் ஆசனவாயில் வெடிகுண்டு ஒன்றுடன் மருத்துவமனைக்கு நுழைந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 31-ம் தேதி இரவு, அந்நாட்டின் டுலோன் நகரில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு வந்த 24 வயது இளைஞர் ஒருவர் கூறிய வார்த்தையால் சில நொடிகளில் மருத்துவமனையே பரபரப்பானது.

தனது ஆசனவாயில் ஒரு பொருளை நுழைத்ததாகவும், அதை திரும்ப எடுக்க முடியவில்லை எனவும் அவர் கூற, அது என்ன பொருள் என பரிசோதித்த டாக்டர்கள் ஒரு நிமிடமே அதிர்ச்சி அடைந்தனர்.

உடனே பதறிப்போன டாக்டர்கள் அருகில் உள்ள போலீசாருக்கு தகவலளிக்க, சிறிது நேரத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் மருத்துவமனைக்குள் நுழைந்தனர். குழந்தைகள், பெரியவர்கள் மற்றும்




நோயாளிகள் என அனைவரும் உடனடியாக வெளியேற்றப்பட்டார்கள்.

பிரச்சினைஎன்னவென்றால், அந்தநபர் அந்த வெடிகுண்டை எளிதாக ஆசனவாயில் நுழைத்துவிட்டார். ஆனால், அதை எளிதாக வெளியே எடுக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அறுவைசிகிச்சை நிபுணர்கள் அந்த நபரின் அடிவயிற்றில் அறுவை சிகிச்சை செய்துதான் அந்த வெடிகுண்டை வெற்றிகரமாக அகற்றினர்.

ஆசன வாய்க்குள் முதல் உலக போரின்போது பயன்படுத்தபட்ட 8 அங்குல நீளம் கொண்ட பீரங்கி குண்டு இருந்ததால் மருத்துவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

ஆனால், அவர் எதற்காக அந்த வெடிகுண்டை தனது ஆசனவாய்க்குள் நுழைத்தார் என்பதை கடைசிவரை அவர் கூறவேயில்லையாம் தொடர்ந்து அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர் தற்கொலைபடையை சேர்ந்தவரா? அல்லது பயங்கரவாதிகளுக்கு ஏதேனும் தொடர்பு உள்ளதா? என பல்வேறு கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.